# திருக்கோயில்

ஜூன் 1976 ரூ. 1

COMMISSIONER OF TAMIL NADU
ARCHIVES AND HISTORICAL RESEARCH
1-செப்1976
MADRAS



# மறவாதீர்கள்:

# உங்கள் மகள் ஒருநாள்

# மணமகளாக அமர வேண்டியவள்!



திருமணம் என்றாலே - அதுவும் உங்களது மகளின் திருமணம் என்றால் — செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கினால் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்றோம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது — இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| ரெக்கரிங் டிபாசிட் | 5/- | 375/- | ... |
| | 10/- | 750/- | ... |
| வளரும் மாதச் சேமிப்பு | 5/- | ... | 825/- |
| | 10/- | ... | 1,650/- |

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002

109

முகப்பு :

புகழ்மிக்க கங்கை கொண்ட சோழபுரம் கோயிலின் தோற்றம்.

# திருக்கோயில்

மாலை : 19 18 | நள—ஆனி—ஆடி, ஜூன்—1976 | மணி : 9

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

''திருக்கோயில்'' திங்கள் இதழின் 'சந்தாதாரர்'களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

திரு. ஆணையர்,
*அறநிலைய ஆட்சித் துறை,*
*சென்னை—600 034*

என்னும் முகவரிக்கு ரூபாய் பன்னிரண்டு (12) அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

அந்தந்த வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் சந்தாவைச் செலுத்திச் சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

இதழ்கள் தவறாது கிடைத்திடச் சந்தாதாரர்கள் முழு முகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரி மாற்றத்தை உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

ஆண்டுச் சந்தா ரூ. 12/- தனி இதழ் ரூ. 1/-

## பொருளடக்கம்

1. திருவேட்டீசுவரர் திருக்கோயில் —ஆசிரியர்.
2. திருக்கேதீச்சரம் —ஆசிரியர்.
3. மங்கல வாழ்த்து —ஆசிரியர்.
4. ஆடிக் கிருத்திகை —திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.,
5. வித்தியா விநீத பல்லவேச்சுரம் —திரு. புலவர். சி. ஈ. எஸ். பெருமாள்.
6. கங்கையிற் புனிதமாய காவிரி —திரு. ம. அ. முருகேசன், பி.ஏ., பி.எல்.,
7. எலன்வேல் —கவியோகி சுத்தானந்த பாரதியார்.
8. தியாகேசர் திருவுலா —திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ. எம்.ஓ.எல்.,
9. ஞானசாரம் —ஆசிரியர்.
10. பஞ்சாமிர்தம் —திரு. டி. என். சுகிசுப்பிரமணியன்.
11. நான்முகன் கோயில்கள் —திரு. கே. எஸ். நாகராஜன், எம். ஏ.,
12. மணி மொழிகள் —திருமுருக. கிருபானந்தவாரியார்.
13. தாயுமானவர் —திரு. பி. வெங்கடேசன்.
14. சைவசித்தாந்தப் பெருஞ்சான்றோர் —ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.,


ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

**"என் கடன் பணி செய்து கிடப்பதே"**



158614
சென்னை-600 008.

தமிழ்நாடு ஆளுநர் மேதகு மோகன்லால் சுகாதியா அவர்கள், இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமி கோயிலுக்கு வருகை தந்த பொழுது, அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I. A. S., அவர்கள் மாலை அணிவித்து வரவேற்றல்.



தமிழ்நாடு ஆளுநர் மேதகு மோகன்லால் சுகாதியா அவர்கள், அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், I. A. S., அவர்களுடன், இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமி கோயிலில் வழிபடுதல்

# திருவேட்டீசுவரர் திருக்கோயில்

சென்னை மாநகரில் பற்பல சிறந்த கோயில்கள் உள்ளன. அவைகளுள் திருவல்லிக் கேணிப் பகுதியிலுள்ள திருவேட்டீசுவரர் கோயிலும் ஒன்ருகும். இது பார்த்தசாரதிப் பெருமாள் கோயிலுக்கு வடமேற்கிலுள்ள ஓர் அழகான சிறந்த கோயிலாகும்.

இக்கோயிலிலுள்ள சிவபெருமானுக்கு வேட்டீசுவரன் என்பது பெயர். அதாவது வேட்டுவன் வடிவம் கொண்டு வந்த ஈசுவரன் என்பது பொருள். அருச்சுனன் பாரதப் போரில் வெற்றி பெறுவதற்காகப் பாசுபதாஸ்திரம் பெற விரும்பிக் கடும் தவம் புரிந்தபோது, அவனைக் கொல்வதற்காகத் துரியோதனனின் ஏவலால் பன்றியின் உருவம் கொண்டு தாக்கு வதற்கு வந்த மூகாசுரன் என்பவனை வதைத்து, அர்ச்சுனனைக் காப்பாற்றுவதற்காக வேட்டுவ வடிவம் கொண்டு சிவபெருமான் எழுந்தருளி ஞர். அந்நிலையிலேயே சிவபெருமானுக்கு 'வேட்டீசுவரன்' என்னும் ஒரு பெயர் ஏற்பட் டது.

திருவேட்டீசுவரன் ஆகிய சிவபெருமான் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள காரணம், பற்றி, திருவல்லிக்கேணியின் ஒரு பகுதிக்குத் திருவேட்டீசுவரன்பேட்டை என்னும் பெயர் ஏற்பட்டது. இந்தத் தலம் மிகவும் பழமை யான பாடல் பெற்ற தேவார வைப்புத் தலம்.

''தெண்ணீர்ப் புனற்கெடில வீரட்டமும்
தீக்காலி வல்லம் திருவேட்டியும்,
உண்ணீரார் ஏடகமும் ஊறல் அம்பர்
உறையூர் நறையூர் அரணநல்லூர்
விண்ணுர் விடையான் விளமர் வெண்ணி
மீயச்சூர் வீழிமிழலை மிக்க
கண்ணுர் நுதலார் கரபுரமும்
காபாலியார் அவர்தம் காப்புக்களே.''

என்னும் திருநாவுக்கரசர் திருத்தாண்ட கத்தில், திருவேட்டி (திருவேட்டீச்சுரன் பேட்டை) என்று பாடப் பெற்றிருப்பது, இத் தலத்துத் திருக்கோயிலேயாகும். இதனல் இத் தலத்தின் பழமையும் பெருமையும் இனிது விளங்கும்.

இக்கோயிலிலுள்ள இலிங்கம், ''பார்த்தப் பிரகரலிங்கம்'' என்று சிறப்பித்துச் சொல்லப் படுவதாகும். பாரதப்போரில் வெல்வதற்காகப் பாசுபதாஸ்திரம் வேண்டித் தவம் புரிந்தான் பார்த்தன். அப்போது வேட்டுவ வடிவத்தில் வந்த சிவபெருமான், தமது அருள் விளையாட லாக, பார்த்தனை (அருச்சுனனை) வலிந்து போருக்கு அழைத்தார். வந்திருப்பவர் யாரென்று அறியாத பார்த்தன், வேட்டுவன் என்று தவருகக் கருதித் தனது வில்லால் சிவபெருமானின் தலையில் ஓங்கி அடித்தான்.

விண்ணிலுறை வானவரில் யாரடி படாதவர்?
விரிஞ்சன் முதலோர் உததிசூழ்
மண்ணிலுறை மானவரில் யாரடி படாதவர்?
மனுக்கள் முதலோர்கள் அதலக்
கண்ணிலுறை நாகர்களில் யாரடி படாதவர்கள்?
கட்செவி மகிபன் முதலோர்
எண்ணில்பல யோனியினும் யாவடி படாதன?
இருந்துழி இருந்துழி யரோ.

வேதம் அடி யுண்டன; விரிந்தபல ஆகம
விதங்கள்அடி யுண்டன்; ஓர்ஐம்
பூதம்அடி யுண்டன; விநாழிகை முதற்புகல்செய்
பொருளோடு சலிப்பில் பொருளின்
பேதம் அடி யுண்டன; பிறப்பிலி இறப்பிலி
பிறங்கல் அரசன்றன் மகளார்
நாதன்அம லன்சமர வேடவடி வங்கொடு
நரன்கைஅடி யுண்ட பொழுதே

என்று வில்லிபுத்தூராழ்வார், மகாபாரதத்திற் பாடியிருப்பதுபோல, அவ்வடி பார்த்தன் மீதும், அகில உலகங்களிலுள்ள அனைத்துயிர்களின் மீதும் பட்டது. அந்த அடியினுல் ஏற்பட்ட தழும்பை அடையாளமாகக் கொண்டதே, பார்த்தப் பிரகரலிங்கம் என்று சிறப்பித்துச் சொல்லப் பெறும். இவ்வமைப்பையுடைய சிவ லிங்கத் திருமேனிகள் பெரியோர்களால் மிகவும் சிறப்பித்துப் போற்றிப் புகழ்ந்து கூறப்படும்.

திருவேட்டீச்சுவரன் பேட்டைக் கோயிலி லுள்ள சிவலிங்கம் 'பார்த்தப் பிரகரலிங்கம்' என்னும் திருநாமத்தைக் கொண்டது! ஆதலின் இது மிகவும் தெய்வீகச் சிறப்பு வாய்ந்த தாகும். இக்கோவிலிலுள்ள சிவலிங்கப் பெரு மானின் திருமுடியில், இதற்கொரு அடையாள மாக, ஒரு தழும்புப் பிளவு இருத்தலை, இன்றும் யாவரும் காணலாம்.

இக்கோயிலுக்குரிய பலதிறப் பெருமை களுள், ஒன்றை இங்குச் சிறப்பாகக் குறிப்பிடு தல் தகும். தமிழ்த் தாயின் தவப் புதல்வ ராகத் தோன்றி, நம் தமிழ் மொழிக்கு ஈடு இணையற்ற இனியபல பெருந்தொண்டுகளைச் செய்து, தமிழைப் பெரிதும் வளர்த்தருளிய சான்ருேர் பெருந்தகையாகிய தமிழ்த் தாத்தா,

மகா மகோபாத்தியாய டாக்டர் திரு உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள், இப்பேட்டையில் வாழ்ந்துவந்த தோடன்றி, இக்கோயிலை நாள் தோறும் காலையிலும் மாலையிலும் முறையாகப் போற்றிப் பல்லாண்டுகள் வழிபட்டு மகிழ்ந் திருக்கின்றார்கள். பண்டைக் காலத்தில் தேவர் களும் முனிவர்களும் சில தலங்களைப் போற்றி வழிபட்ட செய்திகளைச் சமய நூல்கள் சாற்று கின்றன. அந்நிலையில் நமது தமிழ்த் தாத்தா அவர்கள், பல ஆண்டுகள் போற்றி வழிபட்டு வந்தமை, நமக்கு இக்கோயிலின் அருமை பெருமைகளை விளக்கப் போதியதாகும்.

தென்கலைச் செல்வர் சிறந்தபெரும் பேரறிஞர்
நன்குயர்உ. வே.சாமி நாதையர்தாம்—அன்புமிகு
நற்றிருவேட் டீச்சுரரை நாளும்நனி போற்றினரேல்
உற்றஅக்கோ யிற்குண்டோ? ஒப்பு. —ந. ரா. மு.

இத்தகைய பலதிறச் சிறப்புகள் வாய்ந்த திருவேட்டீசுவரர் கோவிலின் இராஜகோபுரத் திருப்பணி நிறைவுபெறும் தருவாயில் உள்ளது. திருவேட்டீசுவரர் திருவருளை முன்னிட்டு எஞ்சி யுள்ள திருப்பணிகளை நிறைவு செய்து, வருகிற ஆவணித் திங்கள் 20-ஆம் தேதி (5-9-1976) கும்பாபிஷேகம் செய்யலாம் என்ற குறிக் கோளுடன் திருப்பணிக் குழுவினர் ஈடுபட்டு, உரிய வழி வகைகளில் கவனம் செலுத்தி வருகின்றார்கள். நடக்க வேண்டிய திருப்பணி கள் வருமாறு:—

1. ஈசுவரர் கர்ப்பக்கிரகத்தில் சலவைக் கற்கள் பதித்தல்
2. ஆறுமுகசுவாமி கோவிலில் முக்கிய மான பூச்சுவேலைகள் முதலியன.
3. மின்சார வசதிகளைப் புதுப்பித்தல்
4. மடைப்பள்ளி, யாகசாலை முதலிய வற்றைப் பழுதுபார்த்தல்
5. துவஜஸ்தம்பம்-புனர் உத்தாரணம்
6. கோபுர வாசல் கதவுகள்
7. இராஜகோபுரம் வர்ணப்பூச்சு
8. விமானங்கள் செப்பனிடுதல்
9. கற்றூண்கள், தரை சுத்தம் செய்தல்
10. வெள்ளையடித்தல், வர்ணம் பூசுதல் முதலியன.

இதுவரை திருப்பணி வகைச் செலவு ரூ. 90,000/- ஆகியுள்ளது. மேலே குறித்த இனங் களுக்கு உத்தேசச் செலவு ரூ. 45,000/- இதனின் வேறாகத் தனியே கும்பாபிஷேகச் செலவும் இருக்கின்றது.

இந்தப் பேட்டை சென்னை நகரத்திற்கே நடு நாயகமாக விளங்குகிறது. ஆதலின் இந்த ஆலயத் திருப்பணி இன்றியமையாதது. இங் கும் திருவல்லிக்கேணியிலும் பல்லாண்டுகளுக்கு முன்பு வசித்தவர்கள், இப்பொழுது நகர வளர்ச்சி காரணமாக, நகர்ப்புறத்தே குடியேறி உள்ளார்கள். அவர்கள் எல்லோரும் தங்கள் தங்களால் இயன்ற அளவில் திருப்பணிக்கு உதவ வேண்டப்படுகின்றனர். பேட்டையின் பழைய வாசிகளின் புதிய முகவரிகளை அன்பர் கள் தெரிவிக்கக் கேட்டுக் கொள்ளப் பெறு கின்றனர்.

கோபுரக் கலசங்கள், அம்மன் கர்ப்பக் கிரகம், விமானம், இவை சம்பந்தமான திருப் பணிகளைச் சிலர், தனித்தனியே பொறுப் பேற்றுக்கொண்டு, செய்து வருகிறார்கள். கும்பாபிஷேகத்தைக் குறிப்பிட்ட தேதியில் நடத்தத்திட்டமிட்டிருப்பதால், மிக விரை வில் அன்பர்கள், எல்லா வகையிலும் தீவிர முயற்சி எடுத்துக் கொண்டு ஒத்துழைக்கவும், நன்கொடைகளை ஆலயத்தில் செலுத்தி இரசீது பெற்றுக்கொள்ளவும் வேண்டப்படுகின்றனர்.

—ஆசிரியர்

அடுத்துஆனை உரித்தானை,
அருச்சுனற்குப் பாசுபதம்
கொடுத்தானைக், குலவரையே
சிலையாகக் கூர்அம்பு
தொடுத்தானைப் புரம்எரியச்
சுனைமல்கு கயிலாயம்
எடுத்தானைத், தடுத்தானை
என் மனத்தே வைத்தேனே!

—திருநாவுக்கரசர்.

## மதிப்புரை

### (1) தெய்வத் திருவுருவங்கள் :

நமது தமிழ் நாட்டுக் கோயில்களிலுள்ள விநாயகர் முருகர் சிவபிரான் அம்பிகை முதலிய பல்வேறு தெய்வங்களைப் பற்றிய சிறப்புக்களையும், தத்துவங்களையும் விளக்குவது. ''திருக்கோயில்'' ஆசிரியர் திரு ந. ரா. முருகவேள் அவர்கள் எழுதியது. பக்தர்களுக்குப் பெரிதும் பயன்படும்.

### (2) இலக்கணத்தில் எழிற் கற்பனைகள் :

தமிழ் இலக்கணக் கருத்துக்களும், குறியீடுகளும், இலக்கியங்களில் கவிஞர்களால் மிகவும் சுவைமிக்க கற்பனைகள் அமைய, எடுத்தாளப் பெற்றுள்ள திறனை விளக்கும் சிறந்த பயன்மிக்க நூல். ''திருக்கோயில்'' ஆசிரியர் திரு ந. ரா. முருகவேள், அவர்கள் எழுதியது. இவ்விரு நூல்களும் கிடைக்குமிடம்: ''தணிகைப் பதிப்பகம், 203, தம்புச் செட்டித் தெரு, சென்னை-1.''.

### (3) கல்விச் செல்வம் :

கல்வியின் சிறப்புப் பற்றிப் பண்டைக் கால-இடைக்கால-தற்கால இலக்கியங்களில் இருந்தும், சான்றோர்களும் அறிஞர்களும் அவ்வப்போது அருளிய பொருள் மொழிகளில் இருந்தும், அரிய பல சுவைமிக்க பாடல்களும், பழமொழிகளும், சான்றுகளும் இதன்கண் தொகுக்கப்பட்டுள்ளன. இதன் ஆசிரியர் திரு த. கோவேந்தன் அவர்கள், நல்ல கவிஞர், சிறந்த புலவர். விலை ரூபாய் 2. கிடைக்கும் இடம் : ''வண்ணக் களஞ்சியம்'', 165, லாயிட்ச் சாலை, இராயப்பேட்டை, சென்னை-14.

# திருக்கேதீச்சரம்

விருது குன்ற மாமேரு வில்
நாண்அரவா அனல்எரிஅம்பால்
பொருது மூவெயில் செற்றவன்
பற்றிநின் றுறைபதி, எந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற்
கடிகமழ் பொழில்அணி மாதோட்டம்
கருத நின்ற கேதீச்சரம்
கைதொழக் கடுவினை அடையாவே

—சம்பந்தர்.

**சிவத்தலம் :**

தேவாரப் பாடல் பெற்ற சிவத் தலங்கள் பலவற்றுள், ஈழ நாட்டில் உள்ள திருக்கேதீச்சரம், திருக்கோணமலை என்னும் இரண்டும், குறிப்பிடத்தக்க மிக்க பெரும் சிறப்புடையனவாகும். இவ்விரண்டனுள், இலங்கைத் தீவின் கிழக்குக் கடற்கரையில் உள்ள திருக்கோணமலை, இலங்கையை அரசு புரிந்த இராவணன் வழிபட்ட சிறப்புடையது. இராவணனின் மாமனாகிய மயன் என்பவன் கட்டி அமைத்த திருக்கோயிலே, திருக்கேதீச்சரம் எனப்படுகின்றது. இது தலைமன்னாருக்குக் கிழக்கே ஐந்து கல் தொலைவில் உள்ளது. நவக்கிரகங்களுள் ஒன்றாகிய கேது என்னும் பாம்பரசன் வழிபட்டு அருள் பெற்றதனால், இத்தலத்திற்குக் கேதீச்சரம் என்னும் பெயர் வழங்குவதாயிற்று.

**மாதோட்டம் :**

இலங்கைத் தீவின் முக்கிய பட்டணமாகவும், ஏற்றுமதி இறக்குமதி செய்யும் வசதிகள் உள்ள நகரமாகவும், கீழைத்தேசமேலைத்தேசக் கப்பல்கள் வந்து தங்கிச் செல்லும் மத்தியத் துறைமுகமாகவும், பல தேச வர்த்தகர்கள் வந்து இறங்கிப் பண்டங்கள் கொண்டு கொடுக்கும் துறைமுகமாகவும் உள்ள மாதோட்டம் என்னும் எழில் மிகுந்த நகர்ப் பகுதி ஒன்று உள்ளது. மகாதுவட்டா என்னும் அரசன் பூசித்ததனால் ''மகாதுவட்டாபுரம்'' எனப் பெயர் பெற்றிருந்த இந்நகரம், இடைக்காலத்தில் ''மாதோட்டம்'' என மருவி வழங்குவதாயிற்று. மாதோட்டம் என்னும் இந்நகரின் சிறப்பைத் தட்சிண கைலாசபுராணம் மிகவும் விரித்துரைக்கின்றது.

இதனைத் திருஞான சம்பந்தப் பெருமான், கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலேயே ''மாதோட்ட நன்னகர்'' என்று சிறப்பித்துக் குறிப்பிட்டுள்ளார். அவருக்குப் பின் வந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளும், தம்முடைய தேவாரப் பாடல்களில், இம்மாதோட்ட நகரத்தினைப் புகழ்ந்து பாடியிருக்கக் காண்கின்றோம். இங்கே பாலாவி என்னும் ஒரு சிறந்த புண்ணிய நதி ஓடுகின்றது. அதன் கரையில்தான், திருக்கேதீச்சரம் அமைந்துள்ளது.

''கடிகமழ் பொழில்அணி மாதோட்டம்
கருத நின்ற கேதீச்சரம்
கைதொழக் கடுவினை அடையாவே'' (1)

''கடற்கரையினில் எழில்திகழ் மாதோட்டம்
கேடிலாத கேதீச்சரம் தொழுதெழக்
கெடும் இடர்வினை தானே'' (2)

''கேதீச்சரம் அடைபவர்க்கு
அருவினை அடையாவே'' (3)

''தொண்டர் நாள்தொறும் துதிசெய அருள்செய்
கேதீச்சரம் அதுதானே'' (4)

என்று திருஞான சம்பந்தப் பெருமான், இத்தலத்தினைப் பலவாறு புகழ்ந்து போற்றியுள்ளார். இவ்வாறே சுந்தரமூர்த்தி சுவாமிகளும்,

''படவேரிடை மடவாளொடு
பாலாவியின் கரைமேல்
திடமா உறைகின்றான்
திருக்கேதீச் சரத்தானே'' (1)

''பாவம் வினையறுப்பார் பயில்
பாலாவியின் கரைமேல்
தேவன் எனையாள்வான்
திருக்கேதீச் சரத்தானே'' (2)

என்றெல்லாம் தமது தேவாரத் திருப்பாடல்களில் பெரிதும் அன்புடன் வியந்து போற்றி, இத்தலத்தினைப் புகழ்ந்து பாடியிருக்கின்றார்.

**திருக்கேதீச்சரம் :**

திருக்கேதீச்சரம், தன்னிடத்தே இறந்தவர்களுக்குச் சிவபிரான் பிரணவ உபதேசம் செய்யும் சிறப்பு மிக்கது. சேது மத்தியத் தலமாக விளங்குவது. இங்குப் பாலாவி நதியின் கரையில் பிதிரர்களை நினைந்து பிண்டமிட்டுச் சிராத்தம் செய்பவர்களுக்குக் கயா சிராத்த பலன் (வடக்கே கங்கை நதிக் கரையில் உள்ள கயை என்னும் இடத்தில் சிராத்தம் செய்பவர்கள் அடையும் பலன்) கிடைக்கும்படி செய்யும் தெய்வீக நலம் பெற்றது. இராமபிரான் இராவணனை வென்று அயோத்திக்கு மீளும் வழியில், இத்தலத்தை வழிபட்டு மகிழ்ந்தார். பஞ்ச பாண்டவர்களுள் ஒருவனாகிய பார்த்தன் (அருச்சுனன்), தீர்த்த யாத்திரையை மேற்கொண்டு இலங்கைக்கு வந்தபொழுது, திருக்கேதீச்சரத்தையும் வழிபட்டு இன்புற்றான். இங்கேதான் அருச்சுனன், மாதோட்ட நகருக்கு

அருகில் இருந்து கொண்டு அரசு புரிந்து வந்த ராணி என்னும் நாக கன்னிகையைச் சந்தித்துக் காதலித்து மணம் புரிந்து கொண்டான் என்பது ஐதிகம்.

தமிழ் முனிவராகிய அகத்தியர் முதலிய முனிவர்களும், இங்குத் தவம் செய்து அருள் பெற்றனர். திருவாசகத்தில் மணிவாசகர், சிவபெருமான் இராவணனின் மனைவியாகிய மந்தோதரி (மண்டோதரி, வண்டோதரி) என்பவளுக்கு அருள் புரிந்ததாகத் தமது திருவாசகத்தில் குயில் பத்திலும், திருவார்த்தையிலும் குறிப்பிடும் திருவிளையாடல், இந்தத் திருக்கேதீச்சரம் என்னும் தலத்திலேயே நிகழ்ந்தது என்றும்; அவளுடைய தந்தையும் இராவணனின் மாமனுமாகிய மயன் என்பவன் வாழ்ந்த இடமே மாதோட்டம் என்றும், அறிஞர்கள் கூறுவர். இத்தகைய பல பழமையும் பெருமையும் மிக்க திருக்கேதீச்சரம் என்னும் புகழ்மிக்க ஈழநாட்டுத் தலத்தில், சிவபெருமான் திருக்கேதீச்சரர் (திருக்கேதீச்சுவர நாதர்) என்னும் பெயருடன், கௌரியம்பாள் சமேதராகத் திடமாகவும் சிறப்பாகவும் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருந்து அருள் வழங்கி வருகின்றார். நாகர்கள் என்னும் நாகரிகம் மிக்க ஒருவகைப் பழங்குடி மக்கள், முற்காலத்தில் வழிபட்டு வந்ததனால் ''நாகநாதர்'' என்றும், இங்குள்ள பெருமானுக்குப் பெயர் வழங்கும்.

**சிவாலயச் சிதைவு :**

தமிழகத்துச் சோழ பாண்டிய அரசர்களும், இலங்கை யாழ்ப்பாண வன்னி நாட்டு மன்னர்களும், பலவகைத் திருப்பணிகள் செய்து பல நூற்றாண்டுகளாகப் போற்றி வந்ததும், பண்டைக்காலந் தொட்டு மிகவும் புகழ்பெற்று விளங்கியிருந்ததும் ஆகிய திருக்கேதீச்சரம் என்னும் இக்கோயில், சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு, இருந்த இடமும் தெரிய வழியின்றி, எவ்வாறோ சிதைந்து அழிந்துபோயிற்று. கடல்கோள், படையெடுப்பு, அயலவர் அழிப்பு முதலிய, எத்தனையோ பல காரணங்களால், இவ்வழிவு நேர்ந்திருக்கலாம். எனினும் சமீபகாலத்தில் போர்த்துகீசியரும், டச்சுக்காரரும், இதன் அழிவுக்குப் பெரிதும் காரணமாக இருந்தனர் என்று சரித்திரம் உணர்த்துகின்றது. கோயிலோ திருவுருவமோ பூசையோ யாதொன்றுமின்றி, மூன்று முழு நூற்றாண்டுகளுக்கு மேலான காலம், தமிழ் வேதமாகிய தேவாரத் திருமுறைகளில் மட்டுமே, கேதீச்சரப் பெருமான் உறைந்திருந்தார்!

**திருப்பணியும், கும்பாபிஷேக விழாவும் :**

இந்நிலைக்கு உள்ளாகியிருந்த இத்தலத்தின் பழைய இடத்தைக் கண்டறிந்து, அங்குக் கோயில் எடுப்பித்துப் பழைமையை நிலைநாட்ட வேண்டும் என்ற முயற்சியில் முதன் முதல் ஈடுபட்டவர், யாழ்ப்பாண நல்லார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் அவர்களேயாவர். ''தலைமன்னாருக்குச் சமீபத்தில் உள்ள மாதோட்டத்தில் திருக்கேதீச்சரம் என்னும் தேன் பொந்து ஒன்று உள்ளது. அங்கு மருந்தொன்று மறைந்திருக்கின்றது. அதனைத் தேடிக் கண்டு சென்று அடையுங்கள்'' என்று, அவர்கள் 1872-ஆம் ஆண்டில் வேண்டுகோள் ஒன்று விடுத்தார்கள். பின்னர் 13—12—1893-இல், நாட்டுக்கோட்டை நகரத்துச் சைவப் பெரியார் திரு. ராம. அரு. அரு. பழனியப்பச் செட்டியார், பழைய கோயில் இருந்த இடத்தோடு கூடிய 44 ஏக்கர் காட்டு நிலத்தைச் சைவ மக்களின் சார்பில் விலைக்கு வாங்கினார். வண்ணை சி. த. மு. பசுபதிச் செட்டியார் (1894), ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் (1948), சேர் கந்தையா வைத்தியநாதன் (1957), திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையார் ஆகியோர், அவ்வப்போது தொடர்ந்து பல திருப்பணி முயற்சிகளைச் செய்து வந்தனர். 1903—1910—1952—1960 ஆகிய ஆண்டுகளில் கும்பாபிஷேக விழாக்கள் நிகழ்ந்துள்ளன.

தற்போது சுவாமி அம்பாள் கோயிற் கருவறைகள், அர்த்த மண்டபம், விமானம், இராச கோபுரம், விநாயகர் முதலிய பரிவார கோட்டங்கள் பலவும், மலேசியா சிங்கப்பூர் தமிழ்நாடு எங்கணுமுள்ள அன்பர்களின் உதவியால், பெரும் பொருட் செலவில் திருப்பணிகள் செய்யப் பெற்று, நள ஆண்டு ஆனி மாதம் 21 (4—7—76) ஞாயிறன்று காலை (9.02—11.02), அத்த நட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய சிம்ம நல்லோரையில், கும்பாபிஷேக விழா, மிகச் சிறப்பாக நிகழ்த்தப் பெற்றது. வளர்க, பொலிக திருக்கேதீச்சரம்!

—**ஆசிரியர்.**

கறையார் கடல்சூழ்ந்த
கழி மாதோட்ட நன்னகருள்,
சிறையார் பொழில் வண்டு யாழ்
செயும் கேதீச் சரத்தானை,
மறையார்புகழ் ஊரன்
அடித்தொண்டன் உரைசெய்த,
குறையாத் தமிழ் பத்தும்சொலக்
கூடா கொடுவினையே

—சுந்தரர்.

# மங்கல வாழ்த்து

முன்னுரை :

'மங்கல வாழ்த்து' என்னும் சொற்றொடர் முதன் முதலாகச் சிலப்பதிகாரத்தில், அதன் பாயிரப் பகுதியில் பயின்று வந்துள்ளது. சிலப்பதிகாரத்தின் முதல் தொடக்கப் பகுதிக்கு ''மங்கல வாழ்த்துப் பாடல்'' என்பது பெயர். மங்கலம் என்பது திருமணம். கோவலன் கண்ணகி என்னும் இருவருக்கும் நிகழ்ந்த திருமணத்தின்கண், மகளிர் பலர்சேர்ந்து வாழ்த்திப் பாடும் செய்தியினைக் கூறுதலால், இப்பகுதிக்கு மங்கல வாழ்த்துப் பாடல் என்று பெயர் அமைந்தது. ஆனால் இங்கு மேற்குறித்துள்ள தலைப்பின் தொடர், இப்பொருளில் வந்தது அன்று. இது வேறு ஒரு இலக்கணம் சுட்டுதற்கு வந்தது.

சிறந்த பெரு நூல்களின் தொடக்கத்தில் வரும் காப்புச் செய்யுட்கள், வாழ்த்து வணக்கம் வருபொருள்உரைத்தல் என மூவகைப் படும். இவற்றை முறையே ஆசி, நமஸ்காரம், வஸ்துநிர்த்தேசம் என்பர். இவற்றுள் வஸ்து நிர்த்தேசம் என்பதே, மங்கல வாழ்த்து எனத் தமிழில் வழங்கப்படுகின்றது. ஒரு நூலின்கண் சொல்லப்படும் பொருளின் இயல்புகளையெல்லாம் ஒரு வகையில் குறிப்பினால் தன்னிடத்தே அடக்கி நின்று தொடக்கத்திலேயே நுண்ணிதிற் புலப்படுத்தி அறிவுறுத்தும் செய்யுள்தான், மங்கல வாழ்த்து எனச் சிறப்பித்து உரைக்கப் படும்.

## (1) சிவஞான போதம் :

ஆசிரியர் மெய்கண்டார் பெருமான் அருளிய சிவஞானபோதத்தில் வரும்

''கல்லால் நிழல்மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே''

என்னும் கடவுள் வாழ்த்துச் செய்யுள், அன்பர்கள் அனைவரும் அறிந்ததொன்று. அதனை மங்கல வாழ்த்துச் செய்யுள் என்றும், 'நால்நுதல் பொருளெல்லாம் குறிப்பால் தன்னகத்து அடக்கிநிற்றல் மங்கல வாழ்த்துக்கு இலக்கணம்' என்றும் குறிப்பிட்டு, ஆசிரியர் மாதவச் சிவஞான யோகிகள், அதன் குறிப்புப் பொருள் நுட்பங்களைப் பிறர் எவரும் இதற்கு முன்னர் ஒரு சிறிதும் உணர்த்தாத வகையில், அழகுற எடுத்து விளக்கியருள்கின்றார்.

(1) இச்செய்யுள், கல் என்பது முதல் ஏ என்பது வரையில் பன்னிரு சொற்களால் கூறவே, இந்நூல் பன்னிரு சூத்திரங்களால் செய்யப்பட்டது.

(2) மும்மூன்று சொற்கள் ஒவ்வோர் அடியாக வைத்து நான்கு அடியாகக் கூறவே, இந்நூலும் மும் மூன்று சூத்திரம் ஒவ்வோர் இயலாக வைத்து நான்கு இயலால் செய்யப்பட்டது.

(3) இவற்றுள் முன்னிரண்டடியும் ஒரு வினைமுடிவும், பின் இரண்டு அடியும் பிறிதோர் வினைமுடிவுமாக இரு வகைப்படும்படி செய்யவே, முன் ஆறு சூத்திரமும் ஓர் அதிகாரமும், பின் ஆறு சூத்திரமும் ஓர் அதிகாரமும் ஆக, இந்நூல் பொதுவதிகாரம் சிறப்பதிகாரம் என இரண்டு அதிகாரத்தால் செய்யப்பட்டது.

(4) இரண்டாம் பகுதியின் முதற்சூத்திரம் 'இருவும் அது' என முதற் பகுதியின் இறுதிச் சூத்திரத்தோடு மாட்டெறியப்படும் என்பது உணர்த்துதற்கு 'மலைவு' என்பது, ஈரடியிலும் சார அமைந்தது.

(5) கல்லால் நிழல் என இடம் கூறவே, முதற் பகுதி பிரமாணம் கூறுவது.

(6) இரண்டாம் அடியில் 'மலைவில்லார் அருளிய' எனச் செய்கை கூறவே, இரண்டாம் பகுதி இலக்கணம் கூறுவது.

(7) மூன்றும் அடியில் 'பொல்லார் இணை மலர்' எனத் திருவடி கூறவே, மூன்றும் பகுதி சாதனம் கூறுவது.

(8) நான்காம் அடியில் 'நல்லார் புனைவர்' எனக் கூறவே நான்காம் பகுதி பயன் கூறுவது.

## (2) சிவஞான சித்தியார் :

என்று இங்ஙனம் பலவகை நுட்பக் குறிப்புக்கள், இச்செய்யுளின்கண் செவ்விதின் அமைந்திருப்பதாக, மாதவச் சிவஞானசுவாமிகள் நுண்ணிதின் விளக்கி மகிழ்விப்பர். இவ்வாறே அவர், சிவஞான போத முதல் நூலின் வழி நூலாக ஆசிரியர் அருள்நந்தி சிவனர் இயற்றியருளிய சிவஞான சித்தியார் சுபக்கப் பகுதியின்கண் வரும்

''அறுவகைச் சமயத் தோர்க்கும்
அவ்வவர் பொருளாய், வேறும்
குறியது உடைத்தாய், வேதா
கமங்களின் குறியிறந் தங்கு,
அறிவினில் அருளான் மன்னி
அம்மையோ டப்ப ஞகிச்
செறிவொழி யாது நின்ற
சிவனடி சென்னி வைப்பாம்''

என்னும் செய்யுளுக்கும், மங்கலவாழ்த்துப் பொருள் நுணுக்கங்களை விளக்கியிருக்கின்றார்.

''(1) 'அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய்' எனவே மேற்கூறிப் போந்த பரபக்கத்துப் பொருளும், (2) 'வேறுங்குறியதுவுடைத்தாய்' எனவே முதற் சூத்திரம்முதலிய ஐந்து சூத்திரத்திற் பெறப்படுந் தடத்தப் பொருளும், (3) 'வேதாகமங்களின் குறியிறந்து' எனவே இரண்டும் அன்றி ஏனைச் சொரூபலக்கணங்கூறும் ஆறுஞ் சூத்திரப் பொருளும், (4) 'அறிவினில்' எனவே ஆன்ம சொரூபங் கூறும் ஏழாஞ் சூத்திரப் பொருளும், (5) 'அருளால் மன்னி' எனவே ஞானதரிசனங் கூறும் எட்டாஞ் சூத்திரப் பொருளும், (6) 'அம்மையோடப்பணுகி' எனவே ஞானமும் ஞேயமும்ஞாதிருவுமாகக் காணப்படும் ஒன்பதாஞ் சூத்திரப் பொருளும், (7) 'செறிவொழியாது நின்ற' எனவே ஏகனுகிநிற்றல் கூறும்பத்தாஞ் சூத்திரப் பொருளும், (8) 'சிவனடி சென்னி வைப்பாம்' எனவே அரன் மலரடிக் கிழிருத்தல் கூறும் பதினோராஞ் சூத்திரப் பொருளும், (9) 'சென்னி வைப்பாம்' என்னுஞ் சொல்லியல்பால் அணைந்தோர் தன்மை கூறும் பன்னிரண்டாஞ் சூத்திரப் பொருளுங் குறிப்பான் அறியக் கிடந்தன. இங்ஙனம் தொகுத்துக் காட்டுதல் மங்கல வாழ்த்துக்கு இலக்கணம் எனவுணர்க'' என்பது, சிவஞான சுவாமிகள் செய்தருளிய விளக்கவுரை.

## (3) பெரிய புராணம் :

இங்ஙனம் அவர் விவரித்து விளக்கும் வகையில், அப்பாடல்களை முறையே ஆசிரியர் மெய்கண்டாரும், அருள்நந்திசிவமும் அழகுற அமைத்து அருளியுள்ளனர். இவ்வாறு அமைக்கும் அரிய திறமையினை அவர்களுக்கு ஒரு வகையில் அறிவுறுத்தியருளியவர், சேக்கிழார் பெருமானேயாவர் எனத் துணிந்து கூறலாம்.

> ''உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
> நிலவு லாவிய நீர்மலி வேணிய(ன்)
> அலகில் சோதிய(ன்) அம்பலத் தாடுவான்
> மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்''

எனவரும் பெரிய புராணப் பாடலில், பல அரிய நுண்பொருட் குறிப்புக்கள் அழகுற அமைந்துள்ளன. இவ்வருட் பெரும் பாடலில்,

| | | | |
|---|---|---|---|
| 1. | உலகு | 8. | சோதியன் |
| 2. | எலாம் | 9. | அம்பலம் |
| 3. | அரியவன் | 10. | ஆடுவான் |
| 4. | நிலவு | 11. | மலர் |
| 5. | நீர் | 12. | சிலம்பு |
| 6. | வேணியன் | 13. | அடி |
| 7. | அலகு | | |

எனப் பதின்மூன்று சொற்கள் அமைந்துள்ளன. இக்குறிப்புப் பெரிய புராணம் என்னும் சிறந்த நூலானது, திருமலைச் சருக்கம், தில்லை வாழ் அந்தணர் சருக்கம், இலை மலிந்த சருக்கம், மும்மையால் உலகாண்ட சருக்கம், திருநின்ற சருக்கம், வம்பறு வரிவண்டுச் சருக்கம், வார் கொண்ட வனமுலையாள் சருக்கம், பொய் யடிமை இல்லாச் சருக்கம், கறைக்கண்டன் சருக்கம், கடல் சூழ்ந்த சருக்கம், பத்தராய்ப் பணிவார் சருக்கம், மன்னிய சீர்ச் சருக்கம், வெள்ளானைச் சருக்கம் எனப் பதின்மூன்று சருக்கங்கள் கொண்டு அமைந்திருத்தலை உணர்த்தும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | உலகு | 6. | அலகு |
| 2. | உணர்ந்து | 7. | அம்பலத்து |
| 3. | ஓதற்கு | 8. | சிலம்பு |
| 4. | நிலவு | 9. | எலாம் |
| 5. | உலாவு | | |

எனக் குற்றுகர முற்றுகரங்கள் எட்டும், தொகுத்தல் விகாரம் பெற்ற 'எலாம்' என்னும் சொல்லும் இப்பாடலில் வந்துள்ளன. இது தொகையடியார்கள் ஒன்பதின்மரைக்குறிக்கும்.

இப்பாடலின் நான்கு வரிகளிலும் சேர்ந்து (16—13—16—18), அறுபத்துமூன்றுஎழுத்துக்கள் அமைந்துள்ளன. அஃது இந்நூலில் கூறப்படும் நாயன்மார்களின் தொகை, அறுபத்து மூன்று என்பதனை உணர்த்துகின்றது. இப்பாடல் நான்கு சீர்களில் நான்கு வரிகளாக அமைந்திருப்பது, மந்ததரம் மந்தம் தீவிரம் தீவிரதரம் என்னும் நான்கு வகைச் சத்திநிபாதநிலைகளையும்; சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு வகை நெறிகளையும் உணர்த்துகின்றது எனக் கொள்ளலாம்.

சிவபெருமான், சொரூபம் தடத்தம் என இரண்டு நிலைகளில் விளங்குகின்றார். சொரூபநிலையானது அவருக்கே உரிய தனிச் சிறப்பு நிலை. தடத்த நிலையென்பது உயிர்களின் பொருட்டு அவர் மேற்கொள்ளும் நிலை. அஃது இலயம், போகம், அதிகாரம் என மூன்று வகைப்படும். ஆக இந்நான்கு வகை நிலைகளிலும் இறைவன் விளங்குகின்றான் என்பது நூல்களின் விளக்கம். இந்நான்கு வகை நிலைகளும் பின்வருமாறு இப்பாடலில் குறிக்கப்பட்டுள்ளன. 'உலகெலாம் உணர்ந்தோதற்கு அரியவன்' என்றதனால் சொரூப சிவ இயல்பும்; 'அலகில் சோதியன்' என்றதனால் தடத்த இலய சிவ இயல்பும் ; 'அம்பலத்து ஆடுவான்' என்றதனால் தடத்த அதிகார சிவ இயல்பும்; 'நிலவு உலாவிய நீர் மலி வேணியன்' என்பதனால் தடத்த போக சிவ இயல்பும் கூறப்பட்டன. இவ்வாறன்றிச் சொரூபம், நிட்களம், நிட்கள சகளம், சகளம் என்னும் நான்கும் முறையே, இப்பாடலின் நான்கு அடிகளால் உணர்த்தப் பெற்றன எனினுமாம்.

ஒரு நூலின் தொடக்கப் பாடல், வாழ்த்து வணக்கம் வருபொருள்உரைத்தல் என்னும் மூன்று பொருள்களையும், உணர்த்தல் வேண்டுமென்பது மரபு. இம்மூன்றும் இப்பாடலின் இறுதி அடியில் குறிக்கப் பெற்றுள்ளன. வணங்குவாம் என்பதனால் வணக்கமும், வாழ்த்தி என்பதனால் வாழ்த்தும், மலர் சிலம்படி என்பதனால் வருபொருளுரைத்தலும் குறிக்கப் பெற்றுள்ளன. இவ்வாற்றால், 'உலகலொம் உணர்ந்து' என்னும் பெரிய புராணச் செய்யுள், மங்கல வாழ்த்துக்கு உரிய இலக்கணம் பெற்றிருத்தல் காணலாம்.

—ஆசிரியர்

# ஆடிக் கிருத்திகை

திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ. ஏ. எஸ்.,

ஆணையர், அறநிலையத்துறை, சென்னை—600 034

**முன்னுரை :**

கலியுகத்தும் கண்கண்ட கடவுளாக, கலியுகத்தும் வேண்டுவோர் வேண்டுவன வழங்கியருளும் வள்ளலாகத் திகழ்பவன், முருகப் பெருமான். கொடியோர்த் தெறுதல் (துஷ்ட நிக்கிரகம்), செவ்வியோர்க்கு அளித்தல் (சிஷ்ட பரிபாலனம்) என்பன, முருகப் பெருமானின் இயல்பான செயல்கள். அவற்றின்படி, சூரபதுமன் முதலிய அசுரர்களை ஒறுக்கவும், தேவர்களைக் காத்தருளவும் ''கருணைகூர் முகங்கள் ஆறும், கரங்கள் பன்னிரண்டும் கொண்டு'' முருகப் பெருமான், ஆறு குழந்தைகளாக வடிவம் தாங்கி, விளையாடி உயிர்களை மகிழ்வித்தான். அதனால் திருமால் முதலிய தேவர்கள் எல்லையில்லா உவகை எய்தினர்; கார்த்திகைப் பெண்கள் ஆகிய தெய்வ மாதர்கள் அறுவரை அழைத்து இக்குழந்தைகளுக்குப் பாலூட்டி, வளர்த்து வாருங்கள் எனப் பணித்தனர். அதன்படியே கார்த்திகைப் பெண்கள் அறுவரும், ஆறு குழந்தைகளாக வடிவம் கொண்டிருந்த முருகப் பெருமானுக்குப் பாலூட்டி வளர்த்தனர். கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப் பெற்ற முருகன் கார்த்திகேயன் என்றும் ஒரு பெயர் பெற்றான். அது மட்டும் அன்றி, கார்த்திகை நாளில் தன்னை வழிபடுவோர்க்கு எல்லா நலங்களையும் அளித்தருளவும் இசைந்து, அக்கார்த்திகைப் பெண்களுக்கு முருகன் வரம் தந்தருளினான்.

**விரத நாட்கள் :**

முருகனுக்குரிய விரத நாட்கள் பல. அவற்றினுள் கிழமைகளில் வெள்ளிக் கிழமையும், திதிகளில் சஷ்டி திதியும், நட்சத்திரங்களுள் கிருத்திகை நட்சத்திரமும், மிக்க சிறப்புடையனவாகும்.

ஆதலின் முருகனுக்குரிய வெள்ளிக்கிழமை, சஷ்டி திதி, கார்த்திகை நட்சத்திரம் ஆகிய நாட்களில், முருகனை அன்புடன் முறையே வழிபடுவோர், எல்லா நலங்களையும் பெறுவார்கள். இவற்றுள்ளும் குறிப்பாக, ஒவ்வொரு மாதத்திலும் வரும் கிருத்திகை நட்சத்திரத்தில் முருகனை வழிபடுவது மிகவும் சிறப்பாகும். கந்த புராணத்தில் கச்சியப்ப சிவாசாரியார் பாடிய ''கந்தவிரதப் படலம்'' என்னும் பகுதியில் கார்த்திகை அல்லது கிருத்திகை நோன்பின் சிறப்பு விரிவாக விளக்கப் பெற்றுள்ளது.

**கிருத்திகை விரதப் பயன் :**

(1) கிருத்திகை நோன்பினை முறையாகப் பன்னிரண்டு ஆண்டுகள் நோற்று, நாரத முனிவர், சப்த ரிஷிகள் எனப் போற்றப்படும் முனிவர்கள் எழுவருக்கும் மேலான நிலையையும் சிறப்பையும்பெற்றார்.

(2) கிருத்திகை விரதத்தை நோற்றுப் பிரமச்சாரியாகிய மறையவன் ஒருவன், மனுக்களுள் முதல்வனாகப் பிறந்து, உலகம் முழுவதையும் ஆளும் பேறு பெற்றான்.

(3) அந்தணன் ஒருவன், கிருத்திகை விரதம் கடைப்பிடித்துத் தான் விரும்பிய நலன்களை யெல்லாம் பெற்றுத் திரிசங்குச் சக்ரவர்த்தியாகப் பிறந்து, பெரும் பேறுகள் எய்தினான்.

(4) ஓர் அரசனும், ஒரு வேடனும் கிருத்திகை நாளில் முறையே வழிபாடு ஆற்றி, அந்திமான், சந்திமான் என்னும் பெயருடையவர்களாய்ப் பிறந்து, பேரரசர்களாக விளங்கி, உலகை ஆளும் மேன்மையையும் சிறப்பையும் எய்தினர்.

(5) கோரன் என்னும் அவுணர் கோனால், தன் நாடு முதலியன இழந்து துன்புற்ற பகீரதன் என்பவன், கானகத்துக்குச் சென்று சுகர் என்ற முனிபுங்கவரைச் சந்தித்துத் தன் குறைகள் எல்லாவற்றையும் முறையிட்டு, அவர் உபதேசித்தபடி கிருத்திகை விரதத்தை விருப்பத்துடன் கடைப்பிடித்து, முருகனை வழிபட்டு, அவரது அருளால் பகைவரை வென்று இழந்த நாடும் பிறவும் பெற்று இன்புற்றான்.

இவ்வாறு கிருத்திகை விரதம் மேற்கொண்டு பற்பல நலன்களை எய்தியவர்கள் எண்ணில்லாதவர் ஆவர். இதற்கு நிகரான விரதம் வேறு எதுவும் இல்லை என்று, கந்த புராணத்தில் வரும் கந்த விரதப் படலம், கவின் மிக விளக்குகின்றது.

**ஆடிக் கிருத்திகை :**

எல்லா மாதத்துக் கிருத்திகைகளும் சிறப்புடையனவே ஆயினும், தட்சிணயனம் தொடங்கும் ஆடி மாதத்தில் வரும் ஆடிக் கிருத்திகையும், உத்தராயணம் தொடங்கும் தை மாதக் கிருத்திகையும், தனிப் பெருஞ் சிறப்புடையனவாகும். இவ்விரண்டனுள்ளும் தட்சிணயனம் தொடங்கும் மாதமாகிய சிறந்த ஆடி மாதத்துக் கிருத்திகை, தென்றமிழ் நாட்டுத் தனிப் பெருங் கடவுளாகிய முருகப் பெருமானுக்கு மிகவும் சிறப்புடையதாகும்.

இந்த நல் விரதம் தன்னை
ஈண்டொரு மறையோன் நோற்று
முந்திய மனுவே யாகி
முழுதுலகு அதனை ஆண்டான்;
அந்தணன் ஒருவன் பின்னும்
அவ்விர தத்தைப் போற்றிச்
சிந்தையில் நினைந்தாங் கெய்தித்
திரிசங்கு ஆகி யுற்றான்!

ஈங்கொரு மன்னன் வேடன்
இருவரும் நோற்று, வண்மை
தாங்கிய அந்தி மான், நற்
சந்திமான் என்று பேராய்,
வீங்குநீர் உடுத்த பாரை
மேலைநாட் புரந்தார் என்ப;
ஆங்கவர் பின்நாள் முத்தி
அடைவது திண்ணம் அம்மா!

—கந்த புராணம்.

**முடிவுரை :**

ஆதலின், இந்தப் புனித ஆடிக் கிருத்திகை நன்னாளில், ஆறுபடை வீடுகளில் ஒன்றாகிய குன்று தோறாடல் எனக் கருதப்படும் திருத்தணிகையில், நாம் அனைவரும் முருகனை அன்புடன் முறையே வழிபட்டு, இம்மை மறுமை நலங்கள் எல்லாம் எய்தி இன்புறுவோமாக!

---

மதிப்புரை

## அவிரோத உந்தியார் (ஆங்கில மொழி பெயர்ப்பு)

தமிழகத்தில் வீர சைவச் சான்றோர்களாக விளங்கியிருந்த அருளாளர்கள் பலருள், தவத்திரு சாந்தலிங்க சுவாமிகள் (கி.பி. 1678), ஒருவர். அவர் திருப்பேரூர்ச் சிதம்பர சுவாமிகளின் குருவாகிய விருத்தாசலம் குமாரதேவர்க்குக் குருவாக விளங்கியவர். கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத உந்தியார் என்னும் நான்கு நூல்கள், தவத்திரு சாந்தலிங்க சுவாமிகளால் இயற்றப் பெற்றன. அவற்றுள் ஒன்றாகிய அவிரோத உந்தியார் மூலமும், அதற்குத் திருப்பேரூர்ச் சிதம்பர சுவாமிகள் இயற்றிய சிறந்த உரையும், இராவ்சாகிப் திரு. நல். முருகேச முதலியார், பி.ஏ., அவர்களால், ஆங்கிலத்தில் முகவுரை குறிப்புரைகளுடன் விரிவாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. திரு. நல். முருகேச முதலியார் அவர்கள் சிறந்த பக்தர் ; ஆங்கிலத்திலும் தீந்தமிழிலும் தேர்ச்சி மிக்க புலமை வாய்ந்தவர். குமார தேவரின் சுத்தசாதகம், சின்மய தீபிகை, உமாபதி சிவத்தின் சங்கற்ப நிராகரணம் முதலிய நூல்களை ஆங்கிலத்தில் முன்பே சிறப்புற மொழி பெயர்த்துள்ளவர். சிவஞான போதம் முதலிய சைவ சித்தாந்த நூல்களை ஆங்கிலத்தில் வெளியிட்டுதவிய திரு. ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை அவர்களுக்குப் பின்னர்ச், சமய நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து விளக்கி எழுதிவரும் தலை சிறந்த பேரறிஞராகத் திகழ்பவர் இவரேயாவர் எனலாம். 180 பக்கங்கள் கொண்ட விரிவான சிறந்த இந்நூலின் விலை ரூபா. 7.50. கிடைக்குமிடம் : ''பேரூர் வீர சைவ ஆதீனம், தவத்திரு சாந்தலிங்க சுவாமிகள் திருமடம், பேரூர், கோவை-10.''

—ஆசிரியர்

---

செய்திச் சுருக்கம்

## ஆயிர வைசியர் மடம், நெருஞ்சிப் பேட்டை

கோவை மாவட்டம், பவானி வட்டம் நெருஞ்சிப் பேட்டையில் காவிரிக் கரையில் இயற்கைச் சூழலில் அமைந்திருக்கும் திருஆலங்காடு இம்முடி அகோர தர்மசிவாச்சாரிய ஆயிர வைசியர் மடம், தமிழகத்திலுள்ள மிகப் பழமையான திருமடங்களில் ஒன்றாகும். தமிழகம் முழுவதும் பரந்து வாழும் ஆயிர வைசியப் பழங்குடி மக்களால் இந்த மடம் நிறுவப்பட்டது. ஆயிர வைசியர்களின் குரு, தர்ம சிவாச்சாரியார். இவர் முதலில் திருஆலங்காட்டிலும், பின்பு மைசூரிலும் வாழ்ந்து, திப்பு சுல்தானின் காலத்தில் மைசூரிலிருந்தும் இடம் பெயர்ந்து, நெருஞ்சிப்பேட்டைக்கு அருகிலுள்ள பாலமலைக்கு வந்த போது, ஆயிர வைசியப் பெருமக்கள் அவரை நெருஞ்சிப்பேட்டைக்கு அழைத்து வந்து நெருஞ்சிப் பேட்டையில் அவரை இருந்தருளச் செய்து மடத்தையும் அமைத்தனர்.

இந்த மடத்தில் இராஜராஜேஸ்வரி முக்கிய தெய்வமாக வழிபடப்படுகிறார். மடத்திலும், மடத்தைச் சார்ந்த காசிவிசுவநாதர் திருக்கோயிலில், விசாலாட்சி, காசி விசுவநாதருக்குத் தினமும் வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இத்திருமடம் 1951-ஆம் ஆண்டில் ஆயிர வைசியர்களின் குரு, சப்தரிஷி தர்மசிவாச்சாரியார் மறைந்த பின்பு, இதுவரை மடாதிபதி இல்லாமல் இருந்து வருகிறது. 31—12—1975-ல் மடத்தின் சிஷ்யர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அறங்காவலர் குழு, மடாதிபதி நியமனம் சம்பந்தமாக தீவிர முயற்சி எடுத்து வருகிறது. 19—4—1976-ல் மடத்தில், கோவை இந்து சமய அறநிலைய ஆட்சித் துறைத் துணை ஆணையர் திரு கே. சிதம்பரம், பி.ஏ., அவர்களால் வேதபாடசாலை திறந்து வைக்கப்பட்டு, சிறப்புடன் நடைபெற்று வருகிறது. 26—4—1976-ல் தேவார பாடசாலையும் துவக்கப்பட்டு சிறப்புடன் நடைபெற்று வருகிறது.

# வித்தியா விநீத பல்லவேச்சுவரம்

—திரு. புலவர் சி. ஈ. எஸ். பெருமாள்—

### முன்னுரை

கலைப் பெருக்கையும் அருட் பெருக்கையும் அள்ளித் தரும் ஆற்றல் வாய்ந்த ஆலயங்கள் நிறைந்த நகரம்—காஞ்சிபுரம். அதனால் இங்கு ஆண்டுதோறும் விழாவொலி கேட்டுக் கொண்டேயிருக்கும். அம்மட்டோ! அரசோச்சும் அரசர்களின் முரசொலியும் முழங்கிக் கொண்டேயிருக்கும். இதனைப் புராதன நூல்கள் பரக்கப் பேசுகின்றன. இத்தகு ஆன்ற பெருமையுடைய காஞ்சி மாநகரம்—விரிந்த புகழுடைய கரிகாலனைக் கவர்ந்திழுத்து இருக்கிறது; கலை வளர்த்துப் புகழ் பரப்பிப் பாராண்ட பல்லவ மாமன்னர்களுக்குத் தண்ணளியுடன் தலை நகராய்த் திலகமெனத் திகழ்ந்திருக்கிறது. அரசியல் துறையிலும் சரி, ஆன்மிகத் துறையிலும் சரி, காஞ்சிக்கு நிகர் காஞ்சியே என்று ஏத்திப் போற்றாத இலக்கியங்கள் இல்லை; பெருமை பேசாத சான்றோர்கள் இல்லை!

### பல்லவரைக் கவர்ந்த கூரம்

எழிலார்ந்த சிறப்புடைய காஞ்சியில் இருந்து 14.5 கிலோ மீட்டர் தூரத்தில் வடமேற்குத் திசையில், காஞ்சிபுரம்-அரக்கோணம் பேருந்து வழியில் அமைந்துள்ளதுதான் கூரம் என்னும் சிற்றூர் ஆகும். பல்லவ அரசர்களின் ஆட்சிக் காலத்திலேயே புகழ் சான்ற சிறப்புடைய திம்ம சமுத்திரம், பரமேஸ்வர மங்கலம், கூரம் முதலிய பல கிராமங்களில், தனித்ததோர் முக்கியத்துவம் கூரம் கிராமத்திற்கே உண்டு. சுமார் 1,500 மக்களைக் கொண்டது தான்; எனினும் இக்கிராமத்தினுள் நுழையும் பொழுதே ஒரு வரலாற்றுப் புதையலைக் காணப் போகிறோம் என்னும் பெருமித உணர்வு பொங்கி எழத்தான் செய்கிறது. ஆம். இவ்வூர் பல்லவப் பேரரசர்களின் பார்வைபட்ட இடம் மட்டுமன்று ; பாரகத்திற்கே ஆன்மீக உணர்வை ஊட்டி வளர்த்து உதவிய பேராளன் கூரத்தாழ்வான் பிறந்து வளர்ந்து தவழ்ந்த புண்ணிய பூமியும் ஆகும் எனில் அது மிகையாகாது.

### முதலில் தோன்றிய கற்கோயில்

ஒரு கால் கோயில்களைத் தவிர மகேந்திரனைப் போல் பரமேஸ்வர பல்லவன் மலையைக் குடைந்திடவில்லை. தந்தை நரசிம்மனைப் போல் மலையைச் செதுக்கிடவில்லை. மலையை உடைத்துக் கற் பாறைகளாக்கி, அவற்றை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிக் கோயில் எடுத்தவன் பரமேஸ்வரனே ஆவான். தென்னிந்தியாவிலேயே பல்லவர் கட்டுவித்த முதல் கற்கோயில் கூரம் என்னும் சிற்றூரிலுள்ள சிவன் கோயிலே என்று வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

### வித்தியா விநீத பல்லவேச்சுவரம்

பல்லவ மன்னன் முதலாம் பரமேஸ்வரன் காலத்தில் (கி.பி. 670—700), 'வித்யா விநீத பல்லவேஸ்வர கிருகம்' என்னும் பெயர் பெற்று இச்சிவாலயம் விளங்கியிருக்கிறது. 'வித்யாவிநீத பல்லவன்'—என்பது பரமேஸ்வர வர்ம பல்லவனுடைய பட்டப் பெயர்களுள் ஒன்று. இவனே இக்கோயிலில் சிவலிங்கத்தைப் பிரதிட்டை செய்திருக்கிறான்.

இக்கோயிலில் சுவர்களை மாத்திரம் பாறைகளால் கட்டி மேலே ஓடு போட்டு மூடியுள்ளதை நோக்க, தென்னிந்தியாவில் கி.பி. 690-ல் பாறைகளால் கட்டிடம் கட்ட ஆரம்பித்திருக்கவில்லை என்பதை ஊகித்து அறியலாம் அன்றோ!

### கூரம் கோயில் மாண்பு

கற்களை உடைத்துப் பாறைகள் ஆக்கி ஒன்றன்மீது ஒன்றாக அடுக்கிக் கோயில் கட்டிய முதல் பல்லவன் இராஜ சிம்மன். என்றாலும் அந்த எண்ணத்தை அவனுக்கு உண்டாக்கியது; அவனது தந்தை கட்டிய கூரம் சிவன் கோயிலே எனலாம். கற்களைப் பெரிய கற் பலகை போன்று செய்து கோயில் அடிப்பகுதிக்குப் பயன்படுத்தி இருப்பதைக் கூரம் கோயிலில் காணலாம்.

### பல்லவனின் சிவத் தொண்டுகள்

பரமேஸ்வர வர்மன் சிறந்த சிவ பக்தன். அனந்த சிவாச்சாரியார் என்பவரைப் பூஜைக்கு நியமித்தும், இருபது சதுர்வேதிகளுக்கு நிலமளித்தும் சிவத் தொண்டு செய்திருக்கிறான். இவனுடைய சிவபக்தியை, மாமல்லபுரத்தில் உள்ள கணேசர் கோயிலில் காணப்படும் பரமேஸ்வரவர்மன் காலக் கல்வெட்டுக்களிலிருந்து அறியலாம்.

''சிவனுக்கு மேல் தெய்வமில்லை, சிவனே முழு முதற் கடவுள். பிறப்பிலி. ஸ்ரீநிதி சிவனை உள்ளன்புடன் வழிபடுபவன். சிவனை நினையாதவர்கள் ஆறு முறை சபிக்கப்பட்டவர் கள் ஆவர்''.

'ஸ்ரீநிதி, பிறப்பற்ற சிவனைத் தன் முடிமீது தாங்கியுள்ளான். புகழ்பெற்ற அத்யந்த காம னது மணி முடியைச் சிவன் இருப்பிடமாகக் கொண்டிருக்கிறான் . . .' (1.1.1.18).

'கூரம் கிராமத்தில் நூற்றெட்டுச் சதுர் வேதிகள் இருந்திருக்கிறார்கள் . . .' ( 1,1,1, 151).

## யுத்த வருணனைக் கல்வெட்டுக்கள்

முதலாம் பரமேஸ்வர வர்மனின் கூரம் செப்பேட்டுச் சாசனங்கள் மிகவும் புகழ் பெற் றவை. அவை பல அரிய செய்திகளை நமக்கு நல்குகின்றன. பெருவள நல்லூர் யுத்தம் பற்றிய வருணனை, காவிய நடையில் வெகு அழ காக எழுதப்பட்டிருக்கிறது.

'எண்ணிறந்த வீரர்களும் குதிரைகளும் யானைகளும் நடந்து சென்றமையால், கிளம்பிய தூளிகள் சூரியனை மறைத்தன ; சூரியனது ஒளி சந்திரனுடைய கோட்டை போல மங்குகிறது. அச்சம் உண்டாக்கும் முரசொலி இடியைப் போல முழங்கிட, உறையிலிருந்து உருவிய வாட் கள் மின்னலைப் போலக் கண்களைப் பறித்திட, யானைகள் மேகம் போல அசைந்து வர யுத்தம் நடந்தது.

'நெடிய குதிரைகள் ஓடும்போது, கடலின் அலைகள் போலத் தோற்றமளித்தன. அவை களின் நடுவே யானைகள் எல்லாம் வந்த காட்சி கடலைக் கலக்குவது போல் இருந்தது.

'சமுத்திரத்திலிருந்து சங்குகள் மேற்கிளம் பியது போல், வீரர்கள் சங்குகளைத் தூக்கி ஊதி னார்கள். கத்திகளும் கேடயங்களும் ஆகாயத் தில் சுழன்றன. பகைவர்கள் வீழ்ந்து இறந்து கிடந்த காட்சி, காண்டா மிருகம் செடிகளையும் மரங்களையும் முறித்தெறிந்திருப்பது போலக் காட்சியளித்தது'.

## விக்கிரமாதித்தன் தோல்வி

'வில் வீரர்கள் அஸந, நாக, திலக, புன் னை மரங்கள் நிறைந்த காடுகளைப் போல நின் றார்கள். வீரர்கள் வில்லை வளைத்து அம்பை விடுத்த போது, காட்டில் காற்று தடைப்பட்ட காலத்தில் உண்டாகும் பேரொலி போலப் பெரும் முழக்கம் எழும்பியது. யானைகள் ஒன் றோடு ஒன்று மோதியபோது, தந்தங்கள் குத்தி மாட்டிக் கொண்டு நின்றன. குதிரை வீரர் களின் வாள்கள் ஒன்றோடு ஒன்று சிக்கிக் கொண்டு அவர்கள் அசைய முடியாமல் நின்றார் கள். மற்றைய வீரர்கள் ஒருவர் மயிரை ஒருவர் பிடித்திழுத்தனர். தண்டாயுதங்கள் ஒன்றோடு ஒன்று மோதின.

'உதிரமும் யானைகளின் மதநீரும், தரை யில் விழுந்து கலந்ததால், பூமி மஞ்சள் பூசினாற் போல் ஆனது. கைகளும் தலைகளும் கால்களும் தொடைகளும் பற்களும் வெட்டுண்டு உதிர்ந் தன.

'இரு திறத்தாரும் முன்னும் பின்னு மாக அலைந்தோடி விழுந்தார்கள். நதியாய் ஓடும் ரத்தத்தின் மேல் பாலம் போல் நிற்கும் யானைகள்; அவைகளின் மீதுள்ள வீரர்கள் போராடும் காலத்தில், ஸ்ரீதேவி சந்தேகம் என்னும் ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டு முன்னும் பின்னும் ஆடினாள். அடிபட்ட வீரர் கள் உயிருடன் இருந்தாற்போலக் கையில் வாளை ஏந்தி உதடு துடித்துக் கண் சிவந்து நின்றார்கள். கிரீடங்களும் புஜபந்தங்களும் மாலைகளும் வளை யல்களும் நசுங்கி உடைந்து தவிடு பொடி ஆயின.'

## முதல் தாமிரப் பட்டயம்

கூழ் மாண்டர்கள், இராக்கதர்கள், பிசா சங்கள் முதலானோர் இரத்தத்தைக் குடித்து மதி மயங்கினார்கள். முரசை யடிக்கும் போது தாளம் போட்டாற் போல, தலை வெட்டுண்ட முண்டங்கள் கூத்தாடின. விக்கிரமாதித்தன் —பல லட்சம் வீரர்களுடன் வந்த அரசன் — ஒண்டியாய்க் கந்தையைப் போர்த்திக் கொண்டு போர்க் களத்திலிருந்து ஓடிச் சென்றான்!' இவ்வாறு பெருவள நல்லூர் யுத்தத்தின் வரு ணனை, கூரம் சாசனத்தில் கூறப்பட்டிருக்கிறது. இக் கூரம் சாசனம்தான், மகேந்திர பல்லவ குலத்தார் கொடுத்த முதல் தாமிரப் பட்டயம் ஆகும்.

இத்தகு வரலாற்றுச் சிறப்புடைய கூரம் கோயில் சுவரில், 'ஸ்ரீ பல்லவ மாராசன் மா மல்லன்' என்னும் தொடர் காணப்படுகிறது. இதனால் இக்கோயில், முதல் நரசிம்மவருமன் காலத்திலேயே பீடுற்று இருந்ததை அறியலாம். இங்கு எழுந்தருளிய சுவாமியை, 'பெருந்திருக் கோயில் மகாதேவர்' என்று கல்வெட்டுக்கள் அழைக்கின்றன. சுவாமி வழிபாட்டுக்கும் பாரதம் படிக்கவும் பரமேசுவர வர்மன் நில தானம் வழங்கியுள்ள செய்தி குறிப்பிடத் தக்கது.

## நம்மனோர் கடமை

தமிழகத்துக் கட்டடக் கோயில்களுள் மிகவும் பழம் பெருமையுடன் எஞ்சியுள்ளது இக்கோயிலே யாகும். அரசு தொல்பொருள் துறையினரின் மேற்பார்வையில் நிர்வகிக்கப் பட்டுவரும் இக்கோயிலில், பல்லவர் பாணியின் பாங்கு குறையாமல் — சிதையாமல் — அவ்வப் போது சீர்திருத்தி வந்திருக்கிறார்கள். சிற்ப விசித்திரங்கள் செறிந்து காணப்படாவிடினும், பல்லவர்களின் பெருமித வாழ்வைப் பறைசாற் றும் இக்கோயிலை, உண்மையிலேயே போற்றிப் பாதுகாக்க வேண்டியது நம்மனோர் கடமை ஆகும்!

**

# "கங்கையிற் புனிதமாய காவிரி"

திரு. ம. அ. முருகேசன், B.A., B.L.,
நீதித்துறை அலுவலர், மதுரை.

என்றுமுள தென் தமிழை இயம்பி இசை கொண்ட கம்பர், வடமொழியில் எழுதப்பட்ட ஆதி காவியத்தைத் தழுவித் தனது இராம காதையைச் செய்தார் என்பது, கம்பராமாயணத்தின் பாயிரத்தால் விளங்குகிறது. அப்படி இராமாவதாரத்தைப் பாடிய கம்பர், இன்னும் சில நூல்களையும் எழுதி இருக்கிறார் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். ''சரஸ்வதி அந்தாதி'' ''சடகோபர் அந்தாதி'' 'ஏரெழுபது' என்ற மூன்று நூல்களையும் கம்பர் எழுதியிருக்கிறார் என்று நம்பப்படுகிறது. இந்த நூல்கள் நமக்கு முற்றிலும் கிடைக்கவில்லை. இவற்றுள் ''சடகோபர் அந்தாதி'' என்பது 'வேதம் தமிழ் செய்த மாறன்' என்று புகழப்படுகிற நம்மாழ்வாரைக் குறித்தது. இதிலிருந்து கம்பநாட்டாழ்வாருக்கு நம்மாழ்வார் மீது இருந்த பக்தியும் ஈடுபாடும் விளங்குகிறது. அத்துடன், மற்றைய ஆழ்வார்களின் பாசுரங்களிலும் கம்பர் ஆழ்ந்து தோய்ந்து திளைத்தவர் என்பது, கம்பரது இராமாயணத்தையும் ஆழ்வார் பாசுரங்களையும் ஆழ்ந்து படிப்பவர்களுக்கு நன்கு விளங்கும். உதாரணத்திற்கு ஒன்று பார்ப்போம்!

(2) கங்கையும் காவிரியும் இந்திய நாட்டின் வரலாற்றையும், பண்பாட்டையும் கலையையும் பிரதிபலிக்கின்றன. வடக்கே, கங்கைச் சமவெளியில் பேரரசர்கள் தோன்றிப் புகழ் படைத்ததைப் போலவே, தெற்கிலும் காவிரிச் சமவெளியில் சோழப் பேரரசர்கள் தோன்றிப் புகழ் படைத்தனர். இறவாத இலக்கியங்களிலும் புராணங்களிலும் கங்கையும் காவிரியும் நிலையான இடம் பெற்றிருக்கின்றன. விண்ணுலகத்திலுள்ள கங்கையைப்பகீரதன் மண்ணுலகத்திற்குக் கொண்டு வந்தான் என்பது புராண வழக்கு. ஆதி கவியாகிய வால்மீகியும், காளிதாசனும் தங்களது அமர இலக்கியங்களிலே கங்கையைப் புகழ்ந்து பாடியுள்ளனர். கவேரன் என்னும் அரசனது மகள் காவேரி என்பதும், அவள் அகத்தியரின் கமண்டலத்தினுள்ளே இருந்தாள் என்பதும், விநாயகர் காக்கை வடிவிலே கமண்டலத்தைக் கவிழச் செய்து காவேரியைப் பெருகச் செய்தார் என்பதும் புராண வழக்கு. கம்பரும், இளங்கோவும், இன்னும் பல புலவர்களும் காவிரியின் புகழைப் பாடியிருக்கின்றனர். எனவே, கங்கையும் காவிரியும் இந்த நாட்டின் இரண்டு குருதி நாளங்கள். இருப்பினும், அகலத்திலும், நீளத்திலும், நீர்ப்பெருக்கிலும் துறைகளாலும், பயனாலும் காவிரியை விடக் கங்கை பெரியது. புராண வழக்குப்படியும், சிவபெருமானுடைய திருமுடியிலிருந்தும், திருமாலின் திருவடித் தாமரையிலிருந்தும் கங்கை பெருகியது. இத்தகைய புகழ்படைத்த கங்கையுடன் காவிரியை ஒப்பிடலாமா? அப்படி ஒப்பிட்டு, கங்கையை விடக் காவிரி பெருமை வாய்ந்தது என்றால் அதை ஏற்றுக்கொள்வார்களா? இருப்பினும், ஏதோ காரணத்தால், கம்பர் கங்கையை விடக் காவிரி பெருமை வாய்ந்தது என்பது போலப் பாடி இருக்கிறார்.

(3) காட்டுக்குச் சென்ற இராமனை மீண்டும் நாட்டுக்குக் கொண்டு வரப் பரதன் கோசல நாட்டை விட்டுப் புறப்பட்டுக் கங்கைக் கரையை அடைந்தான் என்பதைச் சொல்ல வந்த கம்பர்:

''பூவிரி பொலன் கழல் பொருவில் தானையான்
காவிரி நாடன்ன கழனி நாடொரீஇத்
தாவர சங்கம மென்னுந் தன்மைய
யாவையு மிரங்கிடக் கங்கை யெய்தினன்''

—(அயோத்தியா காண்டம், குகப்படலம் 1)

என்கிறார். ''காவிரி பாயும் சோழ வள நாட்டையொத்த கோசல நாட்டை விட்டு நீங்கி, எல்லா உயிர்களும் இரங்கிப் பரிதவிக்க, அழகிய வீரக்கழலை அணிந்தவனும், பேராற்றல் மிக்க விற்படையை உடையவனுமாகிய பரதன் கங்கைக் கரையை அடைந்தான்'' என்பது இப்பாடலின் திரண்ட பொருள். இங்கே கங்கை பாயும் கோசல நாட்டை காவிரி பாயும் சோழ நாட்டைப் போன்றது என்கிறார். காவிரி பாயும் சோழநாடு உவமானம். கங்கை பாயும் கோசல நாடு உபமேயம். இலக்கணப்படி, உவமானம் உபமேயத்தை விடச் சிறந்ததாக இருக்க வேண்டும். அப்படிப் பார்த்தால், காவிரி பாயும் சோழ வள நாடு கங்கை பாயும் கோசல நாட்டை விடச் சிறந்தது என்று ஆகிறது. கம்பரே கங்கையின் பெருமையையும் கோசலத்தின் சிறப்பையும் பல பாடல்களில் பாடியிருக்கிறார்.

''இரவி தன்குலத்து எண்இல் பல்வேந்தர்தம்
பரவு நல் ஒழுக்கின்படி பூண்டது
சரயு என்பது தாய்முலை அன்னது இவ்
உரவு நீர் நிலத்து ஓங்கும் உயிர்க்கு எலாம்.

—(பால. ஆற். 23)

இப்படி யெல்லாம் கங்கையைப் பாடிய கம்பர், காவிரியை அதற்கு உவமானமாகச் சொல்வதானல், அதில் ஏதோ நுணுக்கம் இருக்க வேண்டும்.

(4) உரையாசிரியர்கள் கம்பர் தேசாபிமானத்தால் இவ்வாறு சொன்னார் என்கிருர்கள். அதாவது, தான் பிறந்து வளர்ந்த காவிரி பாயும் சோழவள நாட்டின் மீது இருந்த ஆசையினல், அதைக் கங்கை பாயும் கோசல நாட்டைவிடச் சிறந்தது என்று சொல்கிருர் என்பது, அவர்களுடைய உரை. இது, ''காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு'' என்பது போலாகும். காக்கையின் குஞ்சு கருப்பாக அழகில்லாமல் இருந்தாலும், காக்கைக்கு அது அழகான பொன் குஞ்சாகவே தோன்றும். அதுபோல, பெருமை இல்லாத காவிரி பாயும் சோழ வளநாடு கம்பருடைய தாய்நாடு; எனவே, அதை, அவர் கங்கை பாயும் கோசல நாட்டை விட உயர்ந்ததாகச் சொல்கிருர் என்ருகிறது. அப்படிச் சொன்னல், உண்மையிலேயே, காவிரி கங்கைக்குச் சமம் இல்லாதது என்றும், இருப்பினும் அதன் மீது கொண்ட அன்பினல் கம்பர் அதை உயர்த்திச் சொல்கிருர் என்றும் கொள்ள வேண்டும். அப்படிக் கொண்டால், அது கம்பரின் மேதாவிலாசத்திற்கும், பரந்த நோக்கத்திற்கும் ஏற்புடைத்தன்று.

ஏதோ அவர், குறுகிய நாட்டுப்பற்று உடைய ஒரு சாதாரணக் கவிஞர் என்று ஆகிவிடும். ஆனல், உண்மையில் மிகப் பரந்த மனப்பான்மையும் மேதாவிலாசமும் கொண்டவர் கம்பர். உலக மகா கவிகள் என்று சொல்லக் கூடிய எவரினும் கம்பர் ஒரு படியும் தாழ்ந்தவர் அல்லர். அப்படிப் புலமை வாய்ந்த கம்பர் ''காவிரி நாடன்ன கழனி நாடு'' என்று கூறியிருப்பது அவருடைய தேசாபிமானத்தால் தான் என்ருல், அது கம்பருக்கும் பெருமையில்லை. காவிரிக்கும் பெருமையில்லை.

கங்கையின் சிறப்பு அது விண்ணிலிருந்தும், சிவபெருமானின் சடை முடியிலிருந்தும் பெருகியதும், திருமாலின் திருவடித் தாமரையைக் கழுவியதுமாகும்.

''குறை கொண்டு நான்முகன் குண்டிகை நீர்பெய்து
மறை கொண்ட மந்திரத்தால் வாழ்த்திக்
கறை கொண்ட கண்டத்தான் சென்னி மேல்
ஏறக் கழுவினன் அண்டத்தான் சேவடியை ஆங்கு''

—(திருமழிசை ஆழ்வார் : பிரபந்தம் 2390)

இதன்படி, கங்கை திருவிக்கிரம அவதாரத்தின் தொடர்பு கொண்டிருந்தது. ஆனல், இது என்ருே, எந்த யுகத்திலோ நடந்தது. இது விபவம். வியாக்கியான கர்த்தாக்கள், ''பெருக்காறு போலே விபவங்கள்'' என்றும், ''வற்ருத நீர் தேங்கிய மடுக்கள் போலும் அர்ச்சாவதாரங்கள்'' என்றும் விளக்குகிருர்கள். என்ருே ஒரு நாள் பெருமழை பெய்து வெள்ளம் பெருக்கெடுத்து, ஓரிரு நாட்களிலே வற்றிப் போகும் ஒரு காட்டாற்றைப் போன்றது விபவ மகிமை. ஆனல், அர்ச்சாவதாரமோ, வற்ருத நீர் தேங்கிய மடுக்கள் போன்று நித்தியம் நன்மை பயப்பவை என்கிருர்கள். வற்ருத நீர் தேங்கிய மடுக்கள், என்றும் நிலையாக நின்று மக்களுக்குப் பயன் கொடுக்கின்றன. அதுபோல, அர்ச்சாவதாரமும் என்றும் நிலைத்து நின்று மக்களுக்குச் சேவை சாதித்து அருள் புரிகின்றது. எனவே, விபவத்தை விட அர்ச்சாவதாரம் சிறந்தது என்பது வைணவ சம்பிரதாயம். அந்த அர்ச்சாவதாரத்துடன் நிரந்தரத் தொடர்பு உடையது காவிரி.

''இருளிரியச் சுடர் மணிகள் இமைக்கும் நெற்றி
இனத்துத்தி யணிபணமா யிரங்கள் ஆர்ந்த
அரவரசப் பெருஞ்சோதி யனந்த னென்னும்
அணி விளங்கு முயர் வெள்ளை யணையை மேவி
திருவரங்கப் பெரு நகருள் தெண்ணீர்ப் பொன்னி
திரைக் கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டு என்
கண்ணிணைக ளென்று கொலோ களிக்கும் நாளே''

என்பது பெருமாள் திருமொழி. (பிரபந்தம் 604). அர்ச்சாவதார மூர்த்தியாகப் பள்ளி கொண்டிருக்கும் அரங்கனின் திருவடிகளை, என்றும் தன்னுடைய திரைக் கையால் வருடிக் கொண்டிருப்பது காவிரி. அந்த அரங்கன் முன்னுளில் பரதனின் முன்னேர்களில் ஒருவரான சூரிய குலத்து இட்சுவாகு மன்னனல் பூசிக்கப்பட்டவர். பின்னிட்டு, இராமபிரானல் வீடணனுக்கு வழங்கப்பட்டவர். அந்த அரங்கனுடைய திருவடித் தாமரைகளை இன்றும் வருடிக் கொண்டிருப்பது காவிரி. இப்படி அர்ச்சாவதாரத்துடன் தொடர்பு கொண்ட காவிரி, விபவத்துடன் தொடர்பு கொண்ட கங்கையை விடச் சிறந்தது அல்லவோ! இதை வலியுறுத்தித்தான்,

'' கங்கையிற் புனித மாய
காவிரி நடுவு பாட்டுப்
பொங்குநீர் பரந்து பாயும்
பூம்பொழில் அரங்கம் தன்னுள்
எங்கள் மால் இறைவன் ஈசன்
கிடந்ததோர் கிடக்கை கண்டும்
எங்கனம் மறந்து வாழ்கேன்
ஏழையேன் ஏழை யேனே''

என்று அரற்றுகிருர் தொண்டரடிப் பொடியாழ்வார். கிடந்த கோலத்தில் இருக்கும் அரங்கன் வசிக்கும் ஊராகிய திருவரங்கத்தில் பரந்து பாயும் காவிரி, கங்கையில் புனிதமாயது என்பதற்கு இதனினும் விளக்கம் தேவையில்லை. இதை மனத்தில் வாங்கியே, கம்பர் ''காவிரி நாடன்ன கழனி நாடு'' என்றும், கங்கையை விடக் காவிரியை உயர்த்திப் பாடியிருக்கிருர். *

---

ஓங்கும் அறிவுநலம், நல்ல உணர்ச்சிநலம்,
பாங்குமிகு கற்பனைப் பண்புநலம்,—தேங்கரும்பாம்
செய்ய கலைநலம், சீர்த்திமிகு தெய்வநலம்,
எய்தியதே இன்கவிதை யாம்.

—ந. ரா. முருகவேள்

—(முற்ருெடர்ச்சி)

# எலன் வேல்

கவியோகி சுத்தானந்த பாரதியார்

இனிய தூய இளங் கன்னியின் வரலாறு கேளிர். இந்தியாவில் யோகக் கலை மிக உயர்ந்தது; அதிலும் திருமூல யோகம் ஈடிணையற்ற நிறைமுறை யோகம். அதையே உலகெங்கும் பரப்பி வருகிறேன். இப்போது யோகத்தின் பெயரால் உடலுக்கும், உயிர்ப்புக்கும் உறுதி தேடுகின்றனர். இங்கிருந்து இருக்கையறிஞர் (ஆசனப் புலவர்) மேனுடு சென்று, யோகத்தின் பெயரால் உடலை வளைத்துக் காட்டுகின்றனர்; மனம் உள்ளம் ஆன்மா எல்லாம் வளையாமல் அப்படியே உள்கிக் கிடக்கின்றன. மேனுட்டிலும் பிரான்சிசு முனிவர், தெரசா அன்னை போன்ற அருள் யோகிகள் வழிகாட்டி விளங்கினர்.

அண்மையில் ஆத்திரேலியாவில் ஒரு பெண்மணி கருணையே வடிவாக வாழ்ந்தாள். அவளே எலன் விக்தோரியா வேல் (Helan Victoria Vale). அவள் அழகின் கவிதை; அமுதின் இனிமை; அருளின் கவர்ச்சி; கருணையின் ஊற்று. அவளைப் பெற்ருேர் ஏசு பக்தர்; ஏழைகளுக்கு இரங்கி உதவும் ஈகைச் செல்வர். எலன் இருபதாண்டுகளே வாழ்ந்தாள் (1—2—1930; 11—7—1970) இச்சிறு காலத்திற்குள் அவள் செய்த அருட்பணிகள் பலவாகும். உள்ளத்தான் ஆகிய ஆண்டனிடம் அவளுக்கு அன்புறுதியுண்டு. அவன் உள்ளேயிருக்கிருன்; நான் உயிர்க்கிறேன். எல்லா உயிர்களும் இறைவன் கோயிலே. உள்ளத்தில் அன்பு, உலகிலே தொண்டு—இரண்டே வாழ்வின் குறிக்கோள். எனது யான் என்ற ஆணவம் இன்றி

'' எல்லாம் அவனுடைமை
எல்லாம் அவன் ஆணை
எல்லாம் அவன்; பொதுவென் றெண் ''

என்ற உண்மையை அவள் உணர்ந்து இறைவனுக்கே தன்னை ஈந்தாள்; இறைவனை உள்ளத்தும், இயற்கையுலகிலும் உணர்ந்தாள். வீட்டுக்கு எதிரே சர்ச்சு, அங்கே அடிக்கடி சென்று தொழுதாள்.

'' உள்ளத்தான் ஓங்கும்
உலகத்தான் பேரின்ப
வெள்ளத்தான் விண்ணின் விளக்கு ''

என்பதை அவள் சிறு வயதிலேயே உணர்ந்தாள். பணிவின் பெருமையும், துணிவின் வெற்றியும், கருணையின் கடமையும் அவளிடம் பொருந்தியிருந்தன. எலனுக்கு அடிவயிற்றில் ஒரு நோய் இருந்தது. அதை (Cystic Fibrosis) என்பர். அடிவயிற்றில் வலி, இரத்தம் வடிதல் முதலிய கடும் பிணிகள் நங்கையின் வாழ்வை நரகமாக்கும். எலன்வேல் சிற்றின்ப வாழ்வை வேண்டவில்லை. நோயின் கொடுமையைப் பொறுத்துக் கொண்டு, வாழ்வின் தூய பயனையே கருதினுள். தனக்கு மருந்து தேடவில்லை. சுற்றிலும் மக்கள் படும் துயருக்கு மருந்து தேடினுள்.

'' இடனில் பருவத்தும்
ஒப்புரவுக்கு ஒல்கார்
கடனறி காட்சி யவர் ''

என்ற குறளடிக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தாள் எலன் வேல். அவளிடம் தனித் திறமை ஒன்று காணப்பட்டது. அது உடலினின்றல்ல, உயிரினின்றல்ல, மனத் திட்பத்திலிருந்து அது செயற்பட்டது. அது பிறருக்கும் ஊக்கமும் ஆக்கமும் அளித்தது. அஃது ஆத்தும சக்தி, அருட் சக்தி, அதுவே அவள் வாழ்வை ஊக்கி நடத்தியது. அவள் ஒவ்வொரு மூச்சையும் அளந்து செலவிட்டாள். அளந்து உண்டாள், அளவுடன் உறங்கினுள், அளந்து பேசினுள். அளவில்லாது பொது நலம் பேணினுள்.

சிறு வயது முதலே அவள் அறிவு வளர்ச்சியிலே கருத்தூன்றிக் கற்பன கற்ருள். மலைவீழ் அருவி போல மானிட வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கிறது. அதன் ஓட்டம் பயிரையும் உயிரையும் வளர்க்கப் பயன்படுத்த வேண்டும் என்று அவள் பரபரத்தாள். அவள் ஐவான் ஹோ ஜெர்மன் பள்ளியில் படித்து 1967-ல் மெட்ரிக் தேறினுள். பிறகு மெல்போர்ன் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படித்தாள். படிப்பில் பிடிப்பு அதிகம்; ஒரு நூலைக் கற்று முடித்து அதன் கருத்தை எழுதி வைப்பது அவள் பழக்கம். எலன் உள்ளடங்கி நூலைப் படிக்கும்போது ஒரு யோகியின் தியானவுறுதி காணும். வேறு கவனம் இராது. வகுப்பில் ஆசிரியர் சொல்வதை அவள் மனத்தில் இருத்தி நடப்பாள். எதையும் குறித்த காலத்தில் குறித்தபடி செய்து முடித்து அடுத்த காரியத்தில் புகுவாள். அவள் தொட்டது வெற்றியே. கைபட்டது பளபளக்கும். அவளுக்கு உழுவலன்பர் பலர். உலகெங்கும் உண்டு. அனைவருக்கும் இனிய மொழிகளை முத்து முத்தாக எழுதி உடனுடன் அனுப்புவாள். நல்ல நண்பருடன் உறவாடும்போது உடல் நோய்கூடத் தோன்ருது. அவள் மருத்துவ நிலையங்களுக்குச் சென்று நோயாளிகளுக்குத் தொண்டு செய்தாள்; பிணியால் வருந்துவோருக்கு ஆறுதல் கூறினுள். அவள் ஓவியம், காவியம், ஆடல் பாடல் நாடகம், பேசும் படம்

இவற்றில் இன்பங் கொண்டாள். ஒரு நண்பருக்கு எழுதியதைக் காண்க.

''உடன் பிறப்பே,

புதிது புதிதாக நண்பரைக் காணும்போது என் உள்ளம் களிக்கிறது. நான் அறிந்த உண்மையை அவர்களுக்குச் சொல்லும்போது உள்ளம் மகிழ்கிறது. உன் மனக்கவலையை நீளப் பேசுகிருய். கவலையில்லார் யார்? மனம் உள்ள வரையில் கவலையும் துன்பமும் கலக்கமும் இருக்கும். மனத்தைப் புறஞ்செல்லாது உள்ளடக்கிய யோகியே கவலையற்று வாழ்வான். நீ காலேமாலே தனியே அமர்ந்து உள்ளத்துடிப்பையே கவனித்திரு. . .''

இனிய பாடல்களைப் பியானேவில் மீட்டி நாட்டியம் ஆடுவதில் எலனுக்கு மகிழ்ச்சி. பைபிள் பாடல்களைப் பாடிக் கொண்டே தோட்டத்தில் மலர்களிடையே அவள் உலாவினுள். மலர்களின் புன்னகையை அள்ளிப் பருகினுள்.

கல்லூரியில் தத்துவம் படித்தாள் எலன். சொக்ராத்தன், பிளேடோ, காந்தே, லேபினி, ஷோபன் ஹார், பெர்க்லே, பெர்க்ஸன் நூல்களுடன் பகவத் கீதை, உபநிஷத் கருத்துக்களையும் கற்றுச் சிந்தித்தாள். ஆத்திரேலியக் கல்லூரிகளில் யோக சங்கங்கள் உள்ளன. எலன் யோகத்தில் மனமூன்றினுள். யோகப் பயிற்சியே அனுபவ வேதாந்தம் என்றறிந்தாள். யோகாசனம், பிராணுயாமம் இவற்ருல் தன் உடலுக்கும் மனதிற்கும் கிடைத்த நலனே அவள் எல்லா நண்பருக்கும் எடுத்து விளக்கினுள்.

எலன் வேல் இந்தியாவின் யோகக் கலையைப் பெரிதும் ஆராய்ந்ததுடன் கிதையை ஊன்றிப் படித்தாள். இந்தியக் கல்வி நிலையம் ஒன்று நாட்டி அதில் யோகக் கலக்கும், யோகப் பயிற்சிக்கும் ஆக்கமளித்தாள். அதில் சேர்ந்த உறுப்பினருக்கு பயனுள்ள நூல்களைத் தந்தாள். எலன் அடிக்கடி அமைதித் தனிமையில் ஆழ்ந்து சிந்திப்பதுண்டு. அவள் அடிக்கடி கலகலச் சிரிப்புடன் பிறரையும் சிரிக்க வைப்பாள். அவளே (Giggles) கிளுகிளு என்று அவளது தோழரும் தோழியரும் அழைத்தனர். அவளே யாரும் வெறுத்ததில்லை. வெறுப்பும் கசப்பும் கொண்டவர் கூட, அவள் முன் வந்தால் சிரித்து மகிழ்ந்து நெருங்கிப் பழகுவர். ஆனுல் கிறியும் கில்லாடித்தனமும் அவள் பக்கம் தலைகாட்டா. அவள் சினவாள். ஆனுல் பிழைகளைக் கண்டிப்பாள். தாறுமாருன பேச்சைக் கேட்க மாட்டாள். நல்ல பேச்சினுல் அதை மாற்றுவாள். சினத்தால் சக்தி குறைந்து போகும் என்பாள். அவள் நட்பிற்கு இனியாள். இளகிய நெஞ்சாள். அடங்கிய மனத்தாள். சிந்தையைச் சிலுவையானிடம் வைத்தவள்.

அன்பர் தமது குறைகளைப் பேசி நிற்பர். அமைதியாக முழுவதும் கேட்பாள் எலன்; சிறிது சிந்திப்பாள்; பிறகு சுருக்கமாக இன்னது இப்படியானுல் நல்லது என்று நலம் உரைத்து அமர்வாள்; பிறரைச் சிந்திக்க வைப்பது அவள் பண்பாகும். எலன் பிறர் துயர்களைக் கேட்பாள்; தனது துயர்களைப் பேசாள்.

அவள் ஏராளமாகப் படித்தாள்; தன் அடி வயிற்று நோயையும் ஆராய்ந்து இயற்கை வழி பற்றி வாழ்ந்தாள். நோய் மீறித் துன்பம் பொறுக்காவிட்டால், தனியே பேசாது படுத்துச் சிலுவையைப் பார்த்து ஆறுதல் பெறுவாள். யோவான் சுவிசேஷத்தைப் படித்துத் தொழுவாள்.

பெற்ருேரிடமும் தங்கை வெண்டி (Wendy) யிடமும் எலன் அன்பாயிருந்தாள். அவள் இருக்கும் இடம் அன்பும் அருளும் விளையாடும்.

இவ்வளவு அருமையான பெண்மணி ஒரு நாள்—படுக்கையில் மல்லாந்தாள். சிலுவையைப் பார்த்தாள்.

''ஏசுநாதரே, நீர் எவ்வளவு இன்னலைப் பொறுத்தீர். நானும் என் உடல் பொருள் ஆவியெல்லாம் ஆண்டனிடமே விடுத்தேன். அவன் விருப்பம் எப்படியோ அப்படி நடக்கட்டும். எல்லாம் அவன் செயல்—எங்கும் அவன் மயம்'' என்று வாயடக்கினுள்.

எலன் வையத்திலே வாழ்வாங்கு வாழ்ந்து பலர் உள்ளத்தில் பதிந்துவிட்டாள்.

இந்த நல்லாள் பெயரால் அன்பர் ஒரு பெரிய கட்டிடம் வாங்கி அதில் எலன் வேல் நிலயம் அமைத்தனர். அதற்குச் செல்வர் பணம் அள்ளிக் கொடுத்தனர். ஆறு கோடி சேர்ந்தது. அதில் யோகப் பள்ளி அமைத்தனர். அதிற்சேர்ந்து, பலர் ஆசனமும்-மூச்சடக்கமும் பயின்றனர். வாரந்தோறும் அறிவாளிகள் அங்கே சொற்பொழிவாற்றுகின்றனர். மனிதர் எப்படி வாழ வேண்டுமோ அப்படி வாழுகின்றனர்.

அங்கே யோகப் பள்ளியில் நூறு பேர் பயிலுகின்றனர். அப்பள்ளியில் யோகப்பயிற்சி தருபவர் விஜயதேவர். இவர் பம்பாய் சாண்டா குருசில் உள்ள யோக நிலயத் தலைவர், திருமிகு யோகேந்திரரின் மூத்த மகன். இவர் தம்பி யோகேந்திரர், ஹம்சா என்னும் யோகினியை மணந்து, நல்லறமாகிய இல்லறத்தில் வாழ்ந்து, தந்தைக்கும் உதவியாயிருக்கிருர். விஜயதேவர் ஜில்(Jill) என்னும் ஆத்திரேலிய மாதுடன் காதல் மணம் புரிந்து மூன்று மக்களுக்குத்தந்தையாகித் தனியாக வீடு வாங்கி மெல்போர்னில் இனிது வாழ்கிருர். நூற்றுக் கணக்கான மாணவருக்கு இவர் ஆசனப் பயிற்சி தந்துள்ளார். அத்தனே பேரும் என் கூட்டத்திற்கு ஆர்வமுடன் வந்தனர். எலன் வேல் இருபது வயதில் உடலே நீத்தாள். ஆனுல் அவள் பெயரும் புகழும் பல்லாண்டுகள் பயனுற வாழும். ரோசாப் பூ வாடி உலர்ந்தாலும் அதன் மணம் அத்தரில் மணக்கிறது; எலன்வேல் குணம் அவள் வாழ்வின் அடிச்சுவட்டில் மலர்ந்து புன்னகைக்கிறது.

எலன் வேல் நிலயம்: இதற்குச் செயற்குழு உண்டு. நல்ல செல்வர் அதில் உள்ளனர். அதன் செயலாளர் கென்னத்து, கண்ணும் காவலுமாகக் காரிய நிர்வாகம் செய்கிருர். பணத்தைப் பாங்குடன் செலவழித்துக் கணக்கு வைத்துக் கொள்கிருர். ஆண்களும் பெண்களும் இந்நிலயத்திற் பயிலுகின்றனர். இளங் காதலர் மனமுவந்து மணம் புரிந்து இல்லறம் நடத்துகின்றனர். இருவரும் தொழில் செய்து பிழைத்து, நிலயத்தில் முறையாக யோகமும் பயில்கின்றனர். அனேவரும் நல்ல படிப்பாளிகள். இனி அவர்களைக் காண்போம்

—(தொடரும்)

# தியாகேசர் திருவுலா

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

**நூலாசிரியர் :**

தியாகேசர் திருவுலாவினை இயற்றிய ஆசிரியர், 'சான்றோர் உடைத்து' எனப் போற்றப் பெற்ற தொண்டை நாட்டில், திருக்கழுக்குன்றம் என்னும் சிவத் தலத்திற்கு அணித்தாக உள்ள உழலூர் என்னும் சிற்றூரில், பதினேழாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில், வடுகநாத முதலியார் என்னும் பெருநிலக் கிழார் ஒருவரின் அருந்தவப் புதல்வராகத் தோன்றியருளினார். வடுகநாத முதலியார்க்குப் பூதூர், பொன்விளைந்த களத்தூர் என்ற ஊர்களிலும், நில புலன்கள் இருந்தன. எனவே, அவற்றையும் இவர் தோன்றிய ஊர்களாகக் குறிப்பிடுவது உண்டு. வடுகநாத முதலியார்க்கு வேறு புதல்வர்களின்றி, இவர் ஒருவரே 'ஒரு குலத்திற்கு ஒரு மைந்தன்' எனத் தோன்றினார். ஆனால், இவர் பிறவியிலேயே குருடராக விளங்கினார். இவர் தந்தையார் சிறந்த சிவநெறியாளரேயாயினும், சமயக் காழ்ப்பு இல்லாதவராதலால் பெரியோர்கள் சிலர் கூறியபடி, இவருக்கு வீரராகவன் என்று பெயரிட்டு வழங்கினார்.

பிறவியிலேயே குருடராக இருந்தபோதிலும், இறைவன் திருவருளால் வீரராகவருக்கு உள்ளொளி நிரம்பியிருந்தது. இவர்க்குப் புறக் கண்ணொளி வாய்த்திலாத குறையினை அகக் கண்ணொளி அளித்து, இறைவன் நிறைவு செய்தனன் ஆதல் வேண்டும். *(1)*

பிறந்த பொழுதே, கண் காணாராய வீரராகவர், எண்ணும் எழுத்துமே கண்ணெனத் துணிந்தார். உலையா முயற்சியும் ஊக்கமும் கொண்டார். ஆசிரியர் தமது முதுகில் எழுத்துக்களை எழுத அவற்றைக் கூர்ந்துணர்ந்தும், நூல்களைப் பிறர் படிக்கச் செய்து கேட்டு மனப் பாடம் செய்தும், கல்வி கற்கத் தொடங்கினார். யாவரும் வியந்து மகிழத் தக்க முறையில், கற்பன கற்றுப் பெரும் புலமை எய்தினார். அந்தகராக இருந்தும் அரும் பாடுபட்டுக் கற்று அழகிய இனிய கவிதைகள் பாடும் பெருந் திறம் வாய்க்கப் பெற்றுச் சிறந்தொளிர்ந்த இப்புலவர் பெருமகனாரைத் தமிழக மக்கள் ''அந்தகக் கவி வீரராகவர்'' என்று பாராட்டிச் சிறப்பிப்பாராயினர்.

அந்தகக் கவி வீரராகவர் திருக்கழுக்குன்றப் புராணம், திருக்கழுக்குன்ற மாலை, திருக்கழுக் குன்ற உலா, திருவாரூர்த் தியாகேசர் உலா, கீழ்வேளூர் உலா, கயத்தாற்றரசன் உலா, சேயூர் முருகன் கலம்பகம், சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ், சந்திரவாணன் கோவை, பரராசசிங்கன் வண்ணம் ஆகிய பல நூல்களை இயற்றியுள்ளார். புராணம், உலா, மாலை, பிள்ளைத் தமிழ், கலம்பகம், கோவை, வண்ணம் ஆகிய பலவகை நூல்களையும் இயற்றியுள்ளமை, இவர்தம் பலதிறப் புலமை ஆற்றல்களையும் நலமுறத் தெருட்டும். கண்ணொளி இழந்திருந்தும் இங்ஙனம் நுண்மாண் நுழைபுலம் மிக்கு விளங்கி, உயரிய பன்மாண் குணங்களுக்கு இடமாய்த் திகழ்ந்து, செந்தமிழ்ச் சிவ நலங்கள் சிறந்து, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து ஒளிர்ந்த, அந்தகக்கவி வீரராகவப் பெருந் தகையின் மாட்சிமைகள், மிகப் பெரிதும் போற்றிப் பாராட்டத்தக்கனவாகும். ''சிறந்த பெரும் கவிஞர்கள் எவரும் குற்றமற்ற தூய ஒழுக்கமும், முற்றிய பேர் அறிவும், நற்றவப்பேறும் உடையவர்களாக விளங்குவர்'' *(2)* என்னும் அரும்பெறல் உண்மைக்கு, அந்தகக் கவி வீரராகவரின் புலமை வாழ்க்கை சிறந்த சான்றாக அமைந்து ஒளிர்கின்றது. இக்கவிஞர் பெருமான் இயற்றிய தியாகேசர் திருவுலாவின் கருத்துச் சுருக்கத்தினை இங்குத் தொகுத்துக் கண்டு மகிழ்வோமாக.

## 1. தியாகேசர் தல வரலாற்றுக் குறிப்புகள் :

தியாகேசன், பிரமன் முதலிய நவந்தரு கடவுளராகப் பிறங்குபவன். வேதாந்தத்தின் தெளிவான சைவசித்தாந்தத்தினது விழுப் பொருளாக விளங்குபவன். வேதாந்தத்தின்கண் நடனம் புரிகின்றவன். பராசக்தி எல்லை என்றும், சத்திபுரம் என்றும் பெயர் பெற்ற திருவாரூர்க்குத் தலைவன். தேவர்கள் கறையான் வடிவங் கொண்டு அமைத்த புற்றின்கண் வெளிப்பட்டு அவர்களின் மனக் கலக்கம் போக்கியவன். இந்திரனுக்கு வில்லைக் கொடுத்து, திருமாலுக்குத் தலையை மீட்டும் படைத்துத் தந்தவன். சனகர் சனந்தனர் சனாதனர் சனற்குமாரர் என்னும் முனிவர்களுக்குக் கலியின் துயரம் தீர்த்தவன். கிழக்குக் கரையின்கண் உள்ள தேவகங்கை படிந்த தீர்த்தமும், சங்க முனிவரின் கைகள் வளரும்படி செய்த சங்கதீர்த்தமும் உடையவன்.

---

(1) "This gaiety of the blind is a perpetual wonder to me. It is as though the outer light being quenched an inner light of the spirit illuminates the darkness. Outside the night is black and dread, but inside there is warmth and brightness. The world is narrowed to the circle of one's own mind, but the very limitation feeds the flame of the spirit, and makes it leap higher. It was the most famous of the blind Englishmen who in the days of his darkness made the blind Samson say: "He that hath light within his own clear breast, May sit in the centre and enjoy bright day."

—A. G. Gardiner,
On the Cheerfulness of the Blind.

(2) "That he is the wiset, the happiest and the best, in as much as he is a poet, is equally incontrovertible; the greatest poets have been men of the most spotless virtue, of the most consummate prudence, and if we would look into the interior of their lives, the most fortunate of men".

—P. B. Shelley,
A Defence of Poetry.

திருமாலுக்குத் திருமகளை மணஞ் செய்து வைத்தவன். செந்தாமரை மலரைக் கோயிலாக வுடைய திருமகள் வழிபட்டதனால், தான் எழுந்தருளியுள்ள தலத்திற்குக் கமலாலயம் என்னும் பெயர் வழங்கும்படி அருளியவன். மகப்பேறு குறித்துத் திருமாலால் வழிபடப் பெற்றவன். இந்திரன் முசுகுந்தன் முதலியவர்களின் வழி பாட்டினை ஏற்றவன். தனது தலத்தை வலம் வந்த பசுவையும், அதனை மேய்த்து வலம் வருமாறு செய்த வணிகனையும், தசானன தேயத்தில் அமைச்சனாகவும் அரசனாகவும் பிறப்பித்து வீடுபேறு நல்கியவன். தேவ தீர்த்தத்தில் நீராடிய திரிசங்கு என்னும் அரசன், வசிட்ட முனிவரின் பிள்ளைகளது வெஞ்சொல்லாற் பெற்ற புலி வடிவம் நீங்கி நல்லுடல் பெறச் செய்தவன். கேமசருமன் என்னும் அந்தணனுக்குக் கள்ளுண்ட தீவினையையும், இந்திரனுக்குவிருத்திராசுரனைக் கொன்ற தீவினையையும் போக்கியவன். வடக்கேயுள்ள கயை என்னும் தலத்தாலும் நீங்காத, நன்றி மறப்பு என்னும் கொடிய பாவத்தினைப் போக்கிய கயை என்னும் திருக்குளத்தை யுடையவன். கோடி முனிவர்கள் வந்து வணங்கியபொழுது, கோடியளவான திருவுருவங்கள் கொண்டு அவர்களுக்குக் காட்சி நல்கியவன். தசரதன் சித்தீசன் என்னும்அரசர்களுக்கு மகப்பேறு வழங்கியவன். கோகருணர் என்னும் பெயருடைய இருவர்க்கு வீடு பேறு ஈந்தவன். துருவாச முனிவருக்கு ஊனோடு கலந்த உணவை அளித்த குற்றம் பற்றிப் புலியாகும்படி வெஞ்சொற் பெற்ற குலிசன் என்னும் கேகய நாட்டு அரசன் வணங்கியதனால், குலிசேசன் என்னும் பெயரை எய்தியவன். கலிக்கு அஞ்சி அடைந்த மூன்றரைக்கோடி தீர்த்தங்களுக்கு அடைக்கலம் அளித்தவன். திருநாகைக் காரோணத்தில் அழகவிடங்கர், திருக்காறாயிலில் ஆதிவிடங்கர், திருக்கோளிலியில் அவனிவிடங்கர், திருமறைக்காட்டில்புவனி விடங்கர், திருநள்ளாற்றில் நகர விடங்கர், திருவாய்மூரில் நீல விடங்கர் என்னும் பெயர்களைப் பெற்றிருப்பினும், வீதி விடங்கர்என்னும் பெயருடன் திருவாரூரில் சிறப்பாக எழுந்தருளி விளங்குபவன். மாணிக்கத் திருவாடு தண்டில் அசைந்தாடும் பெருமாள், மணிச் சிங்கா தனப் பெருமாள், தேவரகண்டப் பெருமாள், தியாகப் பெருமாள் என்னும் பல பெயர்கள் தியாகேசர்க்கு வழங்கும்.

## 2. உலா நாள் :

காமிக ஆகமத்தின்படி தியாகக் கொடியை ஏற்றுவித்துத் திருவிழா இயற்றுதல் குறித்துத் தேவர்கட்கெல்லாம் திருமுக ஓலைகள் அனுப்பிய திருநாளில்—வந்து வணங்கும் தேவரை வாழ வைத்து, வணங்குதற்குக் காலந் தாழ்த்து வரும் தேவர்களை விலங்கிடும்படி செய்யும் திருநாளில் —தேவர்களின் மணி முடிகள் நிரம்பித் திருக்காவணத்தில் செம்பொன் நிரம்புகின்ற திருநாளில் —சோனை என்னும் முகிலுக்கு நிகராகப் பொன்னைத் தேவர்களாகிய படைகளுக்கு வாரி வழங்கும் திருநாளில்— பங்குனி உத்திரத்தன்று கண்டு வணங்குபவர்களுக்கு வீடு பேறு கொடுக்கும் திருநாளில் — உலகில் உள்ள ஏழு கடல்களும் ஒன்றுகூடித் திருவாரூரில் வந்து சேர்ந்தனவோ என்னும்படி ஒலி மிக்குப் பெருகிய திருநாளில் ஒரு நாள்.

## 3. உலா ஒப்பனையும் புறப்பாடும் :

கொல்லுகின்ற ஆலகாலம் என்னும் நஞ்சைக் கொடுத்த போதும் சினவாமல், தன் பெண்ணாகிய திருமகளுக்குத் திருமாலுடன் மணஞ் செய்து வைத்த செயலை ஆராய்ந்து, மருமகனாகிய திருமாலின் மார்பின்கண் விளங்கும் கவுத்துவ மணியை வாங்கித் திருப்பாற் கடலானது சிவபெருமானுக்குக் கொடுத்தாற் போல, கடலின்கண் ஞாயிறு வந்து தோன்றினான். அதனால் இறைவன் அல்லியங்கோதை அம்மையுடன் பள்ளி கொண்ட துயிலினின்று நீங்கினான். நெய்க்கடல் தயிர்க்கடல் பாற்கடல் தேன்கடல் நீர்க்கடல் என்னும் ஐம் பெருங் கடல்களாலும் திருமுழுக்காடினான். ஆதிசைவர்கள், முறைப்படி செய்த வழிபாடுகளை ஏற்றுக்கொண்டான். மேருவை வில்லாகவும், திருமாலை அம்பாகவும், உலகைத் தேராகவும், ஆதிசேடனைக் காப்பாகவும் கொண்டான். உமாதேவியின் இடை போன்று நுண்ணியதாய், மறையாகிய நூலினால் பிரமன் செய்த திருவாடையை அணிந்தான். பொன்னால் இயன்ற உடைவாளும், கச்சும் தரித்தான். சடையின் மீது திகழும் திங்களைப் போல, ஞாயிறும் பங்கு கொண்டதுபோல், தலையின்கண் திருமுடியைச் சூடினான். கையிற் பிடித்த மானும், அணிந்த அரவாகிய காப்பும் ஆகியவற்றினின்று நேரே இரண்டு நிலாக்கள் தோன்றியது போலச் செவ்வந்தித் தோடுகளை ஏந்தினான். நஞ்சு பொருந்திய கழுத்தில் உமையம்மை அமைத்த அகங்கையைப் போல, நீலமணி மாலையைக் கழுத்தில் அணிந்தான். ஆதிசேடனால் தாங்கப் பெறும் நிலமகளின் தந்தையாகிய பிரமன், திருமகளின் கணவனாகிய திருமால் என்னும் இருவரும் பிறந்த தோள்களில், பாம்புகளை வாகுவலயங்கள் என அணிந்தான். முகிலினின்று இழிந்த மழையின் தாரைகளைப் போன்ற பூணூலைக் கழுத்திலே தரித்தான். உமையம்மையின் கொங்கைத் தழும்புகளைக் கண்டு கங்கையானவள் ஊடல் கொண்டு திருமார்பைப் பார்த்ததும் சிரித்ததும் பாய்ந்ததும் போலச் செங்கழு நீர் மாலையையும், முத்து மாலையையும் அணிந்தான். பாரதப் போரிற் சூரியனை மறைத்த திருமால் இன்னும் ஒரு சக்கரத்தைத் தனக்குக் கொடுக்கவில்லை என இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டு வணங்கியது போல, மணிக் கடகங்கள் இரண்டைக் கைகளில் தாங்கினான். இடையில் திருவுதர பந்தனம் சேர்த்தினான். கால்களில் ஆடரவமும் கிண்கிணியும் கட்டினான். திருப்பாற் கடலின் துளியோ, நெருப்புப் பூத்த நீறோ, நிலவு தந்த ஒளியோ, மூங்கிலிற் பிறந்த முத்துக்களின்வெண்மையோ, கங்கை நீரின் அழகோ, தாருவன மாதர்களின் புன்னகையோ என்று சொல்லும்படி திருமேனி எங்கும் பச்சைக் கற்பூரம் சார்த்தினான். பவள நிறம் கொண்டாற்போல, திருவாசிகை மாலையைச் சேர்த்தினான். ஒவ்வொரு பகுதியையே இடமாகப் பெற்ற உமையும் கங்கையும் பெற்ற பேற்றைவிட, இதுவே சிறந்த பேறு பெற்றது என்று யாவரும் சொல்லும்படி, திருநீற்றை உடம்பெங்கும் பூசினான். சுருதி நிலைக்

கண் நாடித் தோன்ற அரிய அவன், பருதி நிலைக் கண்ணுடி பார்த்தான். திருமறைக்காட்டில் திருக்கதவம் அடைக்கப் பாடிய சம்பந்தர், திறக்கப்பாடிய திருநாவுக்கரசர், தன்னையே தூதாக அனுப்பிய சுந்தரர், நானூறு கட்டளைக் கலித் துறைகளால் 'திருக்கோவையார்' பாடிய மாணிக்கவாசகர் என்னும் நால்வர் பெருமக்களின் திருப்பாடல்களைச் செவி மடுத்து இன்புற்றுன்.

### 4. உலாவின் உடன் வருவோர் :

சிலாதர முனிவரின் மைந்தராகிய திருநந்தி தேவர், சூடிக்கழித்த திருமாலைகளுக்குத் தோள் கொடுக்கும் சண்டேசர், என்பைப்பெண்ணுக்கிய சம்பந்தர், அப்பூதியடிகளின் புதல்வனை உயிர் பிழைப்பித்த நாவுக்கரசர், இறைவனது தூதினல் பரவையின் காதலைப் பெற்ற சுந்தரர், மன்மதனை வென்ற தன்னை நரிகளைப்பரிகளாக்கிக் கொணருமாறு செய்த மாணிக்கவாசகர், திருமாலுக்கும் பிரமனுக்குமே அரிய தன்னைத் திருவம்பர் என்னும் தலத்திற்கு வேள்வியில் அவி பெறுதற்காக வருவித்த சோமாசி மாறர், சிவ வழிபாட்டின் ஈற்றிற் சிலம்பொலி கேட்ட சேரமான் பெருமாள், பசுவின் கன்றினுக்காகத் தன் அரும் பெறற் புதல்வனை ஆழியின் மடித்த மனுச்சோழன், 'இறைவனுக்கு அடிமையாதலை விளைவிக்கும் என்றல் உன் வாயில் உள்ள எச்சில் எள்ளை என் வாயிலும் உமிழ்க' எனக் கேட்ட வரகுண பாண்டியன், எண்ணிறந்த திருத்தொண்டர்கள், சந்தான குரவர்கள், முசுகுந்தனல் நிறுவப்பெற்ற தானிகர்கள், சைவச்சுருதித் தலைவர்கள், தெய்வப் பரிகரத்துச் சேயோர்கள், பூதபதாதிகள் ஆகிய அனைவரும் ஒருங்கு திரண்டு சூழ்ந்து உடன் போந்தார்கள். திருவடி மறவாச் சிந்தையர்கள் சிலர் அருகிருந்து பந்தர் ஏந்தி நிழல் செய்தார்கள். முழவுகள் இயம்பின. தேவர்கள் தலைதாழ்த்தி வணங்கினர்கள். அந்நிலையில் தியாகேசப் பெருமான் மாணிக்கத் திருவாடு தண்டில் ஏறி, வடதிசையிலுள்ள விட்ட திருவாயில் வழியாக வெளிப்பட்டான்.

### 5. உலாவின் உடன் கூட்டம் :

நிலவுலகம் தேராகவும், மேரு மலை வில்லாகவும், திருமால் அம்பாகவும், வாசுகி நாணுகவும், சூரிய சந்திரர்கள் தேருருளையாகவும் கொண்டு, வானளாவ உயர்ந்த பெரிய தேரின்கண், எண்டிசைகளும் அசைய அசைந்தாடித் தேவியோடும் வந்து ஏறினன், தியாகேசன். அப்போது நறும் புகைகளால் விண் புதைந்தது. தேவர்களின் மலர் மழையால் மண் புதைந்தது. மதி நிழலைச் செய்வது போலத் தேவர்கள் கவிகை பிடித்தார்கள். தேவமாதர் வெண்கவரி வீசினர்கள். திருமாலாகிய விடைக் கொடி ஓங்கிப் பறந்தது. மூத்த பிள்ளையாரும் இளைய பிள்ளையாரும் தத்தம் ஊர்திகளில் ஏறி இருமருங்கும் வந்தார்கள். பிரமன் அன்னத்தின் மீதும் திருமால் கருடன் மீதும் ஏறிப் போந்தனர். ஆதித்தர்கள் பன்னிரண்டு தேர்களிலும், உருத்திரர்கள் பதினெரு எருதுகளிலும், மருத்துவர் இருவர், வசுக்கள் எண்மர், நிலா ஒருவன், முனிவர்கள்எழுவர் ஆகப் பதினெண்மரும் பதினெட்டு விமானங்களிலும், வைரவர் கருஞாளியின் மீதும், ஐயனர் களிற்றின் மீதும், மன்மதன் தென்றலாகிய தேரின் மீதும் ஏறிப் பின் தொடர்ந்து சென்றனர். இந்திரன் ஐராவதமும், அக்கினி ஆடும், இயமன் எருமையும், நிருதி மனிதனும், வருணன் சுறு மீனும், காளி கலைமானும், குபேரன் புட்பக விமானமும், ஈசானன் எருதும் ஆகிய ஊர்திகளில் ஏறிப் போந்தனர். நாகர் கருடர் நவ சித்தர் கிம்புருடர் போகர் இயக்கர் உரகர் முதலியவர்களும் திரண்டு வந்தார்கள். மலை மகளின் முன்னே, கங்கை திருமகள் மண்மகள் நாமகள் வான்மகள் கொற்றவை காளி, மாதரார் எழுவர், எண்ணற்ற தீர்த்தங்களின் பெண் தெய்வங்கள், ஆகிய பலர் திரண்டு சென்றனர். தும்புரு நாரதர் (அசுவதரர் கம்பளர்) என்னும் இருவரும் இசைத் தேன் பொழிந்தனர். அளவில்லாத பல வாத்தியங்கள் வானமும் அதிர முழங்கின.

### 6. திருச்சின்னம் :

முசுகுந்த மன்னனல் வானுலகினின்று மண்ணுலகிற் கொணரப் பெற்றவன்—சோமாசி மாறரின் வேள்வியில் அவி பெற வந்தவன் — சுந்தரர் பொருட்டுப் பரவையின்பால் தூது சென்றவன்—தலையை இழந்த திருமாலுக்கு உயிர் கொடுத்தவன், ஆகிய தியாகேசப் பெருமான் வந்தான், வந்தான் என்று திருச்சின்னங்கள் முழக்கஞ் செய்தன.

### 7. மகளிர் திரள் :

திருமகள் திருமாலை மணக்கும்படி செய்ததனல் திருப்பாற் கடலில் தோன்றிய தெய்வ மகளிரும், இறக்கும்படி விடுத்த உமையம்மையின் வெஞ்சொல்லை நீக்கி உயிர் பெற்றெழச் செய்ததனல் மன்மதனது உலகைச் சேர்ந்த தெரிவையரும், விசுவாமித்திரரின் வெஞ்சொற் பெற்ற மேனகையை உய்வித்ததனல் வானுலக மகளிரும், வேள்வியின் முடிவில் காயத்திரி என்னும் தேவியைப் பிரமன் சேர்ந்து மகிழும்படி செய்ததனல் பிரமவுலகப் பெண்டிரும், சுந்தரர்க்குத்தூது சென்றதனல் வித்தியாதர மகளிரும், வடக்கு வாயில் வழியாகத் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனர் யாழ்இசைக்க வந்த போது உடன்போந்த கந்தருவப் பெண்களும், தியாகேசப்பெருமானைக் கண்டு வணங்கினர்.

இறைவனது கழுத்தின் இருளை வெல்வதற்குக் கூடிய இருட் கூட்டம் போன்ற கூந்தலும், பிறை போன்ற நெற்றியும், மான் போன்ற கண்களும், கொவ்வைக் கனி போன்ற செவ்வாயும், முத்துப் போன்ற பற்களும், மூங்கில் போன்ற தோள்களும், மலைபோன்ற முலைகளும், துடி போன்ற இடையும் உடைய பெண்கள், வளைகள் குலுங்க மன்றுகளிலும் மதில்களிலும் ஆடகச் செய்குன்றுகளிலும் திரளாகக் குழுமி இருபுறத்தும் நின்றனர்.

### 8. தேரின் கண்காட்சி :

பொங்குகின்ற கங்கையும், பூப்பூத்தது போன்ற திங்களும், பவளச் சடைக்காடும், சிவந்த நுதலும், திருநீற்றின் ஒளியும், மதி போன்ற முகமும், முக்கண்களும், செவ்வந்தித் தோடுகள் அணிந்த திருக்காதும், வேதம் மணக்கும் விழுச்செங்கனி வாயும், புன்முறுவலும், திருநீலகண்டமும், பாம்பைக் கொடியாக

அணிந்த தோள்களும் உடையவராய்ச், செவ்வந்தி செங்கழுநீர் மாலைகளோடு, பச்சைக் கருப்பூரம் அணிந்து, கைகளில் மானும் மழுவும் ஏந்தி, அராக்கச்சு வீக்கித் தியாகவிநோதர் என்னும் திருப்பெயர் எழுதிய ஆடையை இடையில் அணிந்து, தலையிற் சீராவும் கால்களில் ஆடரவும் கிண்கிணியும்தரித்து, கோடி இளஞ்சூரியர்களும் ஈடாகாத பேரழகுடன், வைவசுவத கற்பத்தில் மாசி மாதத்தில் அத்த நாளில் முசுகுந்தச் சோழன் செய்து வைத்த திருத்தேரில் தியாகேசப் பெருமான் உலா வருவதைக் காணுங்கள், காணுங்கள்! என்று ஒருவரை ஒருவர் கூவி அழைத்துக் காட்டி மகிழ்வார்கள்.

## 9. பெண்களின் பேச்சு :

தேரின் அழகோ, திருவாரூர்த் தெருவின் அழகோ, தியாகரின் அழகோ, இவற்றுள் எது பெரிதும் சிறந்தது? என்று சிலர் வினவுவர். இவ்வழகுகள் ஒரு புறம் இருக்கட்டும், இவற்றைக் கண்டு தொழுது ஏத்துதற்கு நாம் பெற்ற பேறே மிகவும் சிறந்தது என்பார்கள் சிலர். ஆயிரம் முகங்களையுடைய கங்கையைப் போல, நமக்கு இவற்றைக் கண்டு களிக்க இரண்டாயிரம் கண்கள் இல்லாமற் போயிற்றே என்பார்கள் சிலர். இங்ஙனம் பேசிக்கொண்டு எள் விழவும் இடம் இல்லாதபடி தெருக்களி லெல்லாம் பெண்கள் திரண்டு நின்று தியாகேசர் உலா வருவதைக் கண்டு மகிழ்ந்து நின்றார்கள்.

பெண்களின் உள்ளத்தில் மெள்ளப் புகுந்து உருக்குவதனால், தியாகர்க்குத் திருமேனி நெருப்பென்பது மெய்யேயாகும்! நெருப்பின் வண்ணமுடைய தியாகர் நம்மைச்சேர்த்து அணைந்தால், நம் கண்களிற் பெருகும் நீர் வற்றிவிடும். எங்கள் கண்களினின்று நீர் பெருகச் செய்கின்றீரே, அக்கண்ணீர் வெள்ளத்தால் உமது தேருருள்கள் நிலத்திற் புதைந்துவிடும் என்பதனை நீர் உணரவில்லையா? முலைகளைப் பசலை பூக்கச் செய்து அம் பொன் குடத்தோடு அளித்த இவர், தமது பெயர் செம்பொன் தியாகர் என்பதனை மெய்ப்பித்து விட்டார். தென்னாட்டிற் பண்டு அமணர்களைச் சிதைவித்த இவர், நம் ஆடைகளை நெகிழ்வித்துஇன்று அமணர்களை வளர்க்கின்றாரே, இஃதுஎன்ன வியப்போ! 'முன்நாளிலே கன்றைப் போக்கியது திருவாரூர்த் தெரு என்று எண்ணாமல், நாம் நமது கன்று (வளையல்) களைப் போக்க வந்தோமே'. 'அன்று கன்றை இழந்த பசு அசைத்த மணி, கன்றுகளை இழந்த நமக்கு இன்று இல்லையோ' எனப் பெண்கள் பலவாறு தமக்குள்ளே பேசிக் கொண்டார்கள்.

சிறந்த புற்றின்கண் மறைகளாகிய பாம்புகள் கான்ற மாணிக்கக் கட்டியே! அல்லியங்கோதையின் மணம் நுகர்ந்த தண் அளியே (வண்டு)! தென்றல் தவழும் செழுங் காவே! தேவர் விடை கொள்ளும் சிங்காதனத்து வேந்தே! அடி வைப்பு ஒன்றுக்குப் பசும்பொன் ஓராயிரம் வாரி வீசும் தியாகேசப் பெருமானே! திருமாலின் வில்லினது நாணைப் போக்கியவர் என்பதனாலோ, இன்று காதலால் மால் ஆனவர்களின் உடல் நாணத்தைப் போக்கினீர்? ஓமத்தீயின் பொருட்டுத் திருவம்பர் சென்ற நீர், எம்முடைய காமத் தீயிற்கும் வந்து திருக்கண் சாத்துக! தம்மை அறிந்த தனி ஞானிகள் போல, நாங்களும் எம்மையும் எம் அறிவையும் இழக்கின்றோமே, இஃதென்ன? நும்மைக் கமலாலயத்தார் என்று கூறுவது, காதல் கொண்ட எம் போல்வார் உள்ளக் கமலத்தின்கண் நீர் ஆலயம் கொண்டது பற்றித்தானோ? முன்னர்ச் சிவதத்த மாவளவன் அரசுரிமை பெறுமளவும் நாட்டிலுள்ளார் முறையீடுகளைத் திருவாய்க் கேள்வி செய்த தாங்கள், இதுபோது எங்கள் முறையீட்டைக் கேட்கமாட்டீரா? உமையம்மைக்கு இடப்பாகம் தந்தது போல், எங்களையும் வலப்பாகத்தில் மேவுவித்தல் கூடாதோ? எனப் பலவாறு வினவித் தியாகர் அணிந்திருக்கும் வெண்பளிதப் போர்வையைத் தங்கள் உறுத்த பார்வையினால் கருஞ்சாந்து அணிந்தது போல விளங்கச் செய்வார்கள். தியாகேசரது செவ்வந்தி மாலையைக் கண்டு மதி காணார்கள். அப்பெருமானது அந்தி நிறம் மேவத் தங்கள் உள்ளமாகிய தாமரைகள் வாடிக் குவிய வருந்துவார்கள்.

## 10. பேதை :

அவர்களுள்ளே ஒருத்தி, ஆதிப் பருவச்சிறு பேதை. பல்கலையும் நட்பும் மருவப்படாத மடமான். இளைஞர் அகத்தாமரையில் விரவாத அன்னம். மன்மதன் தான் பிறந்தணிய நாளிற் சிறுதேர் விடும் குழவித் தென்றல். தக்கனது வேள்வியைப் போலக் கூட்டி முடியாத கூந்தலள். ஊழிக்காலம் வருந்துணையும் எல்லை கடவாத கடல் போன்றவள். பசுங்குதலைச் சொல்லினள். வீதிவிடங்கன் சீராளதேவன் மூத்த திருநாவுக்கரசு என்பவர்கள் இறந்து பின் உயிர்த்தெழுந்தமை போல, விழுந்து முளைத்த சிறு பற்களையுடையவள். திருஞானசம்பந்தர் துணையாக வரும் வரையிற் குலச்சிறையார் சமணர்களை அடக்குதலில் முனையாது இருந்தமை போல, இளைஞர்களைக் கண்கள் நோய் நோக்கம் நோக்கத் தலைப்படுமளவும் முளையாது அடங்கியிருந்த முலையினள். பிறர் நெஞ்சை நோவச் செய்தறியாத பெரியவர்கள் போல, அயலவரை வருத்தி அறியாத அழகிய வடிவினள். விண்ணாடிய மதியை விரும்பி அழுவாள். தோழியர்கள் கண்ணாடியில் தோன்றும் நிழலைப் பிடிக்க விரும்பி, அதன் மறுபக்கத்தைத் திருப்பிப் பார்த்து, நிழல் எங்கோ ஓடிப்போய் ஒளிந்து கொண்டதே என்பாள். விளையாடும் பொற் கிண்ணம் காணாமற் போனால், பெண்களின் முலையைக் கிண்ணம் என்று எண்ணிக் கொண்டு, மெள்ள அவர்களின் ஆடைகளைப் பற்றி அலைப்பாள். மரப் பாவையின் காதுகள் இன்னும் வளரக் கூடும் என்று அவற்றிற் குதம்பை இட முயல்வாள். பூவைகள் கிளிகள் முதலியவற்றைப் போல இப்பாவைகள் பேச வில்லையே, இவைகள் ஊமைகளா? என்பாள். அதற்குச் செவிலித் தாயர், முன்பு தசரதன் என்னும் அரசனின் ஊமைத் தன்மையைப் போக்கிய வாலி தீர்த்தத்தில் நீராட்டினால், உன் மரப் பாவையும் பேசும் என்று கூறி முறுவல் செய்வர். அதனைக் கேட்டு அங்ஙனமே செய்ய அவள் புறப்படும்போது, தியாகேசர் தேவர்கள் சூழ, உலா வரும் பேரிகை முழக்கம் கேட்டது. அது கேட்டுத் தாயரும் தோழியரும் செல்லத்

தானும் உடன் சென்ருள். முலைத் தாயரும் கைத்தாயரும் கைகூப்பி வணங்கத் தானும் கைகூப்பி வணங்கினுள். தான் பாவைக்கு நீராட்ட நினைந்து புறப்பட்டதனை மறந்தாள். இறைவனின் திருவடிகளில் விளங்கும் கிண்கிணியைப் பார்த்து, ''இஃது என் பாவைக்குப் பயன்படும். சந்தித்து வாங்கி வரலாம் வாருங்கள்'' என்ருள். அதற்குத் தாயார், ''பேதாய்! அஃது எவர்க்கும் பெறற்கரும் பேறு என்றுணராமல் அதனையும் நீ கேட்டல் தகுமா? போகலாம் வா'' என்று சொல்லி ஆறுதல் கூறினுர்கள். தியாகேசர் தெருவைக் கடந்து சென்ருர்.

## 11. பெதும்பை :

பெதும்பைப் பருவத்தினள் ஒருத்தி. பொதும்பைவிட்டு நடவாத பூந்தேன். மழைக்கு நடம் விளையா மடமஞ்ஞை. கழைக்காமன் மேவா இளவேனில். வேட்பு அறிந்ததாயினும், கூவ அறியாத குயிற் பேடை. வந்து எட்டிப் பார்க்கின்றதன்ன பணை முலையாள். இராவணனை இராமன் ''இன்று போய்ப் போர்க்கு நாளை வா'' எனக் கூறி விடுத்தது போலப் பார்வையாற் கொல்லுதற்கு இளைஞர்களை ''நாளை வா'' என்னும் நயனத்தாள். கூடும்படி கூட்டும் கொண்டையாள். விளையாடும்காற் சாணை பிடியாத மணியாய் இருந்து பின்னர் வீட்டிற் சென்றதும் சாணை தீட்டிய செம்மணி போல்வாள். தனியிடத்தே கிளியின் மணம் நோக்கி மிகவும் நகைப்பாள். அத்தகைய பெதும்பை, தோழியரும் தானுமாகச் சென்று சோலையில் உலாவிக் கொண்டிருக்குங்கால், மானும் மயிலும் போலும் ஒருத்தி வந்து, 'நீ வளர்த்த செவ்வந்திகள் ஏழனுள் வீதி விடங்கு என்பது மலர்ந்தது' என்ருள். உடனே அதனைச் சென்று கண்டு தோளில் தழுவிக் கொண்டு, அதன் மலர்களைப் பறித்து மாலையாகத் தொடுத்தாள். 'வீதிவிடங்கு' என்னும் பெயருக்கு ஏற்ப, அப்பெருமானுக்கே இம் மாலையைச் சூட்ட வேண்டும் என்ருள்.

அதற்குத் தோழியர்கள், பேரொளி யுருவினுய்ப் பிறங்கும் பெருமானின் சடை முடிக்கு இம்மாலை ஏற்றதாகுமா? கண்ணுக்குக் கண்ணை இட்டவர்களுக்கே யன்றி, மற்றையோர்க்கு இறைவனுக்கு மாலை சூட்டும் உரிமை எளிதில் வாய்க்காது. மேலும், நம் போன்ருர் அணிவிக்கும் மாலைகளைக் கங்கையானவள் செங்கை அலைத்தெறிந்து சீறுவாள். உமையம்மை தன் மாலையை இட்டுத் தழுவும் திருக்கழுத்தில், நீ நின் மாலையை இட்டால் ஊடல் கொள்வாள். ஆதலால் நீ நினைப்பது நிறைவேருது என்றனர்.

இந்நிலையில் இறைவன் திருத்தேர் எய்திற்று. கண்டு பெதும்பை கரம் முகிழ்த்தாள். தக்கது இன்னது, தகாதது இன்னது என்று அறியாத தன்மையால், உமையைப் போல யானும் தன்னுடன் அரியணையில் இருக்கும்படி இறைவன் செய்யானே? என்ருள். எல்லாத் தேவர்க்கும் மேலான தேவன் என்பதற்கு அறிகுறியாகத் தேவர்கள் இட்ட அரியணை இது! பிரமனின் தாமரையணையும், திருமாலின் அரவணையும், திறையாகக் கொடுத்த முத்தாலும் மணியாலும் இவ்வரியணை இயன்றுள்ளது. இவ்வணையைத் தாங்கும் சிங்கத்தின் பேறு, திருமாலாகிய நரசிங்கத்திற்கும் கிடைப்பதரிது. இறைவனுக்குப் பொன்மலையும் வெள்ளி மலையுமே சிங்காதனமாகும். இறைவனின் சடை முடியிலுள்ள சந்திரனிலும், இடப்பாகத்திலும், காட்டிலுள்ள எல்லா மான்களும் ஏற முடியுமா? கவுரியின் கைகளில் உலகத்திலுள்ள எல்லாக் கிளிகளும் சென்று தங்க இயலுமா? முற்பிறப்பில் தவஞ் செய்யாதவர்களுக்கு வீதிவிடங்கப் பெருமானைப் பிரியாது உடனிருத்தல் வாய்க்காது. அஃது உமையம்மைக்கு மட்டுமேகிட்டுவதாகும். தொலைவில் நின்று தொழு. உன் தீங்குகள் நீங்கும் எனத் தோழியர்கள் சொல்லினர். பெதும்பையும் தன் விருப்பத்தை அடக்கிக் கொண்டு மனத்தை மீட்டாள். தேவரகண்டப் பெருமாளின் தேர் செல்ல, அதனுேடு வில்லிற் பூட்டிய மலர்க்கணையை மடித்து வைத்துக் கொண்டு மன்மதனும் சென்ருன்.

## 12. மங்கை :

மங்கைப் பருவத்து மகள் ஒருத்தி. ஓவியம் ஒத்த உருவத்தினள். திருமகள் வளர்த்த திருமிகு பாவை. மணி முத்தாற்றில் இட்ட பொன்னைத் திருவாரூர்க் குளத்தில் எடுத்த சுந்தரமூர்த்திகளுக்கு விநாயகர் மாற்றுரைத்துக் காட்டியபோது எடுத்து வைத்த உரையாணிப் பொன் போன்றவள். தான் புதிதாகக் கற்ற சகோட யாழ்க் கல்வி எனும்படி, தேன் போற் புதிது கற்ற செம்மொழியாள். திருஞானசம்பந்தர் திருவோத்தூரில் ஆண் பனையைப் பெண் பனையாக்கிக் காய்க்கச் செய்த குரும்பையையும், திருக்கோலக்காவிற் பெற்ற பொற்றாளத்தையும் போன்ற கொங்கையாள். மன்மதனது காம நூலை முன்னே மொழிவார்க்கன்றித் தானே பன்மொழி செய்யாப் பருவத்தாள். வண்டல் விளையாட்டை விட்டொழித்து வீட்டை விட்டு வெளியிற் செல்லாதவள். ஊசல் ஆடினுள். ஆரூரரைத் தேன் ஒழுகப் பாடினுள்.

அருகே நின்ற மாதர்கள் மகிழ்ந்து, அகிலம் அட நின்ற கொங்கை அணங்கே! திருமகளும் கலைமகளும் வாழ்த்தெடுக்கும் தெய்வமே! தூய முத்தே! ஊசலாக நீ ஆடினுல், பெருமானுகிய வேய் முத்தே உன்னை விரும்பாதோ? மன்மதனின் கரும்பு, திருமாலாகிய பன்றி, கயாசுரன் என்னும் யானை, காலால் தேய்ப்புண்ட சந்திரன், திருமாலின் ஐம்படைகளுள் ஒன்ருகிய சங்கு என்னும் இவற்றிற் பிறக்கும் முத்துக்களைப் பறித்து நினக்கு நல்காதோ? இளைஞர்களின் உள்ளங்களை ஊசலாடச் செய்வது போதாது என்று, நீ வெண்முத்தின் ஊசலும் ஆடுதல் வேண்டுமா? பனிக் காலத்துத் தாமரைப் பூவைப் போல உன் மேனி வாட்டமுறும், ஆதலால் ஊசல் ஆடியது போதும் போதும் என்றனர். அப்போது ஆரூர்ப் பெருமான் ஒரு தெருவில் உலாவந்தான். உடனே மங்கை ஊசலாடுதலை நிறுத்திக் குழை ஊசலாடுமாறு கீழே குதித்தாள். அன்னம் குளத்திற்குச் செல்லாமல் தங்காதது போலவும், சகோரப் பறவை மதியின் உதயத்திற்கு எதிராமல் இராதது போலவும், சிங்காதனப் பெருமாள் போந்த திருமறுகிற் போய்ப் பணிந்தாள். மேனி திரிந்தாள். மனம் திரிந்தாள். மயங்கி வீழ்ந்தாள். இறைவனின் தேர் சென்றது.

இவளை வீட்டிற்கு எடுத்துச் சென்றனர். பாயிற் கிடத்திச் சோர்வு போக்க முயன்றனர்.

'வேய்முத்து' ஒன்றுமே மெய்த்தழல் ஆவதன்றி நாம் அணியும் முத்துக்களும் தழலாகப் பொங்குமோ? இராவணனே சீதையாகிய பெண்ணைச் சிறை வைத்ததன்றி இரவில் திரியும் நிலவும் பெண்ணைச் சிறை வைக்குமோ? இறைவன் நடனமாடும் ஊழிக் காலமாகிய இரவே உயிர்களை ஒடுக்குமே யல்லாமல், வெயிலுக்கு அஞ்சி ஓடும் இரவும் உயிர்களை ஒடுக்கவல்லவோ? சிவ வழிபாட்டில் ஒலிக்கப்படும் மணியே சிவத்தன்மை நல்க உயிர்த் தன்மை போக்குவதன்றி, பசுக்களின் கழுத்திலுள்ள மணிகளும் உயிரை உண்ணுமோ? இறைவனுக்குப் பாற்கடல் முன்னம் நஞ்சை அளித்தது போல, என் செவிகள் எரியும்படி கருங்கடலும் ஆலம் காலுமோ? பாம்பு உள்ளே இழுத்து விடுகின்ற காற்றே யல்லது, பொதிய மலையின் காற்றும் நஞ்சுத் தன்மை வாய்ந்ததோ? இன்று விளைந்த இவ்விளைவுகளை யான் பண்டு அறியேன் என்று சொல்லி இளைத்துக், கை வளையலும் நாணமும் இழந்து நின்றாள்.

## 13. மடந்தை :

அத்தெருவின்கண் வாழும் ஒருத்தி. மங்கைப் பருவத்திற் கடுத்த மடந்தைப் பருவத்தினள். வரவர இடையில் அணியும் காஞ்சி என்னும் அணியானது சுருங்க, முலைக்கு அணியும் கச்சுப் பெருகிக் கொண்டு செல்லும் நிலையினள். மன்மதனது காம நூலை விரும்பிக் கற்றலும் கேட்டலும் முற்பருவத்தில், அவற்றிற்கு ஏற்ப நிற்பது இப்பருவத்தில் என்று சொல்லத் தக்க இயல்பினள். முற்பருவத்தில் நிகழ்த்திய கலவியும் புலவியும் போதாமை குறித்து நாணும் கருத்தின் நகை முகையாள். நிலா முற்றத்தின்கண் அவள் வைகியிருந்தாள்.

அப்போது அவளைச் சூழ்ந்திருந்த பெண்களுள் ஒருத்தி, ''முன்பு திருமாலின் வில்லானது உனது புருவமாகிய வில்லுக்குத் தோற்று ஒடிந்ததேயன்றி, தேவர்கள் சூழ்ச்சியினால் அறவில்லை. நமது திருவாரூரில் உள்ள 'சூரியபுஷ்கரிணி' மூன்றிலும் பூக்கும் தாமரைகள், முறையே கீழும் பக்கமும் மேலும் நோக்குவன அன்றி, உன் முகம் நோக்கி மலரும் திறமுடையனவோ? உன் கால்களுக்கும் கைகளுக்கும் பகையாவதை உணர்ந்தன்றோ, மக்கள் தாமரைக் கிழங்கை வேருடன் அகழ்ந்தெடுக்கின்றனர். இறைவன் புற்றிடங் கொண்டதும், பாதாளத்தில் உள்ள ஆடகேசத்தில் அமர்ந்ததும், உனக்கு அணிகலனாக உதவப் பாம்பின் மணிகளைப் பலகாலும் வாங்கிப் பணிதற் கன்றோ? கிழக்குத் திசையில் அன்றி வேறு திசைகளில் நிழல் செல்லா வகையில் 'அசலேசர்' என இறைவன் திருவாரூரில் விளங்குகின்றான். அதற்கு நம் தலத்தின் வரலாறு கூறும் காரணத்தை விட, உன் காரணமே போதும்'' என்றாள்.

## 14. உரையாடல் :

அதற்கு மடந்தை, '' உமையோடு கங்கையையும் அணைந்த இறைவன் தமியேனையும் அணைவது என்றோ?'' என்றாள். அப்போது, ''நாளைக்குத் தியாகரின் உலா உள்ளது'' என விறலி கூற, இருவர்க்கும் பின்வருமாறு உரையாடல் நிகழ்ந்தது.

மடந்தை : அதற்குள் தென்றல் என்னைச் சுட்டுப் பொடியாக்கி விட்டால் என்ன செய்வேன்?

விறலி : முன் நாளில் திருஞானசம்பந்தர் செய்தது போல, எலும்பைப் பெண்ணாக்குதல் இனியும் தியாகருக்கு இயலும்.

மடந்தை : இறைவன் உலா வந்தால் திங்கள் வெப்பம் விளைவிக்குமே?

விறலி : அப்பர்க்கு நீற்றறையின் வெப்பம் தணித்த பெருமான், இப்பிறையின் வெப்பத்தையும் தட்பமாகச் செய்து விடுவான்.

மடந்தை : என் முலைகள் பசலை யெய்திச் செம்பொன் பூத்தனவே, இவற்றைத் தியாகர் மீட்டும் முன்போற் பறிப்பாரோ?

விறலி : நம்பியாரூரர்க்குச் சேரமான் கொடுத்தனுப்பிய செம்பொற்றிரளை யெல்லாம் திருமுருகன் பூண்டிக்கருகே சிவ கணங்களை விட்டுப் பறிக்குமாறு செய்தவர், உனக்கும் அவ்வாறு செய்யாமற் போவாரோ?

மடந்தை : மிடற்றுக் குவளை மிடற்றார், என் கையை விடுத்து ஏகுவளை மீண்டும் இடுவாரோ?

விறலி : மதுரையில் வணிக மகளிர்கட்கு வளையல்களை அணிவித்தவர், உனக்கு மட்டும் அவற்றை இடாது ஒழிவரா? நாளைக்குக் காலையிற் பார்.

இங்ஙனம் இரவெல்லாம் விறலியும் மடந்தையும் இனிதே பேசிக் கொண்டு மகிழ்ந்தார்கள். பொழுது விடிந்து சூரியனின் தேரைக் கண்ட மடந்தை, இனி உலாத்தேரும் காண்பேன் எனப் புறப்பட்டாள். தியாகரின் அசபை நடனத்துக்குரிய சுத்த மத்தளம் தாளம் சின்னம் காகளம் தேவாரப்பண்ணிசை மறை முழக்கம் என்பன கேட்டாள். துந்துபி வெண்சங்கு ஆடரவக்கிண்கிணி என்பனவற்றின் ஓசை கேட்டு உயிர் தழைத்தாள். பாடினியின்மேற் பொன்மாரி பொழிந்தாள். ''செவ்வந்தித் தாமா! திருவந்திக் காப்பழகா! வெவ்வந்திப் பூசலை விலக்கு'' என்றாள். அந்தி வண்ணத்தனாகிய இறைவன் ''இவ்வண்ண மாதை முனியேல்'' என்று வெள்நத்தன் சேய் ஆகிய மன்மதனுக்குக் கடைக்கண் குறிப்புக் காட்டியருளினன். பெண் அணங்கும் வைத்த விழியுடன் மீண்டாள். இறைவனும் தேரின்கண் விரைந்து சென்றான்.

## 15. அரிவை :

அரிவை ஒருத்தி. தனது நிழல் பற்ற உருகும் படிமத்தாள். மன்மதனுக்குக் காலையில் வெப்பம் தணிக்கும் இளநீரும், மாலையில் சூட்டும் திருமுடியும் போன்ற வனமுலையாள். பானு பதப் பங்கேருகமாம் பருவத்தாள். தியாகரின் ஐந்தொழில்களுள் நடுத்தொழிலைப் போல, உலகத்தைத் தன் பேரழகால் அழித்து நிற்பவள். கூடலுக்கும் ஊடலுக்கும் நிறைகோலை ஒத்தொழுகும் நெஞ்சினள். அவள் வீணை ஒன்றை ஏந்தித் தியாகரின் காவிரியாறு காவிரிநாடு கழுநீர்மாலை திருவாரூர் மணிவரை

மறைப்பரி ஐராவணம் ஐந்துமுகமுரசு வீர கண்டயம் தியாகக் கொடி என்னும் பத்துறுப்புக் களையும் பதினெட்டுப் பண்களிலும், கேட்ட பாணரும் பாடினியரும் வியந்தனர். 'நின் பாடலைத் தியாகேசர் கேட்பர் உனைக் காப்பர்'' என்றார்கள்.

## 16. அரிவையின் அரற்றல் :

அரிவை : அவர் என் உயிரைக் காப்பதாய் இருந்தால், இறந்துபோன மன்மதனுக்கு உயிர் கொடுத்திருப்பாரா? திருமாலின் பூக்களில் ஒன்றைக் குறைத்தவர், மன்மதனின் கணை யாகிய பூக்களில் ஒன்றைக் குறைக்க மாட் டாரா? கல்லானை தின்னக் கரும்பைக் கொடுத் தவர், மன்மதனின் வில்லாகிய கரும்பை அவ் யானைக்குக் கொடுத்திருக்கக் கூடாதா? கங்கை யின் பெருக்கைச் சடை முடியில் அடக்கியவர், என்னைத் துன்புறுத்தும் கடல் திரையும் சுவறும் படி செய்தல் கூடாதா? என்னைத் தன் நில வொளியால் துன்புறுத்தும் பிறையைத் தமது முடியின்கண் இருக்கும் மதியினுடன் சேர்த்து அணிந்து கொள்ளுதல் ஆகாதா?

## 17. அரிவையைத் தேற்றல் :

தோழியர் : தியாகர் அன்றே உனக்கு உற வினரானார் என்பதை நீ அறியவில்லையா? உன் முலைக்கு எதிராக இருத்தல் பற்றியன்றோ, அவர் மேரு மலையை வில்லாக வளைத்தார்? நின் விழி களுக்குப் பகை என்றல்லவோ மீனையும் கூற்று வனையும் நஞ்சையும் முறையே அவர் பிடித்தும் உதைத்தும் குடித்தும் அடக்கினார்? உனது இடைக்கு ஒப்புடைமை கருதியன்றோ, நரசிங் கத்தை உரித்தார், துடியைக் கொட்டினார்? திருமால் ஆமையாக வடிவம் எடுத்தபோது அதன் ஓட்டைப் பெயர்த்தது, உனது புறவடி களுக்கு அது இணையாகிவிடும் என்றுதானே? இருளானது உன் கூந்தலுக்குப் பகை என்று கருதியன்றோ, அதனைத் தம் (ஞாயிறு திங்கள் என்னும் இரு) கண்களால் நாளும் வெகுண்டு ஓடச் செய்கின்றார்? இவைகளெல்லாம் தெரியாதோ? தேவர் விடை கொள்ளும் திருக்காவணத் திருக்காப்பு, திருவந்திக் காப் பழகு, வரையா வரங்கொடுக்கும் வாய்ப்பு, பல்லக்குச் சேவை, அல்லியங் கோதை அமளி என்னும் பலவற்றில் ஈடுபட்டோ என்னவோ, அவர் நின்னை நினைந்து வர இயலவில்லை. ஆயினும், போது விடிய வந்து விடுவார்.

## 18. அரிவை பணிதல் :

அவ்வாறே, மறு நாள் தியாகேசர் திருத் தேரினில் வீதியில் உலாப் போந்தார். அரிவை வந்து தொழுது எழுந்து, தியாகரின் பேரழகை விழியில் முகந்து கொண்டாள். ''நம்பா! உமை பங்கா! நாயகர்க்கும் நாயகா! எங்கள் பால் உன் நெஞ்சம் இரங்காதா? தேவர்கள் வணங்க ஐந்து போதுகளிலும் நடனம் புரிந்த நின் திருவடி, மன்மதனுடைய ஐந்து கணைக ளாகிய போதுகளை உதிரும்படி செய்யாதோ? திருமாலின் வில்லினது நாணை அரித்த சிதல்கள் மன்மதனின் வில்லையும் அரித்தல் கூடாதா? நித்தல் விழாக் காணக் காலந் தாழ்த்து வரும் தேவர்கட்கு இடப்படும் விலங்கை மன்மதனுக் கும் ஒரு நாள் இடுதல் நேராதோ? மனுச் சோழர் இட்ட தேர், வீதிவிடங்கரைச் செய்தது போல, உன் தேரும் எங்களை வருத்தும் இப் பிறைத் திங்களை ஊடறுத்தால் என்னை? திரி சங்கு மன்னன் நீராடி நல்லுடல் பெற்ற தேவ தீர்த்தத்தினை இந்திரனின் கட்டளைப்படி தூர்த்து விட்ட வாயு தேவனைச் சிவந்த நின் உள்ளம், எங்களைத் துன்புறுத்தும் தென்றலைச் சினவாதா?'' எனப் பலவாறு இரந்து பணிந் தாள். தியாகர் உமைக்கு அஞ்சி இடநோக்கம் தாராது, வலத்துத் தட நோக்கம் தந்து தணந்தார். அரிவையும் தியாகரின் முன் அழகு கண்ட முதல் மயக்கில், மும்மடங்கு பின்னழகு கண்டு மயக்கம் பெருகினாள்.

## 19. தெரிவை :

தெரிவைப் பருவத்தினள் ஒருத்தி, பிறை திரு என்னும் அணிகள் பொலியும் குழையாள். நஞ்சை அனைய நாட்டத்தாள். இறைவனின் திருமேனி விண்ணே என்று, அந்த விண் முழுவ தும் தழுவ எழும் முலையினாள். இடை இலதோ உளதோ என்று இறைவன் திருக்கண் சார்த்தி யது போலப் பல்காசின் பட்டிகையும் வெண்ணி றப் பட்டும் அழகொளிரக் கட்டிய செம்பொற் கடி தடத்தாள். சோலையிற் செல்லாமலும், செய்குன்றை அணுகாமலும், சுனைகளிற் குடையாமலும், அரமியத்தில் வீற்றிருந்தாள்.

## 20. தோழியின் வினா :

அப்பொழுது ஒருத்தி வந்து ''ஓட்டில் இரக்கும்போதே தாருவன முனிவர்களின் மனை வியரை மயக்கியவர், பொற் சிங்காதனமும் தேரும் பெற்று வந்தால், நாம் மயங்கா திருக்க முடியுமோ? திருமால் மோகினி உருவெடுக்க அவரையே காதலித்து மயக்கினார் ; மதுரையில் வணிகப் பெண்களுக்கு வளையல் இடும்பொழுது மையல் விளைவித்தார் ; பரதவர் போல மீன் வலையாற் கடல் மங்கையை மயங்க வைத்து இன்புற்றார்; உமையம்மை தவம் புரியுங்கால் கிழவடிவங் கொண்டு சென்று காதல் மொழி கள் பேசினார். இத்தகையவரின் உலாவைக் காண நாம் போவதா? போகாமல் நின்று விடுவதா ?'' என்று வினவினாள்.

## 21. தெரிவையின் விடை :

அதற்குத் தெரிவை, ''அப்பர் சம்பந்தர் சுந்தரர் என்னும் மூவரும் பாடிய தேவாரப் பாடல்களை, ஓதினால், நாம் அவர்பாற் செல்ல வேண்டாமல் அவரே நம்பால் வந்து விடுவார். நெருப்பில் வேகாமல் இருக்கும்படி எழுதப் பெற்ற 'போகமார்த்த பூண்முலையாள்' என் னும் திருநள்ளாற்றுத் தேவாரப் பாடலை நாம் அணியும் காதோலையில் எழுதி வைத்துக்கொண் டால், வாடைக்காற்று நம்மை ஒருபோதும் சுடு தல் இயலாது. திருவாலவாயான் திருநீற் றைப் பூசிக் கொண்டால், கூன்பாண்டியனின் வெப்பு நோய் போல, நிலாவிளைக்கும் வெப்பு நோயும் நீங்கி யொழிதல் திண்ணம். திருஞான சம்பந்தர் பாண்டியனின் கூனை நீக்கப் பாடிய 'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்' என்னும் பாடலைப் பாடினால் மன்மதனது, வில்வளை வாகிய கூனும் தீர்ந்து போகும். 'மாதர் மடப் பிடியும் மடவன்னமும்' எனத் தொடங்கும் திருத்தருமபுரம் யாழ்மூரிப்பண்ணைப் பாடினால்,

நம்மை வெப்பம் எய்துவிக்கும் யாழினிசை சிதைந்தொழியும். திருநாவுக்கரசர் கல்லைக் கடலில் மிதக்கச் செய்யப் பாடிய 'சொற்றுணை வேதியன் சோதிவானவன்' என்னும் பாடலைப் பாடினால், இரவில் நம்மைத் தன் பேரொலியால் இடர்ப்படுத்தும் கட்லும் வலிவிழக்கும். சுந்தரர் திருவையாற்றுக்குச் செல்லுங்கால் இடையிற் பெருகி நின்ற காவிரியாற்றின் வெள்ளம் தணியப்பாடிய ''பரவும் பரிசொன்றறியேன்'' என்னும் பாடல் நம் கண்களிற் பெருகி வழியும் நீரையும் தணியச் செய்யும். ஆதலால் நாம் மூவர் திருப்பாடலால் உய்யலாம். இறைவன் பதமலரும் சூடலாம்'' என்று துணிந்து புறப்பட்டாள். உலாக்கண்டு துதித்தாள்.

## 22. தெரிவையின் வேண்டுதல் :

''சுந்தரனும் புறம்பு. அவனை ஆட்கொண்ட தியாகரும் புறம்பு'' எனக் கூறி விறன்மிண்டர் சினந்தருளப் பெற்ற பெருமானே! வெள்ளி மலையிலும் பொன்மலையிலும் வாழ்ந்து விட்டுச் சிறு புற்றின் கண்ணும் இடங்கொண்டு உறைந்தருள்கின்றீர். திருமால் காணாத திருவடிகள் தேயுமாறு பரவை என்னும் பெண்ணிடம் தூது போகத் துணிந்தீர். மாணிக்கத் திருவாடு தண்டிலும் மணிமன்றிலும் ஆடுகின்ற கூத்தைப் புறங்காட்டிலும் ஆடுகின்றீர். அடிவைப்பு ஒன்றுக்கு ஆயிரம் பொன் பரிசில் அளித்துவிட்டு அதனோடு இரத்தற் றொழிலையும் மேற்கொண்டீர். எல்லாத் தத்துவங்கட்கும் மேற்பட்ட நாதாந்த வடிவமுடைய நீர், சோமாசிமாறரின் வேள்வியில் புலை வடிவம் பூண்டீர்! ஆதலால் உமையம்மை தழுவி மகிழும் தோள்களை யானும் தழுவி மகிழும்படி எனக்கு அளித்தால், நுமது பெருமை கெட்டுப்போய் விடுமோ? எனப் பலவாறு உருகி வினவி நின்றாள்.

## 23. பேரிளம் பெண் :

பேரிளம்பெண் ஒருத்தி, கலைமகளினும் சிறந்தவள். திருமகளும் வெட்கி விளர்ப்புறத் தக்க பேரழகினள். மலர்சூடாத கூந்தலள். வரிதுறந்த கண்ணள். புற்றிடங்கொண்ட பெருமானின் திருநடங்கண்டு பதஞ்சலியும் வியாக்கிரபாதரும் பணிவது போல, இசை போலும் தன் இனிய சொற்களைக் கேட்டுப் பாம்பும் புலியும் கூடப் பணியுமாறு செய்பவள். முகங்கவிழ்ந்த பூண் முலையள். திருப்பனந்தாளில் இறைவனது திருமுடியைத் தனது அன்பினால் வளைந்து கொடுக்கச் செய்த தாடகையம்மையும், இறைவனே தனது பிட்டையுண்டு மகிழப் புண்ணியம் செய்திருந்த செம்மனச் செல்வியும், பேரன்பாற் பிள்ளைக்கறி சமைத்து அளித்த திருவெண்காட்டு நங்கையும், சந்தன நங்கையும் என்பவர்களைப் போலப் பிறக்க முடியுமானால், பெண் பிறப்பே மீண்டும் வேண்டும் என்பவள்.

## 24. திருவாசகப் பதிகங்கள் :

தோழியர்களை நோக்கி, ''நீங்கள் அம்மானை சுண்ணம் தெள்ளேணம் பூவல்லி உந்தி தோள்நோக்கம் ஊசல் முதலியவைகளை விளையாடினால், திருவாதவூரர் என்னும் மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம் என்னும் செந்தமிழ்த் தெய்வத்திருமறையின்கண் உள்ள திருவம்மானை திருப்பொற்சுண்ணம் திருத்தெள்ளேணம் திருப்பூவல்லி திருவுந்தி திருத்தோள் நோக்கம் திருப்பொன்னூசல் என்னும் திருப்பதிகங்களைப் பாடி விளையாடுங்கள். குயில் கிளி என்பனவற்றிற்கு இசையும் மொழியும் பயிற்றுவிப்பீராயின், திருவாசகத்தில் உள்ள குயிற்பத்து திருத்தசாங்கம் (கிளிப்பத்து) என்னும் திருப்பதிகங்களையே பயிற்றுங்கள்'' என வற்புறுத்திக் கற்பித்துக் கொண்டிருந்தாள். தோழிமார்களும் கருத்தூன்றிக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

## 25. கிளி :

அந்நிலையில், அப்பேரிளம்பெண் ''சிவபக்தவாணி'' என்னும் பெயருடைய கிளி ஒன்றைக் கையில் ஏந்தி, அதன் வாயிற் கனிகள் பலவற்றைக் கனிவாய்க் கொடுத்து, ''தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' என்று இறைவன் முதலடியை எடுத்துக்கொடுக்கச் சுந்தரமூர்த்திகள் பாடிய திருத்தொண்டத் தொகைத் திருப்பதிகங்கள் முழுமையும் நீ பாடுவாயாக' என்றாள்.

## 26. கிளியின் இனிய மொழிகள் :

அதற்கு, ''என் ஆயத்தில் உள்ளவர்களின் அழகே, திருத்தொண்டர்களின் அழகாக அன்றோ உளது. இடங்கழி நாயனர் நெற்களவு செய்யப்போன இரவின் இருளும், இளையான்குடிமாறர் வயலில் விதைத்த முளைநெல்லை வாரிக்கொண்டு வரச் சென்ற இரவின் இருளும் சேர்ந்ததன்றோ, நும் கூந்தல்களாயுள்ளன? பண்டை நாளில் நெல்வேலி வென்ற நின்றசீர் நெடுமாறர்க்கு இருந்த கூன் அன்றோ, நுமது கொண்டையில் அணியப் பெற்றுள்ள பிறைக் கூன்? விறன்மிண்டர் வாளும், எறிபத்தர் மழுவுமே உங்கள் நெற்றி. கண்ணப்பர் வில் நுமக்குப் புருவம். இயற்பகையார் கோட்புலியார் கலிக்காமர் சிறுத்தொண்டர் மெய்ப்பொருளார் கழற்சிங்கர் கலிக்கம்பர் சத்தியார் குலச்சிறையார் ஏனாதிநாதர் முனையடுவார் என்பவர்கள் பயன்படுத்திய வாளும், அரிவாட்டாயர் இறைவனுக்குப் படைத்த மாவடுவும், அதிபத்தர் நாடோறும் இறைவனுக்கென்று விடுத்த மீனுமே, நும் கண்கள். பொய்யடிமை இல்லாப்புலவர், ஐயடிகள் காடவர்கோன், காரியார், சேக்கிழார், பரமனையே பாடுவார் என்பவர்கள் பாடியருளிய திருப்பாடல்களைப் பாடிப்பாடி யன்றோ, நும் வாயிதழ்கள் சிவப்புற்றன? திருஞான சம்பந்தர்க்கு இறைவன் அளித்த சிவிகையும் பந்தரும் போல, நும் பற்கள் முத்துக்களால் இயன்றனவாகும்.

திருமூலர் தமது திருமந்திரம் என்னும் நூலில் ''குயிற்குஞ்சு முட்டையைக் காக்கையின் கூட்டிலிட்டால் அயிர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின்றது போல்'' எனக் குறிப்பிட்ட குயிலும், சண்டேசர் மண்ணியாற்றங்கரையில் இறைவனுக்குத் திருமுழுக்கு ஆட்டிய பாலும், ஆனயர் குழலும், திருநீலகண்ட யாழ்ப்பாணர் வீணையும், காரைக்காலம்மையாரின் மாங்கனியும், மூர்த்தி நாயனாரின் சந்தனமும் ஆகக், குயில் பால் குழல் வீணை கனி என்னும் ஐந்தின் இனிமையையும், சந்தனமாகிய ஒன்றின் தண்மையையும், நும் இனிய சொற்கள் இயல்பாகப் பெற்

றுள்ளன; சூத நாயனாரின் சூதாடு கருவியும்,
திருநாவுக்கரசரைக் கொல்லாது வணங்கிப்
படிந்த யானையும், கூற்றுவ நாயனார் சூடிய
முடியும், புகழ்த்துணையாரின் பொற்குடமும்,
பெருமிழலைக் குறும்பர் சுந்தரமூர்த்திகளுக்கு
முன் சென்று சேர்ந்த கயிலைமலையுமாகிய இவை
நுமக்கு முலைகளாயின! மானக்கஞ்சாற நாயனா
ரின் மகள் அளித்த அளகப் பஞ்சவடியும், குங்
குலியக் கலயரின் நறும்புகையும், தீயவர்களின்
மனக்கறுப்பும் சான்றோர்களின் ஒழுங்குமே, நுங்
களுக்கு அழகிய மயிரொழுங்காக அமைந்தன.
தில்லைவாழந்தணர் சிறப்புலியார் சோமாசி
மாறர் நாவலூர்ச் சடையர் இசைஞானியம்மை
யார் பூசலார், முப்போதும் திருமேனி தீண்டு
வார் என்பவர்கள் ஓதும் மறைகளும், சாலிய
ராகிய நேசநாயனார் தாபதர்களுக்கு அளிக்க
நெய்த ஆடைகளுக்கு உரிய மெல்லிய நூலும்,
கோச்செங்கட்சோழர் முன்னைப் பிறப்பில் திரு
வானைக்காவில் சிலந்தியாக இருந்தபோது வலை
அமைத்த நூலும், திருநீலநக்கர் மனைவியார்
இறைவன்மேல் வீழக்கண்டு ஊதித்துமிந்த
சிலம்பி இழைத்த நூலுமே, நுங்கள் இடை
களாக அமைந்தன! அப்பூதியாரின் மகனை
உயிர்ப்பித்து இறந்த அரவே, நுமக்கு அல்குலா
யிற்று. அமர்நீதியாரின் தராசே, நுமக்குக்
கணைக்காலாக விளங்குகின்றது.

தண்டியடிகள் திருவாரூரில் அகழ்ந்த
குளத்திலும், திருநீலகண்டர் தம் மனைவியா
ருடன் மூழ்கி எழுந்து இளமை பெற்ற குளத்தி
லும், பசுபதிநாயனார் நீரின் மூழ்கித் திருவைந்
தெழுத்தை ஓதி வழிபட்ட குளத்திலும் பூத்த
தாமரை மலர்களே, உம் முகமும் கைகளும்
கால்களும் ஆயின. திருவாதிரை விழாவுக்கு
நரசிங்கமுனையரையரும், திருநீலகண்டப்
பாணர்க்குச் சேரமான் பெருமாளும், சுந்தர
மூர்த்திகளுக்குத் திருவோணகாந்தன்தளியில்
இறைவனும் அளித்த பொற்காசுகளே, உங்கள்
மேனிக்குப் பொன்னிறப் பொலிவை அளித்துள்
ளன. கலியர் நமிநந்தி கணம்புல்லர் என்ப
வர்கள் இறைவனது திருமுன்னர் இட்ட
விளக்குகளும், பூசலார் அகவழிபாட்டில் ஏற்
றிய ஞானவிளக்கும், கருவூரையாண்ட புகழ்ச்
சோழர் திருநாளைப்போவார் என்பவர்கள்
புகுந்தெழுந்த நெருப்பும், ஆகியவற்றின் அழ
கும் நிறமுமே, நும் அணிகலன்களின் ஒளி
மணிகள் ஆயின.

திருமகளையும் அழகால் வெற்றி கொள்ளு
தலின் நீங்கள் மங்கையர்க்கரசியார் போல்
வீர்கள். நீவிர் மார்பின்கண் அணியும் கற்
பூரம் திருநீற்றுப்பொடியாகும். திருக்குறிப்புத்
தொண்டர் சிவனடியார்களின் துணிவெளுத்த
கல்லும், சாக்கிய நாயனார் இறைவன் மீது
நாடோறும் தவறாது அன்பால் வீசிய கல்லுமே,
நுமது கற்பென்னும் திண்மைக்கு ஈடாகும்.
திருவாரூரிற் பிறந்தவர்கள், பத்தராய்ப் பணி
வோர், அப்பாலும் அடிச்சார்ந்தார், சித்தத்
தைச் சிவன்பாலே வைத்தார் என்பவர்களெல்
லாம் இங்குள்ள நின் தோழிமார்களே அல்ல
ரோ?'' என்று பலவாறு கிளியானது தெளிவுற
விரித்துக்கூறியது.

## 27. இறைவனின் அருட்டிறம் :

அது கேட்டு மகிழ்ந்த பேரிளம் பெண்ணும்
தோழியரும் 'சிவசிவ' என்று கூறி உருகி நின்ற
போது, தியாகேசர் தெருவில் உலாப் போந்
தார். உடனே கைகுவித்து, நெற்றி நிலம்படிய
விழுந்து வணங்கி, ''மலையை வில்லாக வளைத்த
பெருமானே! உமையம்மையின் முலைத்தழும்பு
மார்பிற் பொருந்தத் தவஞ்செய்த தலைவனே!
கண்ணப்பரின் எச்சிற்பட்ட ஊனையும், உமிழ்
நீர் கலந்த திருமஞ்சன நீரையும், கொண்டை
யிற் சூடிய பூக்களையும் விரும்பி ஏற்றருளிய
இறைவனே! சூரபதுமனைக் கொல்ல முருக
னுக்கு வேலை அளித்த வள்ளலே! பிட்டுக்கு மண்
சுமந்து பிரம்படியும் பட்ட பெருமானே! சங்கப்
புலவர்களுடன் சங்கப்பலகையில் வீற்றிருந்து,
'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி'
என்னும் சிறந்த பாடலைத் தருமி என்னும் அந்த
ணனுக்காகப் பாடிக் கொடுத்தவனே! சுந்தர
பாண்டியனாகத் தோன்றி மீனாட்சியம்மையை
மணந்து மதுரையை ஆண்டு நன்மை செய்த
வனே! முசுகுந்தச் சோழனுக்கு இன்பமுறும்
எல்லா வரங்களையும் ஈந்தருளியவனே! சுந்தர
மூர்த்திகள் கண்களை இழந்து வருந்திவேண்டிக்
கொள்ள அவருக்குக் காஞ்சிபுரத்தில் இடக்கண்
ணின் பார்வையையும், திருவாரூரில் வலக்கண்
ணின் பார்வையையும் கொடுத்து உதவியவனே!

நீ சில காலம் தங்கியிருந்த காரணத்தால்
துன்பம் விளைவிக்கும் வேய்ங்குழலின் இசையை
யும் நான் விரும்புகின்றேன். காஞ்சிபுரத்தில்
நினது மாமரத்தின்கண் வாழ்வதனால், கூவி
வருத்தும் குயிலையும், நான் அன்பு செய்கின்
றேன். திருஞானசம்பந்தர் ஆண்பனையைப்
பெண்பனையாக்கிய பனைமரத்தில் இருப்பதனால்,
அன்றிற் பறவையையும் நான் நன்றெனவே
கொள்கின்றேன். வாடைக் காற்று எனக்கு
வருத்தம் விளைவிப்பினும், நினது கயிலாயமலை
இருக்கும் வடதிசையில் இருந்து வருவது
குறித்து வெறாது மகிழ்கின்றேன். காதலை
மிகுத்து வெப்பம் விளைவித்தலால் கோடி நமன்
போலக் கொடியதாகத் தோன்றுமெனினும்,
நீ நினது சடையின்கண் அணிந்திருத்தல் கருதி
மதியத்தினை யான் உவக்கின்றேன். வேகத்தால்
இக்கு வளைத்து மன்மதன் மலரம்புகளை எய்வத
னால் வெறுப்படைந்தாலும் உனது மெய்க்
குவளைத்தார் விழைகின்றேன்'' என்று, திருத்
தேர்நிலை வரையிலும் சென்று துதித்துத்தொழு
தாள். இறைவனது செங்கழுநீர் மாலையைப்
பெற்றாள். வினைப்பகையும், காமன் செய்யும்
முனைப்பகையும் கூட முடித்தாள். இவ்வாறு
எழுவகைப் பருவப் பெண்டிரும் முன்னே செல்ல
வும், உய்திபெறும் திருவுடையோர் உடன்வர
வும், சுந்தர மூர்த்திகளுக்காகப் பரவையார்
பால் தூது சென்ற தியாகேசர் உலாப்போந்தார்.

''மாதர் நலங்கொண்டு வீதி வலங்கொண்டு
மாதை இடங்கொண்டு வாழ்கந்த—நாதன் நடுக்
கொண்டுதியா கேசர்பூங் கோயிற்சிங் காதன மேற்
கொண்டார் அசபைநடங் கொண்டு''

# ஞானசாரம்

(முற்றொடர்ச்சி)

## 11. அணுவெனினும் மேருவாய்க் கொள்ளும்:

திருமாலின் திருவருட்டிறம் பெரிதும் வியந்து போற்றுதற்கு உரியது. அவன் ஒரு சிறிய திருத்துழாய்த் தளத்தினால் (துளசி இலையினால்) திருப்தி அடையக் கூடியவன். ஒருவகையில் அவன் மேகம் போன்றவன். ''கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு என் ஆற்றும் கொல்லோ உலகு' என்பது திருக்குறள். மேகம் எப்படி கொடுப்பதற்கென்றே உள்ளதோ, அப்படியே பெருமாளும் கொடுக்கும் விருப்பம் உடையவனே அன்றிக் கொள்ளும் நோக்கம் உடையவன் அல்லன். இத்தகைய எம்பெருமான் தன் திருவடியல்லது மற்றொன்றில் கருத்தில்லாத அடியவர்கள், அன்புடன் தன்பால் சமர்ப்பிப்பது அணுவளவிற்றேயானாலும், அதனை மேருமலை போல மிகப்பெரியதாகக் கருதி, மகிழ்ந்து ஏற்றுக் கொண்டருள்வன். அன்பில்லாதவர்கள் மேருமலையைவிட மிகப் பெரிய பொருள்களைச் சமர்ப்பணம் செய்தாலும், அணுவளவிற்றாகக் கூடக் கருதி, அவற்றிற்கு உகப்புக் கொள்ள மாட்டான்.

தன்பொன் அடியன்றி, மற்றொன்றில் தாழ்வுசெய்யா
அன்பர், உகந்திட்டது அணு எனினும்,—பொன்பிற
ழும்
மேருவாய்க் கொள்ளும்; விரையார் துழாய்அலங்கல்
மாரிமாக் கொண்டல்நிகர் மால்

[தாழ்வு செய்யா—ஈடுபாடு கொள்ளாத. இட்டது—சமர்ப்பித்தது. விரை—வாசனை. துழாய் அலங்கல்—துளசி மாலை. மாரி—மழை. கொண்டல்—மேகம். நிகர்—ஒத்த. மால்—திருமால், மகாவிஷ்ணு, அடியவர்களிடத்தில் மிக்க மோகம் கொண்டவன்.]

## 12. உள்ளாதார் ஒண்ணிதியைக் கொள்ளான்:

நாரதமுனிவரின் சாபத்தினால், நளகூபரன் மணிக்கிரீவன் என்னும் பெயர் கொண்ட, குபேரனின் புதல்வர்கள் இருவரும் திருவாய்ப்பாடியில் இரட்டை மருத மரங்களாகத் தோன்றியிருந்தனர்; வெண்ணெய் களவு செய்து உண்ட குற்றத்திற்காக உரலிலே பிணைத்துக் கட்டப்பட்டிருந்த கண்ணபிரானால் அவர்கள் சாபவிமோசனம் பெற்றனர் என்பது வரலாறு. அத்தகைய எம்பெருமானின் தாமரை மலர்கள் போன்ற திருவடிகளைச் சிறப்பாகச் சிந்தித்து வணங்காதவர்கள், எவ்வளவுதான் பெரிய நிதிக் குவியலைச் சமர்ப்பித்தாலும், எம்பெருமான் அதனைச் சிறிதும் விரும்பி ஏற்கமாட்டான்.

மாறாய் இணைந்த மருதம் இறத்தவழ்ந்த
சேறார் அரவிந்தச் சேவடியைப்,—பேறாக
உள்ளாதார் ஒண்ணிதியை ஈந்திடினும், தான்உகந்து
கொள்ளான் மலர்மடந்தை கோன்.

[மாறாய்—பகைமையாய். மருதம்—மருதம் என்னும் மரம். இற—ஒடிய. அரவிந்தம்—தாமரை மலர். பேறாக—சிறப்பாக. உள்ளாதார்—சிந்தித்து வணங்காதவர்கள். மலர் மடந்தை — திருமகள். கோன்—தலைவன்.]

## 13. உலகத்தவரோடு உறவு:

தொன்று தொட்டே உயிர்க்கூட்டங்கள் அனைத்தும், திருமாலுக்கே அடிமைப்பாடு உடையன. இவ்வுண்மையைத் தூயமனமுடைய பக்தர்கள் அனைவரும், தெளிவாகவுணர்ந்து துணிந்திருப்பர். அத்தகைய பக்தர்கள், பல நூல்களைக் கற்று வைத்தும் உடற் பிறப்பை ஒட்டிய சாதிச் செருக்குக் கொண்டு திரியும் அற்பமான உலகமக்களோடு, ஒருவகைத் தொடர்பும் கொள்ளமாட்டார்கள்.

பண்டே உயிர் அனைத்தும் பங்கயத்தாள் நாயகற்கே
தொண்டாம் எனத்தெளிந்த தூமனத்தார்க்கு —
உண்டோ
பலகற்றும் தம்உடம்பைப் பார்த்து அபிமானிக்கும்
உலகத் தவரோடு உறவு.

[பண்டே—தொன்மைக் காலத்திலேயே. பங்கயத்தாள்—திருமகள். தொண்டாம்—அடிமையாகும். உடம்பைப் பார்த்து—உடற் சார்பினால் ஆகிய சாதியை நோக்கி. அபிமானிக்கும்—விரும்பிச் செருக்குக் கொள்ளும். உறவு—தொடர்பு.]

## 14. என்ன பயன்பெறுவீர் ?

நிலம் நீர் தீ வளி விசும்பு என்னும் ஐந்து பூதங்களின் சேர்க்கையால் தோன்றிய உடல் காரணமாக ஏற்பட்ட, அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னும் நான்கு சாதிகளோடு, மற்றும் கற்பனையால் வகுக்கப்பட்ட வேறுபாடுகளை வைத்துக் கொண்டு, நீங்கள் என்ன பயனை அடையப் போகின்றீர்கள்? எல்லா உயிர்களுக்கும் திருமாலின் திருவடிகளே தஞ்சம், புகலிடம் என்பதை உணருங்கள். உயிருக்கு எத்தகைய சாதிவேறுபாடும் கிடையாது. உடற்பிறவியைக் கொண்டே சாதிவேறுபாடுகள் போலியாகக் கற்பிக்கப்பட்டுள்ளன. இறைவன்பால் அடிமையுணர்வு எந்த உயிரின்பாற் பொலிகின்றதோ, அதனைப் போற்றி விரும்பியிருப்பதே ஏற்றதாகும்.

பூதங்கள் ஐந்த [illegible] ற்பிறந்த
சாதங்கள் ந [illegible] ம்—பேதம்
கொண்டு

என்ன பயன்பெறுவீர்? எவ்வுயிர்க்கும் இந்திரை
கோன்
தன்னடியே காணும் சரண்

[சாதங்கள்—சாதிகள், பிறப்புகள். சங்கதம்—போலியாகக் கற்பித்து வைக்கப் பெற்றது. பேதம்— வேறுபாடு. இந்திரை—திருமகள். சரண்—புகலிடம்.]

## 15. குடியும் குலமும் இறையடியே:

ஆறுகள் கடலில் சேர்வதற்கு முன்பு கங்கை யமுனை கோதாவரி முதலிய பெயர் வேறுபாடுகளையும், வெண்மை கருமை செம்மை முதலிய நிற வேற்றுமைகளையும் பெறுகின்றன. கடலிற் புகுந்து கலந்த பின்பு, முன்பு பெற்றிருந்த பெயர் நிற வேறுபாடுகளை அறவே இழக்கின்றன; கடலின் நிறமே யடைந்து, கடல் என்றே வழங்கப்படுகின்றன. அதுபோலப் பகவானைச் சேர்ந்து பாகவதர் ஆயினவர்களுக்கும் குடி குலம் முதலிய எல்லாம், பகவானின் திருவடியேயாகும். உலகியற்சார்பு பற்றிய சாதி குலம் குடி முதலிய வேறுபாடுகள், எதுவும் அடியவர்களுக்கு இல்லை.

குடியும் குலமும்எல்லாம் கோகனகை கேள்வன்
அடியார்க்கு அவனடியே யாகும்;—படியின்மேல்
நீர்கெழுவும் ஆறுகளின் பேரும் நிறமும்எல்லாம்
ஆர்கலியைச் சேர்ந்திட,மாய்ந் தற்று.

[கோகனகம்—தாமரை மலர். கோகனகை—திருமகள். படியின்மேல்—உலகத்தில். ஆர்கலி—கடல். மாய்ந்தற்று—மாய்ந்து போவது போன்றது. அற்று—அத்தன்மைத்து.]

## 16. நாரணன் தாட்கே அடிமை நான்:

'நான்' 'நான்' என்ற சொல்லாற் குறிக்கப்படும் ஆன்மாவாகிய சீவனானவன், தேவர் மனிதர் விலங்கு தாவரம் என்பனவற்றுள் ஒன்றும் அல்லன். அந்தணர் அரசர் வணிகர் வேளாளர்-பிரமசாரி கிரகத்தன் வானப்பிரத்தன் சந்நியாசி என்பவர்களுள் ஒருவனும் அல்லன். திருமகளின் கேள்வனும், அமலனும், அறிவு வடிவினனும் ஆகிய நாராயணனின் திருவடிகளுக்கும், அவனது அடியார்களின் திருவடிகளுக்குமே அடிமைப்பட்டவன், சீவன்.

தேவர் மனிசர் திரியக்குத் தாவரமாம்
யாவையும் அல்லன், இலகும்உயிர்;—பூவின்மிசை
ஆரணங்கின் கேள்வன் அமலன்அறி வேவடிவாம்
நாரணன்தாட் கே அடிமை நான்

[திரியக்கு—குறுக்கே வளர்வது, விலங்கு. இலகும் உயிர் — ஒளி வடிவினன் ஆன சீவன். ஆரணங்கு — திருமகள். நான்—நான் எனப்படும் சீவன்.]

## 17. பிறக்குமோ தற்றெளிந்த பின்?

தேவேந்திரனது செல்வம் வந்து சேர்ந்தாலும் சேர்க; அல்லது உள்ள செல்வமெல்லாம் ஒழிந்தாலும் ஒழிக; ஒருநாளும் இறப்பு இல்லாத வாழ்க்கை வாய்ப்பினும் வாய்க்க; அல்லது இன்றே இறப்பு நேரினும் நேர்க; தன்னுடைய இயல்புகளைத் தெளிந்து கொண்ட பின்னர், மேற்கூறிய நன்மை தீமைகளினால் ஒருவனுக்கு மனக்கொந்தளிப்பும் கவலையும் உண்டாகுமோ? இன்பம் எய்தினேம் என்று மகிழ்வதும், துன்பங்கள் உற்றோம் என்று தளர்வதும், தன்னியல்பு இன்னதென்று தெளிந்துகொண்ட ஞானிகளுக்கு இல்லை.

ஒன்றிடுக விண்ணவர்கோன் செல்வம்; ஒழிந்திடுக;
என்றும் இறவா திருந்திடுக;—இன்றே
இறக்க; களிப்பும் கவர்வும் இவற்றால்
பிறக்குமோ தற்றெளிந்த பின்

[விண்ணவர் கோன் — தேவேந்திரன். ஒன்றிடுக— சேர்க. களிப்பு—மகிழ்ச்சி. கவர்வு — கவலை. தன் தெளிந்த பின்—ஆன்மாவாகிய தன் இயல்பைத் தெளிந்து கொண்ட பிறகு; இறைவனின் இயல்பைத் தெளிந்த பிறகு எனினுமாம்.]

## 18. எளியன், அரியன்:

தேன்நிறைந்த திருத்துழாய் மாலையை அணிந்த திருமால், தன் திருவடிகளில் குறைதல் இல்லாத அன்புடையவர்கள் என்றாலும், பாகவதர்கள் அல்லாத மற்றைய மனிதர்களை, எல்லாப் படிகளாலும் தான் அறியும்படி நீங்கினவர்களாக இருப்பின் மட்டுமே, அவர்களுக்கு மிகவும் எளியவனாக இருப்பான்; அங்ஙனம் நீங்காதவர்களுக்குப் பெரிதும் அரியவனாகவே திகழ்வான். ''ஆன்விடை ஏழ் அன்று அடர்த்தாற்கு ஆளானார் அல்லாதார், மானிடவர் அல்லர் என்று என் மனத்தே வைத்தேனே'' என்றும்; ''செங்கண்மால் நாமம் மறந்தாரை மானிடமா வையேன்'' என்றும், ஆழ்வார் அருளிச் செய்திருத்தல், ஈண்டு அறியற்பாலது.

ஈனம் இல்லா அன்பர் என்றாலும், எய்திலா
மானிடரை எல்லா வணத்தாலும்,—தான்அறிய
விட்டார்க்கு எளியன்; விடாதார்க்கு அறஅரியன்;
மட்டார் துழாய்அலங்கல் மால்.

[ஈனம்—குறைவு, குறைதல். எய்திலா — இறைவனுக்கு அடிமைத் தன்மை எய்தாத. எல்லா வணத்தாலும் — எல்லா நிலைகளாலும். அற — மிகவும். விட்டார் — நீங்கியவர்கள்.]

## 19. வைகுந்தத்து இருப்பு:

நல்ல பண்புகள் வாய்ந்த புதல்வர்கள், நற்குண நற்செயல்களையுடைய மனைவி, குற்றமற்ற சுற்றத்தார், வீடு நிலம் மாடு முதலிய செல்வங்கள் எல்லாம், துன்பத்தை விளைவிப்பவை என்று தோன்றி, எரிகின்ற நெருப்பைக் காட்டிலும் கொடுமை வாய்ந்தவை என்று நினைப்பவர்களுக்கு மட்டுமே, பெறுதற்கரிய பரமபதத்திலே சென்று சேர்ந்திருத்தல் எளியது ஆகும்.

''நல்ல பதத்தால் மனை வாழ்வர் கொண்ட பெண்டிர் மனை மக்களே'' என்று ஆழ்வாரும், ''வாயும் நன்மக்களைப் பெற்று மகிழ்வரே'' என்று ஆண்டாளும், பாடியிருப்பது இக்கருத்துக்கு மாறு அன்று. அவ்வத் தகுதியுடையார்களுக்கு ஏற்றபடியே பலன் இருக்கும். எல்லா வற்றுக்கும் எல்லாரும் தகுதியுடையோர்

ஆகார். ஆதலின் இப்பாடலின் கருத்துக்கு மாறுகோள் ஏதும் இல்லை என்க.

நல்ல புதல்வர் மனையாள் நவையில்கிளை
இல்லம் நிலம்மாடு இவையனைத்தும்—அல்லலெனத்
தோற்றிளரி தீயிற் சுடும்மே லவர்க்கெளிதாம்
ஏற்றரும்வை குந்தத் திருப்பு.

[நவை — குற்றம். கிளை—சுற்றத்தினர். மாடு—மாடுகள், செல்வம். அல்லல்—துன்பத்தைத் தருபவை. ஏற்றரும்—ஏறுதற்கு அரிய. ஏற அரும் என்பது, எதுகை நோக்கி 'ஏற்றரும்' என வந்தது.]

## 20. இதம் அல்லால் செய்யான்:


தன்னிடத்தில் பக்திசெய்யும் தொண்டர்களுக்கு, அவர்களுக்கு வேண்டுவனவாக உள்ள நன்மைகளை மட்டுமே அல்லாமல், அவர்கள் மிகவும் விருப்பப்பட்டாலும்கூட, திருமகள் பொலிந்து வீற்றிருக்கும் மார்பையுடைய திருமால், அவர்களுக்கு நன்மை தராதவற்றைக் கொடுக்க மாட்டான். அஃது எதுபோல என்னில், குழந்தையானது நெருப்பு சுடும் என்று அறியாமல், அதன் ஒளியைக் கண்டு மயங்கி, அதன் குழியிற் சென்று விழ முயன்றாலும், தாயானவள் அதனைத் தடுக்காமல் அதற்கு இசைந்து வாளா இருக்கமாட்டாள், அது போல என்பது. குழந்தை தனக்கு எது நன்மை எது தீமை என்று அறியாது. நன்மையைத் தீமை என்றும், தீமையை நன்மை என்றும், குழந்தை பிறழவுணர்ந்து மயங்கும். தாயே குழந்தைக்கு நன்மை பயப்பது இன்னதென்று உணர்ந்து, அதனைத் தரவல்லவள். அது போலவே, இறைவனும் தன் அடியவர்களுக்கு எது நன்மை என்பதுணர்ந்து, அதனை அளித்தருள்வன். இறைவன் நாம் விரும்புவதொன்றைக் கொடுத்திலனாயின், அது நமக்குத் தீமை பயக்கும் என்பது பற்றியேயாம் என்று, நாம்நன்கு உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

விருப்புறினும் தொண்டர்க்கு வேண்டும்இதம்
அல்லால்
திருப்பொலிந்த மார்பன்அருள் செய்யான்;—
நெருப்பை
விடாதே குழவி விழவருந்தி னாலும்
தடாதே ஒழியுமே தாய்.

[இதம்—நன்மை. குழவி—குழந்தை. தடாது—தடுக்காமல்.]

(தொடரும்)

— ஆசிரியர்



தமிழ்நாடு ஆளுநர் மேதகு சுகாதியா அவர்கள்,
இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமி கோயிலின்
தொன்மையும் பெருமையும் மிக்க, விலையுயர்ந்த அணிகலன்களைப் பார்வையிடுதல்.




ஆண்டவன் யாது நினைக்கின்றானோ அதுவே புனிதமான வேதம்.

மனிதர்களிடமுள்ள அறிவுத் திறன் யாவும், ஆண்டவனைப் பாடுவதற்காக, ஆண்டவனுக்குத் தொண்டு செய்யும் அடியார்களை ஊக்கம் செய்வதற்காக.

மனிதர்களிடமுள்ள செல்வங்கள் யாவும், யார் யாரிடம் செல்வமில்லையோ அவர்கள் அனுபவிப்பதற்காக இருக்கிறது என்று தெய்வ சிந்தனையாளர்கள் எண்ணுவார்கள். பொருள் வைத்திருப்பவர்கள் அதனைக் கொடுப்பதற்காக ஏழைகளைத் தேட வேண்டும்.

தூய்மை என்பது தெய்வத் தன்மையின் மறு பெயர். உடல் தூய்மையும் பெரிது ; மனத் தூய்மை இதனினும் பெரிது. தூய்மையான உள்ளங்கள் பேரின்பங்கள் நிலையாக ஊற்று எடுத்துக் கொண்டிருக்கும்.

யார் தூய்மையாக வாழ்வதற்கு, தூய்மையாக இருப்பதற்கு எண்ணுகிறார்களோ, அவர்கள் இன்பத்தை யடைவார்கள். எண்ணிய எண்ணியாங்கு எய்திவிட்டால் அங்கு இன்பம் குமிழிவிடும்.

புனிதர்கள்—அமரர்கள் இவர்கள் வணங்கத்தக்கவர்கள்!

ஆணோ பெண்ணோ இவர்கள் யாவரும் புனிதமாக இருக்கத் தக்கவர்கள் ; பிறர் வணங்கத்தக்கவர்கள்!

பிரார்த்தனை செய்கிறவர்கள் உள்ளம் தூய்மையாக இருந்தால் சிறந்த எண்ணங்கள் இருக்கும். சிறந்த எண்ணங்கள் உருவானால், அங்கு தெய்வத் தன்மையாக மாறும்.

நல்லவற்றைக் கேளுங்கள். காதுகள் இதற்காகவே இருக்கின்றன.

ஒளியைப் பாருங்கள், கண்கள் இவற்றைக் காணவே இருக்கின்றன.

கண்காள் காண்மின்களோ!

செவிகாள் கேண்மின்களோ!

அறிவினால் மட்டும் ஆராய்ச்சி செய்யாதீர்கள்.

அறிவுக்கு நன்மை-தீமை தெரியும். ஆண்டவனைக் காணும் பொறுமை இருக்காது.

அன்பு இருந்தால், நம்பிக்கை இருந்தால் நமக்கு ஆண்டவனைக் காண ஆசை பிறக்கும். ஆண்டவன் மீது ஆசை இருந்தால் தீமை மறையும். நன்மை உயரும்! செயல் பெருகும். சிந்தனை உயரும்.

செயலும் சிந்தனையும் நன்மையும் எங்கு பிறக்கிறதோ அங்கே தெய்வம் சிரித்து விளையாடும்.

நீரோடு உப்பு இரண்டறக் கலந்துவிடும். நெருப்போடு கற்பூரம் ஐக்கியமாகிவிடும். இதே போன்று மெய் உணர்வுள்ள நாம் இறைவனுடன் கலக்க வேண்டும்.

நீருறும் உப்புப் போலும்
நெருப்புறு பளிதம் போலும்
ஏருறு வடிவத் தண்ணல்
இடத்துத்தன் மனங்கலப்ப.

(குசேலோபாக்கியானம்).

கிளியின் பக்தி

கிருஷ்ண தேவராயர் கிளி ஒன்று வளர்த்து வந்தார். அந்தக் கிளிக்குக் கடவுள் நாமாவளியைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

இராமா, கிருஷ்ணா, கோவிந்தா, அச்சுதா, ஆனந்தா, கேசவா, கோபாலா—இவ்வாறு அது சொல்லும். இவ்வாறு கிளி சொன்னதும் அரசர் அதற்கு வெல்லம் கொடுப்பார்.

கிருஷ்ண தேவராயர் சபையில் தெனாலி ராமனும் இருந்தான். அடிக்கடி ''கிளியின் கடவுள் பக்தியைப் பாருங்கள்! கடவுள் தன்மையைக் கிளி அறிந்திருப்பது போல மனிதர்கள் அறியவில்லை'' என்று சபைக்குச் சொல்லுவார்.

-'மகாராஜா! கிளிக்குக் கடவுள் பக்தி இல்லை. அதுக்கு வெல்லத்தின் மீது பக்தி'' என்று சொன்னான் விகட ராமன்.

''கடவுளின் திருநாமங்களைச் சொல்லாமல் கிளியைத் தடுத்து விடு பார்க்கலாம்'' என்றார் அரசர்.

''அரசர் சித்தம் அதுவானால் நடப்பது நடக்கட்டும்'' என்றான்.

மறுநாள் — விகடன் தெனாலிராமன் கிளியின் கூட்டுக்குள் பூனையை அடைத்து அதனைக் கட்டிப் போட்டு வைத்தான். பூனையைக் கிளி பார்க்கும்; பூனை கிளியைப் பார்க்கும். கிளியைப் பூனை பிடிக்க முடியாதபடி, பூனையைக் கயிறு கட்டி வைத்தான்.

கூட்டுக்குள் பூனை வந்த விநாடி முதல் கிளி பூனையை மறந்து விடவில்லை. கோபாலா, கோவிந்தா, அச்சுதா, அமரா, வாசுதேவா, ராமா, கிருஷ்ணா எல்லாப் பெயர்களையும் மறந்துவிட்டது. கிளியிடம் பயம் குடி கொண்டிருந்தது.

அரசர் ''கிளியே! பகவான் நாமத்தைச் சொல்'' என்றார்.

'-க்கி க்கி க்கி!'' என்று அலறியது. பயந்து கத்தியது.

கிருஷ்ண தேவராயருக்கு அனுபவ அறிவு வந்தது. ''தெனாலி ராமா! பட்சி பறவை— ஆடு மாடுகளுக்குக் கடவுள் பக்தி இல்லை. உண்மையான பக்தி மக்களுக்குத்தான் இருக்கும். ஒப்புக் கொள்கிறேன்'' என்று ஒப்புக் கொண்டார்.

''அரசே! மக்களில் பலரும் லாபத்தைக் கருதி ஆண்டவன் நாமாவளியைச் சொல்வார்கள். வெல்லத்துக்காகக் கிளி நாமாவளி சொன்னதுபோல மக்களில் சிலர் சொல்வார்கள். பயமின்றி முழு நம்பிக்கையுடன் சொல்லும் மக்களே சிறந்தவர்கள்'' என்று விகடன் தெனாலிராமன் உணர்த்தினான்.

பலமா நலமா?

சும்மா இருப்பதைவிடப் படித்து ஆனந்தப் படுவது நன்மை செய்யும்.

படித்து ஆனந்தப்படுவதை விட, அதனைச் செயல்படுவது அனுபவத்தையும் ஆனந்தத்தையும் மிகுதியாகத் தரும்.

சொற்களை அறிந்து இன்புறுவது ஒருநிலை. செயல்களைச் செய்து இன்புறுவது மேலான நிலை.

ஒரு சமயம் நமக்கு நன்மை செய்யும் உணவுகள், உண்மைகள் சில சமயம் தீமை செய்யலாம். உடலுக்கு இன்பம் தருகிறவை குடலுக்குத் தீமை செய்யலாம்.

நமக்குள் ஆசையோ பேராசையோ இருக்குமானால் தக்கவை, தகாதன போன்று தோற்றம் தரும்.

இதேபோன்று தகாதன தக்கவை போன்றும் தோற்றம் தரும்.

ஆசையை அறுத்து விட்டு உண்ணலாம்; உறங்கலாம்; தக்கவை எது தகாதன எது வென்று ஆராய்ச்சி செய்யலாம். ஆசையைக் கடப்பதும் அறுத்தெறிவதும் மிகப் பெரிய சித்துக்கள்.

உடல் பலமாக இருக்க வேண்டுமென்று சாப்பிடுகிறவர்கள் உடல் நலத்தோடு இருக்க முடியாது.

உடல் நலத்தோடு இருக்க வேண்டுமென்று சாப்பிடுகிறவர்கள் உடல் நலத்தோடு என்றுமே இருக்க முடியும்.

பலத்தை நம்புவதை விட நலத்தை நம்புவது நன்மை தரும்.

ஏக்கத்தை விடத் தூக்கம் பயனுள்ளது.

படிப்பை நம்புவதை விட, பண்பை நம்புவது மேலும் நன்மை.

அறிவை விட அன்புஇன்னும் பலமானது.

தீய உணர்ச்சியைவிட, தூய உள்ளம் சிறப்பானது.

உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கமெனும்
தறி நிறுவி உறுதி யாகத்
தள்ளரிய அன்பென்னும் தொடர்பூட்டித்
தளைப் படுத்தித் தறுகண் பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணை என்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை
நினைந்துவரு வினைகள் தீர்ப்பாம்.

—திருவிளையாடற் புராணம்.

## மதிப்புரை

தேவி தோத்திரங்கள்:

இது, திருச்சிராப்பள்ளி, உறையூர், அறுவை வணிகர், 'பசிப்பிணி மருத்துவர்' திரு மு. ஆ. அருணாசல முதலியார் அவர்கள், தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்கள் அனைத்திலும் உள்ள அம்பிகைகளின் மீது, அன்புகூர்ந்து பாடிய அழகு மிக்க பக்திப் பாடல்களின் தொகுப்பு நூல்! தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்கள், அவற்றின் சுவாமி அம்பாள் பெயர்கள், தலவரலாற்றுக் குறிப்புகள், செல்லும் வழி என்பன அனைத்தும், இதன்கண் தொகுத்துத் தரப் பெற்றுள்ளன. பாடல்கள் நல்ல இனிய எளிய நடையில், சொற் சுவை பொருட் சுவைகள் அமைந்து, திருமுறை மணம் கமழ்கின்றன. திருமுறைகளைப் பயில்வதும் பாடுவதும், பாடுகின்ற ஓதுவார்களுக்குப் பொருள் வழங்கிப் போற்றுவதும், இந்நூலாசிரியரின் சிறப்பியல்புகளாகும். திருச்சிராப்பள்ளி, திருவானைக்கா, வயலூர், பவானி, திருஈங்கோய்மலை முதலிய சிவாலயத் திருப்பணிகளுக்குப் பொருள் வழங்கியதுடன், திருப்பைஞ்ஞீலியில் அப்பர் சுவாமிகள், சிவபிரான் அளித்த கட்டமுது உண்டு தண்ணீர் பருகிய திருக்குளத்தைப் பெரும் பொருட் செலவில் கருங்கல் கட்டடமாகக் கட்டி, அங்கே சோறளித்த விநாயகர் பிரதிட்டை செய்து, குடமுழுக்கு விழாவும் செய்து வைத்த, தருமசீலர் இந்நூலாசிரியர்! இவர் அறுவை வாணிகத் தொழில் புரிபவராயினும், நல்ல தமிழ்ப் புலமையும், கவி பாடும் திறனும், சிறந்த சிவ பக்தி நலங்களும் செறிந்து திகழ்வது, மிகவும் வியந்து போற்றற்குரியதாகும். 200 பக்கங்களுக்கு மேற்பட்ட சிறந்த இந்த நூல், திருமுறை அன்பர்களுக்கும், தேவி பக்தர்களுக்கும் பெரிதும் பயன்படும். அருள்மொழியரசு கிருபானந்த வாரியார் சுவாமிகள் முதலிய பெருமக்கள் பலர், இந்நூலுக்குச் சிறப்புரை வழங்கியுள்ளனர். விலை குறிக்கப்பெறவில்லை. கிடைக்குமிடம்—: ''**பசிப்பிணி மருத்துவர், திரு மு. ஆ. அருணாசல முதலியார், 30, வண்டிக்காரத் தெரு, உறையூர், திருச்சி-3.**''

—ஆசிரியர்

# நான்முகன் கோயில்கள்

திரு. கே. எஸ். நாகராஜன், M.A.

(முதல்வர், தன்ராஜ் பெய்த் ஜெயின் கல்லூரி, சென்னை.)

கோயில் இல்லாத ஊர் உண்டா? குழந்தை இல்லாத வீடு உண்டா? என்று ஆச்சரியம் ததும்பக் கேட்பது நம் நாட்டுப் பண்டைய வழக்கம். ஒரு சிறு கிராமம் என்றாலும் அங்கே ஒரு கோயில் இருப்பதைக் காணலாம். கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற பழமொழியும் இதனால் எழுந்ததன்றோ! பெரிய ஊரானால் சிவன், திருமால் ஆகியோருக்கான கோயில்கள் இருக்கும். இல்லையென்றால் காளி, மாரி போன்ற கிராம தேவதைகளுக்கும், விநாயகருக்குமாவது கோயில்கள் இருக்கும். விநாயகர் கோயில் இல்லாத ஊர் பெரும்பாலும் இல்லை என்றே கூறிவிடலாம். ஆனால் படைக்கும் கடவுளான பிரம்மாவுக்குக் கோயிலைக் காண்பது அரிதாக இருக்கிறது. பிரம்மாவுக்குக் கோயில் இல்லை என்ற நம்பிக்கை மக்களிடம் பரவியிருக்கிறது. இதைப் பற்றி ஒரு கதையும் வழங்குகிறது. முனிவர்கள் கூடி நடத்திய ஒரு யாகத்தின் பொருட்டுப் பிருகு முனிவர் பிரமனைத் தேடி வந்தார். அப்போது ரஜோ குணம் மேம்பட்டு இருந்ததால் பிரம்மா அவரைத் தக்க முறையில் வரவேற்று உபசரிக்கவில்லை. அதனால் கோபம் கொண்ட முனிவர் 'உனக்குக் கோவிலோ வழிபாடோ இல்லாமல் போகக் கடவது' என்று சபித்தார். இதே முனிவரால் சபிக்கப் பட்டுச் சிவன் லிங்க உருவம் பெற்றார் என்றும் இக்கதை கூறும்.

ஆனால் நம் முன்னோர்கள் பிரம்மாவுக்கு நான்முக வடிவம் சமைத்துப் பல கோயில்களில் வழிபட்டு வந்துள்ளனர். பிரம்மாவுக்கு ஐந்து முகங்கள் இருந்தன என்றும், அவருடைய செருக்கை அழிக்கக் கருதிய சிவனார் அவருடைய சிரங்களில் ஒன்றை அறுத்தார் என்றும், பிரம்மா நான்முகம் ஆனது பற்றி ஒரு கதை வழங்குகிறது. அச்செயலை ''ஊரோடு நாடவை தானறியும்'' என்று திருநாவுக்கரசர் தேவாரத்தில் விளக்கக் காண்கிறோம். இன்னும் சில இடங்களில் நான்முகனுக்கெனத் தனிக் கோயில்கள் உள்ளன. சிலவிடங்களில் அவருக்குத் தனிச் சந்நிதிகள் காணப்படுகின்றன. மேலும் பல சைவ வைணவக் கோயில்களின் வடக்குச் சுற்றுப்புறத்தில் ஒரு புரையில் நான்முகன் வடிவம் காணப்படுகிறது. இவற்றிற்கு முறைப்படி பூசை நடந்து வருகிறது. நாம் இன்று கண்கூடாகக் காணும் நான்முகன் கோயில்களைப் பற்றி ஆராய்வோம்.

(1) நம் நாட்டிலுள்ள நான்முகன் கோயில்களில் மிகவும் பிரசித்தமானது புஷ்கர் என்னும் இடத்தில் உள்ளது. ராஜஸ்தானில் ஆஜ்மீருக்கு வடமேற்கே சுமார் ஏழு மைல் தொலைவில் புஷ்கர் ஏரியும் அதன் கரையில் கோயிலும் காட்சியளிக்கின்றன. இயற்கை அன்னையின் எழில் நிறைந்த அமைதியான சூழ்நிலை அங்கு உண்டு. அவ்வழகான ஏரி இருக்குமிடத்தில் பிரம்மா ஒரு யாகம் செய்தார் என்று சொல்லப்படுகிறது. நான்முகன் கோயில் அழகுடனும் நல்ல பராமரிப்புடனும் வைக்கப்பட்டிருக்கிறது. யாத்ரீகர்கள் பலர் அங்கு வந்து தரிசிக்கின்றனர். அக்டோபர் அல்லது நவம்பர் மாதத்தில் இங்கு நடைபெறும் திருவிழாவில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்கின்றனர்.

(2) வங்காளத்தில் திவார் மாவட்டத்தைச் சேர்ந்த பிண்டாரம் என்ற கிராமத்தில் நான்முகன் கோயில் ஒன்று உள்ளது. அங்கு நாள் தோறும் வழிபாடு சரிவர நடைபெறுகிறது. குஜராத்தில் கேத்பிராம் என்ற பெயரோடு ஒரு பிரசித்தமான கோயில் உண்டு. அதில் நான்முகன் சிலையொன்றே முன்னர் இருந்ததென்றும், பிற்காலத்தில் மற்ற சிலைகளும் அங்கு இடம் பெற்றன என்றும் தெரியவருகிறது. ஆனால், இன்றளவும் நான்முகன் சிலை அழகாக இருக்கிறது. அதற்குச் சரிவர வழிபாடும் நடைபெறுகிறது.

(3) இராஜஸ்தானில் ஸிரோஹி பகுதியில் (பழைய சமஸ்தானம்) வஸந்த நகர் என்னும் ஊரில் ஒரு நான்முகன் கோயில் இருக்கிறது. இது கி.பி. ஏழாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது என்பது வரலாற்று ஆராய்ச்சியாளர் முடிவு. இக்கோயிலிலும் சரிவர வழிபாடு நடைபெற்று வருகிறது. வஸந்த நகரை அடுத்துப் பத்து மைல் தொலைவில் சந்திரவதி என்றோர் ஊர் உண்டு. அங்கும் நான்முகன் கோயில் ஒன்று நல்ல நிலையில் காட்சியளிக்கிறது.

(4) மத்தியப் பிரதேசத்தில் உள்ள வாரங்கல்லுக்கு அடுத்தாற்போல ஓர் இந்துக் கோயில் இருக்கிறது. அதற்கு ஹனங்கொண்டா கோயில் என்று பெயர். அதில் சிறிய வேலைப்பாடுகள் நிறைந்த ஆயிரக் கால் மண்டபம் ஒன்றுண்டு. அதைப் பற்றிப் பெர்கூசன் போன்ற சிற்பத் திறன் ஆய்வாளர்கள் கூறுவதாவது : ''காகதீயர் ஆட்சியில் தோன்றிய மிகச் சிறந்த வேலைப்பாட்டுக்கு இது ஓர் எடுத்துக்காட்டு.'' இம்மண்டபத்தில் ஒரு கல்வெட்டு காணப்படுகிறது. அதன் பொருள் வருமாறு : கி.பி. 1162-ம் ஆண்டில் இராஜ ருத்ர தேவன் என்ற

அரசனுல் பிரம்மா, விஷ்ணு, சிவன் என்னும் மூன்று தெய்வங்களின் வழிபாட்டுக்கென்றே கட்டப்பட்டது இக்கோயில். இதனுல் பன்னிரண்டாம் நூற்றுண்டு வரை கூட நான்முகன் வழிபாட்டுக்கெனக் கோயில்கள் அமைக்கப் பட்டு வந்தன என்பது தெரிகிறது.

(5) பெங்களூரிலிருந்து பம்பாய் செல்லும் இருப்புப் பாதையில் ஹூப்ளி என்ற ரயில் சந்திப்பு உண்டு. அங்கிருந்து மூன்று மைல் தொலைவில் இருப்புப் பாதைக்கு அருகில் உங்கல் என்ற ஊர் இருக்கிறது. அங்கே சந்திர மௌலீசுவரர் கோயில் உள்ளது. இதேகோயிலில் முன்பு நான்முகன் சிலை வைக்கப்பட்டிருந்தது என்றும், வீர சைவம் அப்பகுதியில் தழைத்து ஓங்கிய காலத்தில் அச்சிலை அகற்றப்பட்டுக் கோயில் சிவன்கோயில் ஆக்கப்பட்டது என்றும், அவ்வூர் மக்கள் கூறுகின்றனர். இதைத் தொல் பொருள் ஆராய்ச்சி அறிஞரும் தக்க காரணங் காட்டி விளக்கியுள்ளனர்.

(6) திருக்காளத்திக்குச் செல்வோர் எவரும் அவ்வூருக்குத் தென்புறத்தே உள்ள கண்ணப்பர் கோயிலைப் பார்க்காமல் வருவது கிடையாது. அக்கோயிலில் நான்கு பட்டை அடித்த ஒரு பெரிய கற்சிலை இருக்கிறது. இதுதான் கருவறையில் காணப்படும் வழிபாட்டுருவம். இது நான்முகனைக் குறிக்க எழுப்பப்பட்ட ஒருருவம் என்றும், பிற்காலத்தில் அது சிவபிரானைக் குறிப்பதாகக் கொள்ளப்பட்டது என்றும், தகுந்த ஆதாரங்களைக் காட்டி விளக்குகிறுர் ஜகதீச ஐயர் என்னும் ஆராய்ச்சியாளர்.

ஆதிசங்கரர் நிறுவிய பீடங்களில் சிருங்கேரி பீடம் ஒன்ருகும்.

(7) சிருங்கேரியில் வித்யாசங்கரர் ஆலயம் உண்டு. அழகான அவ்வாலயத்தில் நான்முகனுக்கும் கலைமகளுக்கும் எனத் தனிக் கருவறை உள்ளது. இங்கு தினந்தோறும் பூசை நடைபெற்று வருகிறது. திருவனந்தபுரத்தில் உள்ள வல்லசாலைக் கோயிலில் நான்முகன் சிலை வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு வழிபாடு சரிவர நடக்கிறது. மலையாளத்தில் உள்ள திருநாவாய் என்னும் ஊரில் நான்முகனுக்கு எனத் தனிக் கோயில் ஒன்று இருக்கிறது. தினந்தோறும் வழிபாடும் ஆண்டுக்கு ஒருமுறை திருவிழாவும் தவருமல் இங்கு நடந்து வருகின்றன.

(8) திருவரங்கத்திலிருந்து சுமார் 3 மைல் தொலைவில் உள்ள உத்தமர் கோயிலில் நான்முகனுக்கென்று ஒரு தனி சந்நிதி உண்டு. இன்னும் அங்கு நடக்கும் சித்திரைத் திருவிழாவில் மற்ற தெய்வங்களோடு நான்முகனும் ஊர்வலமாக வருவதைக் காணலாம். நான்முகன் செப்புச்சிலை மிக அருமையான வேலைப்பாடு அமைந்தது. கும்பகோணத்தில் இராமசுவாமி கோயிலுக்கு அடுத்த பகுதியில் பிரம்மாவுக்குத் தனிக் கோயில் இருக்கிறது. அதை அடுத்தாற் போல் உள்ள கடை வீதிக்குப் பிரமன் கடைத் தெரு என்ற பெயர் இன்றும் வழங்குகிறது.

(9) திருவையாற்றுக்குத் தென்பால் உள்ள திருக்கண்டியூரில் அமைந்த கோயில் அட்ட வீரட்டானங்களுள் ஒன்று. பிரமனுடைய செருக்கை அழிக்கச் சிவனுர் ஒரு சிரத்தைக் கொய்தது இத்தலத்திலேயே என்று தலவரலாறு கூறுகிறது. இங்குள்ள கோயிலில் நான்முகன் சிலை மிக அழகாக அமைந்துள்ளது. தலையொன்றை இழந்தாலும், இங்கு எழுந்தருளியுள்ள பிரம்மனுக்குத் தனிச் சிறப்பு உண்டு. மற்ற இடங்களில், உள்ளவர்களுக்கு இல்லாத பேறு இவருக்குக் கிடைத்துள்ளது. அப்பர் சுவாமிகளுடைய தேவாரத்தில் இவர் இடம் பெற்றிருக்கிறுர் என்பதே போதாதோ! ''வேதம் நான்கும் தெரிந்து முதல் படைத்தோன்'' என்றெல்லாம் அவரால் போற்றப் பெறுகிறுர்.

(10) பிரம்மாவின் அழகிய கற்சிலைகள் திருவொற்றியூர், திருவையாறு, கொடுமுடி, மாயூரம் ஆகிய தமிழ் நாட்டுத் தலங்களிலும், ஹளெபீடு, சொபாரா, ஐஹொளே போன்ற பிறவிடங்களிலும் உள்ளன. உலோகத்தாலான சிலைகள் சென்னைப் பொருட்காட்சிச் சாலையில் உள்ளன. இவை பெரும்பாலும் நின்ற திருக்கோலத்தில் நான்கு முகங்கள் (சுவருக்கு ஒட்டினற் போலிருந்தால் மூன்று முகங்கள் தெரியும்), நான்கு கைகள், தலையில் சடை, உறுப்புக்களில் அணிகலன்கள், பூணூல், அரைஞாண், மேல் இரண்டு கைகளில் ஜபமாலை, அல்லது தாமரை அல்லது தருப்பைக் கட்டு, கீழிரு கைகளில் இடக்கை இடுப்பிலும், வலக்கை அபயக் குறிப்பு அல்லது வரதக் குறிப்புடன் — இவ்வாருக அமைந்துள்ளன. இத்தகைய அழகிய சிலைகளையும், கோயில்களையும், கலைக் கண்ணுடன் நோக்கி ஆராய்ந்து, நல்ல நிலைமையில் இருக்கப் பராமரிப்பது நம் கடமை. படைப்புத் தொழிலைச் செய்யும் முதல்வனுக்கு வழிபாடு செய்வது சாலச் சிறந்ததாகும்.

***

## மதிப்புரை

சங்கற்ப நிராகரணம் :

இந்நூல், சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினன்கனுள் ஒன்றும், உமாபதி சிவாசாரியர் (கி.பி. 1313) இயற்றியதும் ஆகும். இதன்கண் மாயாவாதம், ஐக்கியவாதம், பாடாணவாதம், பேதவாதம், சிவசமவாதம், சங்கிராந்தவாதம், ஈசுவர அவிகார வாதம், நிமித்த காரண பரிணமவாதம், சைவவாதம் முதலிய பல கொள்கைகளை எடுத்துரைத்து (சங்கற்பம் செய்து), அவற்றின்கண் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அழகுற மறுத்துரைப்பதனுல் (நிராகரணம் செய்வதனுல்), இந்நூலுக்கு இப்பெயர் அமைந்தது. தத்துவ ஞான ஆராய்ச்சிகளில் ஈடுபாடு உடையவர்களுக்கு, இந்நூல் ஒரு பெரும் கலைக் களஞ்சியம் ஆகும்.

தருமபுர ஆதீனத்தின் 26-ஆம் குரு முதல்வர்—சீலத்திரு சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுளக் குறிப்பின்படி, சைவப் பெரியார், இராவ் சாகிப் திரு நல். முருகேச முதலியார், பி.ஏ. அவர்கள், இந்நூலை ஆங்கிலத்தில் அழகுற மொழி பெயர்த்து இயற்றியுள்ளார்கள். திரு. முதலியார் அவர்களின் சைவ உணர்வும், சித்தாந்த நூற் பயிற்சியும், சிறந்த ஆங்கில மொழிப் புலமையும், அறிவாராய்ச்சித் திறங்களும் நாடு அறிந்தவையாகும். அவர்களால் நன்கு இனிது மொழி பெயர்க்கப் பெற்றுள்ள இவ்வாங்கில நூல், தருமையாதீன குரு பூசை விழாவில், அண்மையில் சிறப்பு மலராக வெளிவந்துள்ளது. அறிஞர்களுக்கும், சைவ சித்தாந்த அன்பர்களுக்கும், இந்நூல் பெரிதும் பயன்படும். சிறந்த நல்ல அழகிய பதிப்பு. **விலை ரூபாய் 3.50.** கிடைக்கும் இடம்: **''மானேஜர், ஞானசம்பந்தம் அச்சகம், தருமபுர ஆதீனம், மாயூரம், தஞ்சை மாவட்டம்.''**

—ஆசிரியர்

# மணிமொழிகள்

(திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்)

1. இறைவன் உருவம் நாமம் குணம் குறி யாவும் இல்லாத பரம்பொருள். ஆனால் அப் பரமபதி உயிர்களை உய்விக்கும்பொருட்டு அருளுருத் தாங்குகின்றான். கருணைதான் அவனுடைய வடிவம்.

2. தண்ணீர் அதிகமாகக் குளிர்ந்தபோது கட்டியாக (ஐஸ்) ஆகின்றது. மீண்டும் அது தண்ணீராகக் கரைந்துவிடும். அதுபோல் கருணையின் மிகுதியால் இறைவன் எல்லையற்ற அருளேயொரு திருமேனியாகக் கொள்கின்றான். அவ்வடிவம் மாயா சம்பந்தமானதன்று ; ஏழு தாதுக்களாலானதன்று.

3. ''எங்கும் நிறைந்தவரே! நான் எனக்காக இவ்வுலகில் வாழாமல் ஈசனுக்காகப் பற்றற்ற தொண்டுகளைச் செய்து, எனது ஐம்புலன்களை அடக்கி மனத்தை ஒரு நிலையில் நிறுத்தி, ஆணவ மலத்தை ஒழித்து, என்னை அறிந்து ஆத்மா பரமசாந்த நிலையை அடையக் கருணை புரிவீராக. உமது கருணையால் எனக்கு சந்தர்ப்பங்களையும் தைரியத்தையுங் கொடுத்து எனது முயற்சி நன் முயற்சியாகக் கருணை புரிவீராக'' என்று இறைவனைத் துதிப்பாயாக.

4. ''எல்லா உயிர்களிடத்திலும் உம்மை எனக்குக் காட்டி எவ்வுயிர்க்கும் என் மனதினாலும் வாக்கினாலும் காயத்தினாலும் எவ்வித தீமையும் செய்யாமல் வாழும்படியாகவும், என்னிடத்தில் அன்பு செய்கின்றவர்களிடத்திலும், அன்பு செய்யாதவர்களிடத்திலும் நான் அன்பு செலுத்தி வாழும்படியாகவும், எனக்கு இவ்வுலகில் உதவுகின்ற உடம்பு, அறிவு, செல்வம் முதலியவைகள் என்னுடையவைகள் அல்லவென்றும் என்னிடத்தில் அடைக்கலமாக ஒப்புவிக்கப்பட்டவைகள் என்றும் நான் நம்பி வாழும்படியாகவும் அருள் புரிவீராக'' என்று இறைவனை வேண்டுவாயாக.

5. எந்த வேளையும் இறைவனை நினைக்கவேண்டும், அது உன்னால் ஆரம்பத்தில் முடியவில்லையானால் மூன்று வேளைகளில் தவறாமல் நினை ;

1. எழுந்தவுடன் இறைவனை ஒரு கணமாவது நினை. ''இறைவனே! இன்று நான் நல்வழியில் நிற்க அருள் செய்'' என்று தொழு.

2. உணவு உட்கொள்ளும்போது நினை. ''இறைவனே! இந்த உணவினால் எனக்கு நல்ல அறிவும் அன்பும் உண்டாகஅருள் புரி'' என்று தொழு.

3. படுக்கும்போது நினை. ''இறைவனே! இந்த உறக்கத்திலே உன்னுடைய எண்ணமே நிற்க அருள்'' என்று தொழு.

6. கடவுள் அகக்காட்சியில் காணத்தக்கவர். ஆனால் அப் பரமபதி உன் அகக்காட்சியில் தோன்றவில்லை. தோன்றாமையால் இல்லையென்று கூறாதே. கலங்கிய தண்ணீரில் சந்திரனுடைய தோற்றம் தோன்றாது. தோன்றாமையால் சந்திரனே இல்லை என்பது அறிவுடைமையாகுமா?

உன் உள்ளம், கோபம், சூது, வாது முதலியவைகளால் கலங்கியிருப்பதனால் பரம்பொருளின் காட்சியைக் காண முடியவில்லை. ஆனபடியால் உன் உள்ளம் தெளியட்டும்.

7. இறைவன் உன் உள்ளத்தில் எழுந்தருள வேண்டுமானால் உன் உள்ளம் தூய்மையாக இருக்க வேண்டும்.

குப்பை நிறைந்த இடத்தில் நீ இருக்க அருவருப்புக் கொள்வாயன்றோ?

அதுபோல் காமம், கோபம், வஞ்சனை, சூது, புலை, கொலை, பொய் முதலிய அசுத்தங்கள் நிறைந்த உள்ளத்தில் இறைவன் இருக்க மாட்டான்.

ஆனபடியால், சாந்தமாகிய பசுவின் சாணத்தால் மெழுகி, அன்பு என்ற சந்தனம் தெளித்து அறிவு என்ற விளக்கேற்றி, உண்மை என்ற தூபம் கமழ வை; இறைவன் எழுந்தருளுவான்.

8. உன் உடம்பின் இரு பகுதிகளையுங் காண வேண்டுமானால் நீ என்ன செய்கின்றாய்?

இரண்டு கண்ணாடிகட்கு நடுவே நிற்கின்றனையன்றோ? அதுபோல் பரஞானம் அபரஞானம் என்ற இரு கண்ணாடிகளினால் இறைவனுடைய ஞான வடிவைக் காணலாம்.

9. கோயிலில் புறக்கண் கொண்டு கண்ட இறைவனை உள்ளமாகிய கோயிலில் உள்ளக் கண்ணால் காண முயற்சி செய். இறைவனது சொரூபம் உனது உள்ளக் கமலத்தில் விளங்குவதாக. அந்தக் காட்சிதான் சிறந்த காட்சி. அக்காட்சியால் வரும் இன்பத்தை வேறு எதனாலும் பெற முடியாது.

10. விளக்குக்கு ஒரு நிறமுமில்லை. ஆனால் பல நிறங்களுடைய கண்ணாடிக் கூட்டுக்குள் அவ்

விளக்கு எரிகின்றது; பச்சை நிறமுடைய கண்ணுடியின் பக்கம் நின்று பார்த்தால் பச்சையாகவும், சிவப்பு நிறமுடைய கண்ணுடியின் பக்கம் நின்று பார்த்தால் சிவப்பாகவும், நீல நிறமுடைய கண்ணுடியின் பக்கம் நின்று பார்த்தால் நீல நிறமாகவும் தோன்றும். நிறமில்லாத விளக்கு கண்ணுடியால் நிறத்தைத் தாங்கியது போல் தோன்றுகிறது. அதுபோல் சாதகன் எந்த எந்த வடிவாக ஆண்டவனை வழிபடுகின்ருனே இறைவன் அந்தந்த வடிவைத் தாங்கி அருள்புரிகின்ருன்.

11. இறைவனிடம் நீ நின்று அன்பு செய்யும் போது, ''ஆண்டவனே! உலகத்திலுள்ள எல்லா உயிர்களும் இன்புற அருள் புரிக'' என்று வேண்டு; அப்படிக்கின்றி, ''என்னைக் காப்பாற்று'' என்று மட்டும் வேண்டாதே. உலகத்தில் உள்ள உயிர்களை எல்லாம் காப்பாற்று என்று வேண்டுவாயானுல் அவ்வுயிர்களில் நீயும் ஒருவன்தானே?

என் வயலுக்கு மழை பொழியவேண்டும் என்று வேண்டுவதை விட உலகமெல்லாம் மழை பொழிய வேண்டுமென்று வேண்டவேண்டும். உலகமெங்கும் மழை பொழிந்தால் உன் வயலிலும் அம்மழை பொழியுமன்ருே?

12. கடவுளை வணங்கும்பொழுது, ''இதைக் கொடும்'' ''அதைக் கொடும்'' என்று கேட்காதே, உனக்கு வேண்டிய யாவும் அவரே தருவார். உனக்குள்ள குறைகள் சொல்லாமலேயே அவருக்குத் தெரியும். கொடுப்பதிலும் உலோப குணமில்லாதவர் ; எல்லாம் அவருடைமை ; அவர் எல்லாமுணர்ந்தவர் ; கருணைக் கடல்; யாவும் அருளவல்லவர். ஆதலில் இறைவனை அன்பினுல் வணங்கு. அவரிடம் வியாபாரம் பண்ணுதே.

13. உலகில் சிறந்த பொருள்கள் ஒன்ருேடு ஒன்று கூடுவதனுல் ஒரு இனிமை, சுகம் உண்டாகின்றது. பாலுந் தேனும் கூடுவதனுல் சுவை அதிகப்படுகின்றது ; உணவுப் பொருள்களும் ஒன்றுடன் ஒன்று கூடிச் சுவையாகின்றன. அதேபோல் கணவனும் மனைவியுங் கூடி இன்புறுகின்றனர். அந்த இன்பம் அனுத்துணையாயது. இனி பரம்பொருளாகிய பதியுடன் ஆன்மா கூடுவதனுல் வரும் இன்பமே பேரின்பம். அந்த இன்பத்தையடைய முயற்சி செய். இறைவனேடு ஏகபோகமாய் இருகு.

14. கண்ணுக்கு அணிகலம் (ஆபரணம்)
கண்ணேட்டம் (தாட்சண்யம்)
காதுக்கு அணிகலம் நல்ல கேள்வி.
வாக்குக்கு அணிகலம் சத்தியம்.
கரத்திற்கு அணிகலம் தான தருமம்.
மனத்திற்கு அணிகலம் தியானம்.

15. நீ உடம்பை வளர்க்க முயற்சி செய்வதோடு உயிரையும் வளர்க்க முயற்சி செய் ; ஏனெனில் உயிர் சிறந்தது ; உயிரில்லாத உடம்பை யாரும் பேணுவதில்லை; உயிர் நீங்கியவுடனே உடம்பை மண்ணிலே புதைத்துவிடுகின்றனர் ; அல்லது எரித்துவிடுகின்றனர். ஆதலினுல் இந்த உடம்புக்குள் உறையும் உயிருக்கு உறுதி தேடு.

16. நல்ல உணவுகளை உண்பதனுல் உனது உடல் வளரும்.

நல்ல நூல்களைப் படிப்பதனுல் உனது உணர்ச்சி வளரும்.

நல்ல உள்ளத்துடன் சதா இறைவனை நினைப்பதனுல் உனது உயிர் வளரும்.

ஆதலினுல் உடம்பையும், உணர்ச்சியையும், உயிரையும் வளர்த்துக் கொள்.

17. அறிவிலும் ஆற்றலிலுஞ் சிறந்த ஆன்ருேர்களைத் துணையாகக் கொண்டு ஒழுகு. அதனுல் உனது வாழ்வு உயர்ச்சியுறும். துன்பத்தில் அழுந்தமாட்டாய்.

கொடியானது உயர்ந்த மரத்தைப் பற்றிச் சுற்றிக் கொள்ளுமானுல் வானம் வரை உயர்கின்றது. இல்லையேல் மண்ணில் படர்ந்து காலினுல் மிதிபடுகின்றது.

19. துன்பங்களுக்கெல்லாம் பெரிய துன்பம் அறிவில்லாதவர்களோடு பழகுவதேயாகும்.

இன்பங்களுக்கெல்லாம் பெரிய இன்பமாவது அறிஞர்களோடு பழகுவதே.

அறிஞரோடு பழகும்போது உண்டாகும் இன்பம் இமையவருலகிலுமில்லை. மொழிக்கு மொழி தித்திக்கும் இனிய மொழிகளும் அறிவுரைகளும் அறிஞரிடம் உண்டாகின்றன. அவற்ருல் உன் உள்ளம், உயிர், உணர்ச்சி ஆகிய அனைத்துங் குளிரும்.

18. நிரம்பவும் படிப்பதை விட, படித்தபடி நின்று ஒழுகுவதற்கு முயற்சி செய். படிப்பது உணவு உண்பது போலே ; ஒழுகுவது உணவு செமிப்பது (ஜீரணமாவது) போலே; உணவு நிரம்ப உண்டாலும் செமிக்கவில்லையானுல் என்ன பயன்? செமிக்காத உணவு துன்பஞ் செய்கின்றதன்ருே? ஆதலினுல் சிறிது கற்ருலும் கற்றவண்ணம் நிற்க வேண்டும்.

ஓதலின் நன்று ஒழுக்கமுடைமை.

20. உனக்கு ''சரி'' என்று பட்டதனையே ''சரி' என்று முடிவு கட்டாதே.

இன்று ''சரி'' என்று உனக்குத் தோன்றிய ஒன்றே நாளை ''தவறு'' என்று தோன்றும்.

உனது அறிவு வளர்கின்ற அறிவு ;

பூரணமாக வளர்ந்து அருளறிவு பெற்ற தீர்க்கதரிசிகள் கூறிய நியதியையும் நியாயங்களையுங் கடைப்பிடித்து வாழ்வாய்.

21. நீ எப்போதும் பெரியோரைத் துணை கொள்.

கல்லின் தன்மை தண்ணீரில் முழுகிவிடுவது; கட்டையின் தன்மை தண்ணீரில் மிதப்பது. சிறிய கல்லோ பெரிய கல்லோ தண்ணீரில் போட்டால் தண்ணீருக்குள் முழுகி அழுந்திவிடும்.

ஆனால் ஒரு கல்லைப் படகுமேல் வைத்தால் கல் தண்ணீரில் மிதந்து செல்லுகின்றது.

அதுபோல் அறிவாற்றலால் ஆன்ற பெரியோர்களை நீ அடுப்பாயானால் உனது அறிவாற்றலுக்கு இயலாத பெரிய கருமங்களை நீசெய்து முடிப்பாய்.

22. கற்பதும் கேட்பதும் இறைவனை யடைவதற்கே. கல்வியின் பயன் அதுவே ; பட்டம் பெறுவதற்கென்றும், சிறந்த அறிவாளி என்று பிறர் மெச்சுவதற்கென்றும், கூட்டத்தினின்று மொழிக்கு மொழி தித்திக்க இனிமையாகவும் சதுரப்பாடாகவும் பேசுவதற்கென்றும் படிக்காதே.

கல்வியின் பயன் கடவுளை யறிதல்.

23. நீ இரவில் படுக்கும்போது, ''நாம் இன்று காலை கண்விழித்து எழுந்தது முதல், இப்போது கண்ணுறங்கப் படுக்கும் இது வரை என்ன என்ன நன்மைகள் புரிந்தோம்? நம்மால் இன்று யாருக்கு என்ன பயன் உண்டாகியது? மனத்தாலே வாக்காலே காயத்தாலே நாம் இன்று செய்த நலங்கள் யாவை?'' என்று எண்ணு.

24. இரவில் தூக்கம் வந்தாலொழியப் படுக்கையில் படுக்காதே.

அவ்வாறு படுத்தாயானால் நெடுநேரம் வரை தூக்கம் வராமல் புரண்டுகொண்டு பலப்பல தீய நினைவுகளும், ஆசைகளும் உண்டாகச் செய்யும்.

தூக்கம் வராதபோது அறநூல்களைப் படி ; தூக்கம் வந்தவுடன் படுத்து உறங்கு.

காலையில் விழிப்பு வந்தவுடன் எழுந்துவிடு. சோம்பலாக விழித்துக்கொண்டு படுக்கையில் படுத்துப் புரளாதே.

25. நூல் தட்டிக் கோணலை நீக்கிய மரங்கள் மாளிகைகளிலும் கோயில்களிலும் நிழலில் — கட்டிடத்தில் திகழ்ந்து எண்ணெய் பூசிப் பளபளப்புடன் இருக்கும். அதுபோல் நீதி நூல்களைத் தட்டி மனத்தின் கோணலை நீக்கிய மனிதர்கள் உயர்ந்த பதவிகளில் அமர்ந்து பல்லோராலும் மதிக்கப் பெறுவர்.

நூல் தட்டிக் கோணலை நீக்காதவைகள் விறகுத் தொட்டியில் வெய்யிலில் கிடந்து, மழையில் நனைந்து அடுப்பில் எரிக்கப்படும். அதுபோல் அறநூல்களுடன் பழகாதவர், பல்லோராலும் பழிக்கப்பட்டுத் தாழ்வடைவர்.

26. குடும்பம் ஒரு தருவைப் போன்றது. அதற்கு வேர் மனைவி; அடிமரம் கணவன் ; கிளைகள் மக்கள் ; இலைகள் அன்பு ; மலர்கள் கருணை ; பழங்கள் தருமம்.

பலப்பல பறவைகட்கும் மனிதர்கட்கும் நிழல் தந்து தரு உறைவிடமாக உதவுவது போல் இல்லறத்தான் எப்போதும் பிறருக்கு உதவியாக இருக்க வேண்டும். மனத்தாலும், வாக்காலும், உடம்பினாலும் பிறர்க்கு நன்மை செய்.

27. இல்லறத்தவனாகநீ இருப்பாயாகில் உனது மூல தனத்தைக் காப்பாற்றி அதன் மூலம்வரும் வருவாயை நல்ல வழியில் செலவிடு. அப்படிச் செய்வாயாயின், உனது மூலதனம் அழியாது, அதனால் நீ செய்யும் நல்லறம் தொடர்ந்து நடைபெறும்.

மாலை கட்டுபவன் செடிகளை வைத்துக் கொண்டு மலருந்தோறும் மலர்களை எடுத்துத் தொடுத்து விற்பது போலே, செடி மூலதனம்; மலர் அதன் வருவாய்.

கரி வியாபாரி மரத்தை வெட்டிச் சுட்டு விடுகிறான் ; மூலம் அழிந்து விடுகின்றது. அது போல் இருக்கக் கூடாது.

28. பெண்களை ஆண்கள் காவல் புரிவதனால், பெண்மை தாழ்ந்ததன்று. மென்மையை வன்மை காவல் புரியும். வன்மைக்கு மென்மை அடங்கும். ஆடவர் வன்மையுடையவர், மகளிர் மென்மையுடையவர். அதனால் பெண்மையை ஆண்மை காவல் புரிகின்றது.

தங்கம் மென்மையானது ; இரும்பு வன்மையானது. வன்மையான இரும்புப் பெட்டியில் மென்மையான தங்கத்தை வைத்துக் காப்பாற்றுவார்கள். காவலிலிருக்குந் தங்கந் தாழ்ந்ததென்று உலகங் கருதுகின்றதா? உய்த்துணர்க.

29. நம்முடைய பழைய தரும நூல்களில் பெண்களுக்குச் சந்யாசம் விதிக்கவில்லை. மனைவி சற்று ஏறுமாறாக இருந்தால் கூறாமல் சந்யாசங்கொள் என்று ஆணுக்கு விதித்திருக்கின்றது. சந்யாசம் ஒரு கடின வழி. அந்தக் கடின வழியை மென்மையான பெண்மை தாங்குவது துன்பம்.

அன்றியும் சந்யாசம் என்றால் எல்லாவற்றையும் நன்றாக விடுவது என்பது பொருள். பிறந்த ஊர், உறவினர், வீடு, நண்பர் அனைவரையும் விட்டு நாதனை நாடிச் செல்வதுவே சந்யாசம். ஒரு பெண்ணும் திருமணம் ஆனவுடன் ஊர், வீடு, சுற்றம், நண்பர் அனைவரையும் விடுத்து நாதனுடன் செல்லுகின்றாள். அதுவே அவளுக்குச் சந்யாசம்.

30. கண்ணுக்குத் தெரிந்த இந்த உலகிற்குச் சேவை செய்வதோடு, கண்ணுக்குக் காணாத கடவுளுக்கும் சேவை செய்.

ஏன் எனில், உன் மனைவியைக் காப்பாற்று வது மிக மிக அவசியம். ஏன்? அவள் உன் வாழ்க்கைத் துணைவி. இம்மைக்கும் மறுமைக் கும் அவள் உனக்குத் துணைவியாக நிற்கின்றாள். மனைவி உனக்குச் செய்யும் பணிவிடைகள் கண்ணுக்குத் தெரிந்தவை.

ஆனால், தவமிருந்து, கருவுற்று, பெற்று, பாலூட்டி, மருந்து கொடுத்து, தான் பத்திய மிருந்து செய்த தாயின் உதவிகள், உனது கண் ணுக்குக் காணாதவை. ஆதலின் கடவுள் தாய் போன்றவர். உலகம் மனைவி போன்றது.

31. நீ உண்பது பசியை நீக்குவதற்கு மட்டு மன்று; பசியாறுவதுடன் அந்த உணவினால் உடம்புக்கு வலிமையும், உளத்திற்கு நற்பண் பும் நற்குணமும் உண்டாக வேண்டும். உணவி னால்தான் நற்குணங்கள் எய்துகின்றன. ஆகார நியமம் மிக அவசியமானது. அறிவையும் அன் பையுங் கெடுக்கக் கூடிய ஆகாரத்தை அருந் தாதே. தூய உணவையுண்டு தூய குணங்களை வளர்த்துக் கொள்.

32. உனது மனைவி மக்களுக்கு நிரம்பவேண்டும் என்று பொய்யும் வஞ்சனையும் சூதும் செய்து பொருளைத் தேடாதே. அப்படித் தேடுவதனால் நீ தேடிய பொருள் மனைவி மக்களை யடைந்து அவர்களுக்குத் தீமையை விளைவிக்கின்றது. அதனால் வரும் பாவ மூட்டை உன் உயிருடன் தொடர்ந்து வருகிறது. உடம்புக்குச் சில ஆண்டுகள் தொடர்புபடும் மனைவி மக்களுக் காகத் தீய வழியில் பொருள் ஈட்டி வைத்து விட்டு, நீ கணக்கற்ற பாவத்தைச் சுமந்து கொண்டு போவது எத்துணைப் பெரிய மடமை? எண்ணிப் பார். அறநெறியில் பொருளை ஈட்டு.

33. சொல்வதனால் குறைந்து போகும் பொருள் கள் இரண்டு ; அவைகளாவன : புண்ணியமும் பாவமுமாகும். நீ செய்த புண்ணியங்களை — தருமங்களை நீயே எடுத்துச் சொல்வதனால் புண்ணியம் குறையும்.

நீ செய்த பாவங்களை நீயே பிறரிடம் கூறு வதனால் பாவம் குறையும்.

குறைய வேண்டியது பாவம் ; நிறைய வேண்டியது புண்ணியம்.

ஆதலினால் நீ செய்த புண்ணியத்தைக் கூறாதே ; பாவத்தைக் கூறு.

34. நீ இறைவனுடைய கருணையைப் பெற வேண்டுமானால் அதற்கு வழி ஒன்று உண்டு. அது வெறும் வணக்கமும் வழிபாடும் மட்டும் அன்று ;

துன்பமுற்றுத் துடிக்கின்ற உயிர்களிடம் நீ கருணை செய் ; அவைகளின் துன்பத்தை நீக்கு. நீ பிற உயிர்களிடம் கருணை செய்வதால் கடவுள் உன்னிடங் கருணை செய்வார். கருணை யால் கருணையைப் பெறலாம். இதனை ஒரு பொழுதும் மறவாதே.

35. நீ தேடிய பொருளை வேறு ஊருக்குக் குடி மாறிப் போகும்போது உடன் கொண்டுபோகின் றாயன்றோ. இந்த உடம்பை விட்டு நீ புறப் படும்போது உன் செல்வம் உன்னுடன் வர வேண்டாமா? வரவேண்டுமானால் தருமம் செய். ''எங்காயினும் வரும் ஏற்றவர்க்கு இட்டது''. பூசை செய்யும் நேரம் உன்னுடைய நேரம். தருமஞ் செய்த பணம் உன்னுடையது ; நீ செய்த அறம் கட்டமுதுபோல் உனது பெரிய யாத்திரையில் இனிது உதவுகின்றது.

36. பொருளைச் சேகரிப்பதாலும் பெண்ணை மணந்து கொள்வதனாலும், மக்களைப் பெறுதலி னாலும் நீ துன்பத்தை நீக்கிக் கொண்டு இன் பத்தையடைய முடியாது.

நெய்யினால் நெருப்பணைக்க முடியாது. துன்பமாகிய நெருப்புக்கு மனைவி மக்கள் பொருள் முதலியன நெய் போன்றவை.

போதும் என்ற திருப்தி உனக்கு என்று உண்டாகின்றதோ அன்று இன்ப மாளிகையின் முற்றத்தை நீ அடைந்தவனாவாய்.

37. நீ பிறருக்குத் தீங்கு செய்யாமல் மட்டும் இருந்தால் போதாது ; நன்மையும் செய்ய வேண்டும்.

வேம்பு, எட்டி, வேல் முதலிய மரங்களும் மருந்துக்கும் விறகுக்கும் பயன்படுகின்றன.

எப்போதும் முடிந்த அளவில் பிறருக்கு உபகாரம் செய். மனம் வாக்கு காயங்களால் ஒல்லும் வகையால் செய்.

38. பாம்பு, தேள், நட்டுவாக்காலி முதலிய பெருந் துன்பத்தைச் செய்யும் உயிர்களைப் போலவும்,

கொசு, மூட்டை, உணி முதலிய சிறு துன்பத்தைச் செய்யும் உயிர்களைப் போலவும் நீ இருக்காதே!

அணில் என்ற உயிரை நோக்கு ; அது ஒருவருக்கும் தீங்கு செய்யாமல் வாழ்கின்றது. சேது பந்தனத்தில் ஸ்ரீ ராமருக்கு உதவி செய் தது. அது போல் வாழ்தல் வேண்டும்.

39. உனது செல்வம் அழியாமலிருக்க வேண்டு மானால் நீ மூன்று காரியங்களைச் செய்யாமல் இருக்க வேண்டும்.

(1) ஏழைகள் கண்களிலிருந்து நீர் வர வொட்டாமல் நடந்து கொள்.

(2) பிறருடைய பொருள் உனக்கு வர வேண்டுமென்று கனவிலுங் கருதாதே.

(3) நியாயம் அல்லாத வழியில் பொருளைச் சேர்க்காதே.

40. மூட்டைப் பூச்சியைப் போல் பிறரை இம்சித்து வாழாதே.

எலியைப்போல் திருடி வயிற்றை வளர்க்காதே.

செல்லைப் போல் பிறர் பொருளைக்கெடுத்து மகிழாதே.

தேனீயைப் போலவும், எறும்பைப் போலவும், உழைத்து உண். அது உனக்கு அமைதியையும், அன்பையும் தரும்.

41. யாசித்து, நெய்யும் பாலும் தயிரும் சேர்ந்த சிறந்த அன்னத்தை உண்பதை விட, உழைத்து உண்ணும் தண்ணீரும் சோறும் சிறந்தது.

வீரமும் புகழுமில்லாமல் மங்கி நெடுங்காலம் இருப்பதைவிட வீரமும் புகழும் பெற்றுச் சிறிது காலம் வாழ்வது சிறந்தது.

உமிக் குவியல் நெடுநேரம் காந்திக் கருகுவதைவிட தைலமுள்ள மரம் ஜொலித்துச் சிறிது நேரம் எரிவது சிறந்தது.

42. உன்னை யாராவது புகழும்போது மகிழ்ச்சியடையாதே ; அதேபோல் உன்னை இகழும் போது கவலையுமடையாதே ; இகழையும் புகழையும் சமமாகக் கருது ; அதனால் உன் மனது அமைதியாக இருக்கும்.

43. பிறர் உன்னை வைவார்களாயின் அவ்வன் சொற்களை இன்சொற்களாகக் கருது.

நீ எக்காரணத்தைக் கொண்டும் எப்போதும் எவ்விடத்தும் பிறரை வன்சொல் கூறி வையாதே.

கிடைத்தது கூழாயினும் அதனை நெய்யன்னமாகக் கருதி உணவு செய்.

பழைய பாயேயானாலும் பஞ்சணையாகக் கருதிப் படு.

கசப்புப் பொருளாயினும் அதனைக் கற்கண்டாகக் கருதி உட்கொள். அதனால் மெய்ப்பதங் காண்பாய்.

44. உனது குற்றங்களை அல்லது குறைகளை ஒருவன் எடுத்துக் கூறினல் உன் மனம் வருந்துகின்றதன்றோ? ஆதலினல் நீ இன்னொருவன் குற்றங் குறைகளைக் கூறாதே; குணங்களைக் கூறு.

குற்றங்களுக்குத் தண்டனை தருபவர் கடவுளேயாவார்.

45. இப்போது நீ செய்கின்ற விவசாயத்தின் பயனை அடுத்த ஆண்டில் நீ அநுபவிப்பாய். நன்கு உழைத்துப் பாடுபடுவாயானல் நல்ல பயன் விளையும். அடுத்த ஆண்டு உனக்கு நலமாக இருக்கும். சோம்பலாக இருந்து பாடுபடாமல் பொழுதுபோக்குவாயானல் அடுத்த ஆண்டில் உனக்கு நன்மையிராது. அதுபோல இந்தப் பிறப்பில் நீ செய்யும் நன்மைகளை மறுபிறப்பில் அனுபவிப்பாய். நன்மை செய்யாது சோம்பியிருந்து, தீங்கு புரிவாயானல் மறுபிறப்பில் உனது வாழ்வு சிறப்படையாது தாழ்வு அடையும்.

46. இராக் காலத்திற்கு வேண்டியதைப் பகலில் தேடி வைத்துக் கொள்.

மழைக் காலத்திற்கு வேண்டியதை மற்றைக் காலத்தில் தேடி வைத்துக் கொள்.

முதுமைக்கு வேண்டியதை இளமையில் தேடிக் கொள்.

மறுமைக்கு வேண்டியதை இம்மையில் தேடிக் கொள்.

47. எந்தக் கூட்டத்திலே பெரியோர்களில்லையோ அது சபையாகாது.

எவர்கள் தருமத்தைச் சொல்லுகின்றதில்லையோ அவர்கள் பெரியோர்கள் ஆகார்கள்.

எதில் உண்மை யில்லையோ அது தருமம் ஆகாது.

எது கரவுடன் கூடியிருக்கின்றதோ அது உண்மையாகாது.

48. நீ உயர்வை யடைய வேண்டுமானல் உன்னை மிகவும் தாழ்ந்தவனுகவே எப்போதும் கருது ; ''நான் மேலானவன்'' என்று நினைந்து தருக்குறுதே. சிறந்தவன் என்று எண்ணுகின்ற எண்ணத்தால் உயர்வடைய முடியாது. ஆதலினல் உன் மனத்தில் தாழ்மை இருக்கட்டும்.

49. ''நாம் ஏன் பிறந்தோம்? எங்கிருந்து வந்தோம்? எங்கே போகவேண்டும்? எங்கே போய்க் கொண்டிருக்கின்றோம்'' என்ற இவ் வினுக்கள் உன் உள்ளத்தில் எழுக. அவைகளை உணர்க. வந்த வேலையைச் செய். வந்த வேலையை மறந்து மயங்கித் திரியாதே.

50. உலகத்திலே நீ இரு. ஆனல் உலகம் உன்னிடத்தில் இருக்கக் கூடாது.

குடும்பத்தில் நீ இரு ; ஆனல், குடும்பம் உன்னிடத்தில் இருக்கக் கூடாது.

உலகமும் குடும்பமும் உன்னிடத்தில் புகுந்தால் நீ அழுந்திவிடுவாய்.

வண்டி மேல் நீ ஏறு ; வண்டி உன் மேல் ஏறக்கூடாது.

கப்பல் கடலில் இருக்க வேண்டும். கடல் கப்பலில் புகக் கூடாது. கடல் நீர் கப்பலில் புகுந்தால் கப்பல் அழுந்திவிடும்.

51. வேறு எந்தப் பிராணிகட்கும் இல்லாத நரையை உனக்கு இறைவன் தந்தது எதன் பொருட்டு என்று சற்று சிந்தித்துப் பார் ; ஏனைய பிராணிகள் உண்பதற்கும் உறங்குவதற்கும் மட்டுமே ஏற்பட்டவை ; மனிதனுகிய உன்னில் உறையும் உத்தமனை அடைய நீ வந்தாய். அதை மறந்தவர்க்கு ஒரு உணர்ச்சி வரும் பொருட்டே இறைவன் நரையைத் தந்தான். நரைக்கத் தொடங்கும் போதாவது உன் ஆவி யீடேறும் நெறியிற் செல்.

—தொடரும்

# தாயுமானவர்

[திரு. பி. வெங்கடேசன்]

செயலாளர், யோகாசனாலயம்.

தமிழ் நாடு செய்த தவப் பயனாக, இம் மண்ணில் வந்துதித்த தவஞானிகளுள் ஒருவரே அருளரசர் தாயுமானவர். அவர் இற்றைக்குச் சற்றேறக் குறைய 350 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பெருந் தகையாளர். அவரது அன்னை யார், கெஜவல்லி அம்மையார், அருட்குணம் கொண்ட உத்தமியார். தந்தையார் கேடிலி யப்பப் பிள்ளை என்பார்; அறமும் அருளும் ஒருங்கிணைந்த சான்றோராவர். அன்று திருச்சி ராப்பள்ளியை அரசாண்ட நாயக்கர் வழிஅரசர் களில் ஒருவரான, முத்துக்கிருஷ்ண நாயக்கரி டத்தில் பெருங் கணக்கராகப் பணியாற்றிய இவர், திருச்சிராப்பள்ளியில் கோயில் கொண் டிருக்கும் தாயுமானேசுவரப் பெருமானை, நாள் தோறும் சிந்தை அவிழ்ந்து, சின்மயமாக நின்று வழிபட்டு வேண்டியதின் காரணமாக, இறை வன் இவரது அன்புக்கிரங்கி அழகியதொருஆண் மகவைக் கொடுத்தருளினர். தாயுமானவப் பெருமானின் திருவருளால் பெற்ற குழந்தை யாதலால், ''தாயுமானவர்'' என்றே பெற்றோர் பெயரிட்டழைத்தனர்.

தாயுமானவர், தக்க வயதை எய்தின போது, காண்போரைக் கவர்ந்திழுக்கும்கவர்ச்சி மிக்க கட்டழகராகத் திகழ்ந்தார். தமிழ்—வட மொழி இலக்கியங்களில் ஆழ்ந்த புலமை பெற்ற வித்தகராக விளங்கினர். ஒழுக்க சீலராகவும், தியான மோனத்தில், தனி மோகம் கொண்ட தவயோகியாகவும் திகழ்ந்தார்.

கேடிலியப்ப பிள்ளையின் மறைவுக்குப் பின்பு, அரசர் தாயுமானவரை அழைத்து அவ ருடைய தந்தையார் விட்டுச் சென்ற பணியைத் தொடருமாறு பணிந்தார். அரண்மனையிலேயே பணியானாலும், அந்தரங்கத்திலேஇறைவனிடத் தில் அளவற்ற பெருங் காதல் கொண்டிருந் தவர், நம்முடைய தாயுமானவர்.

ஓர் நாள், அவர் வழக்கம் போல் ஆலயம் சென்று பெருமானை உளம் ஒன்றி வழிபட்டுத் திரும்புகையில், இறைவன் குருமூர்த்தமாக எழுந்தருளிச் ''சும்மாஇரு'' என்ற ஒரு வார்த் தையின் உண்மையை, தனது திருக்கரத்தின் சைகையால் சொல்லாமல் சொல்லிமறைந்தார். செங்கதிரோன் தோன்றியவுடன், செந்தாமரை மலர்வது போல், குருவருள் கிடைக்கப் பெற்ற நாள் முதல், தாயுமானவர், மனம் பழுத்த மாண்புடையவராகி, முன்னைவிடப் பன்மடங்கு அருள்தாகம் கொண்டலையும் சிவப் பித்தரானர்!

இந்நிலையில், அரசரை நாடி வந்த காலன், அவரைக் கணத்தில் கவர்ந்து சென்றுவிட்டான். எனவே, அரசி மீனாட்சி ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தார். எண்ணெயும் திரியும் கொண்ட மங்கள விளக்கொளியின், செம்பவள நிற அழகில், மயங்கி விழும் விட்டில் பூச்சியைப் போன்று, தாயுமானவரின் அழகுத் திருமேனி யைக்கண்டு, மனம் மயங்கி நின்றார் அரசியார். தாயுமானவரோ அரசியாரின் அறியாமையை உணர்ந்து, அரண்மனை வாசம் மேலும் நீடித் தால், மனமாயைக் கன்மம் திரும்புமோ, தொடுவழக்காய்ச் சென்மம் வருமோ என அஞ்சி, அவருடைய அருமைச் சீடர் அருளைய ருடன் அந்நகரை விட்டு நீங்கலாயினர்.

இறைநாட்டத்தில் சென்றவரை, இல்லறத் தாராகச் செய்திட விரும்பி, அவருடைய தமை யனர் சிவசிதம்பரம், அவரைப் பின் தொடர்ந் தார். மரபு மாறாதிருக்க இல்லறம் ஏற்க வேண்டுமென மன்றாடி வேண்டினர். ''ஏற்றுக் கொள்'' என்று தனது உள்ளுணர்வு உணர்த்தி யதை, உலக நாயகனின் நல்லாணை என உணர்ந்து, மங்கையர்க்கரசியாம் மட்டுவார் குழலம்மையாரின் மணாளனானர். சிறிது காலம் செவ்வனே சுழன்று வந்த இல்லறச் சக்கரம், ஒரு மைந்தனை ஈன்றெடுத்த பின், அம்மையா ரின் மறைவால் நின்று விட்டது. இது தடுத் தாட்கொள்ளும் இறை செயலோ, அல்லது ஊழ் வினையோ எனச் சிந்தித்தவாறு, மகன் கனக சபாபதிக்குத் தக்க கல்வி புகட்டக் கூறித் தமை யனரிடம் ஒப்புவித்து, மீண்டும் அருளையருடன் பேரொளி நாட்டத்தோடு புறப்பட்டுச் சென்றார்.

தமிழ் நாட்டில், அருளாளர்களின் திருப் பாதங்கள் பட்ட தெய்வத் திருத்தலங்கள் பலவும் சென்று மனம் ஒன்றி நின்றார். அருள் நிரம்பிய சித்தர்களைக் கண்டு வணங்கி அவர் களது நல்லாசியைப் பெற்றார். முடிவில் இராமநாதபுரம் போந்து, பெரியதொரு மர நிழலின் கீழமர்ந்து, சிந்தை ஒன்றிய தியான நிலையில், சிவானந்த அருட் பேரொளியில், சிவத்துடன் இரண்டறக் கலந்தார். அத்திரு விடம் இன்றைக்கும் அருள் ஆலயமாகத் திகழ் கின்றது. அடிகளார் மறைந்த காலம் ஏறக் குறைய கி.பி. 1,662, தை விசாகத்தன்று எனலாம். சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாகச் சுவாமிகள் இப்பூவுலகில் வாழ்ந்திருந்தார் என அறிகிறோம்.

வாழ்ந்த காலங்கள் கொஞ்சமேயாயினும், இம்மண்ணுலக மாந்தர் உய்வான் வேண்டி, தாயுமான அடிகளார் பதித்துவிட்டுச் சென்ற அடையாளச் சின்னங்கள், சொற் சுவையும் பொருட் சுவையும், அருட் சுவையும் நிரம்பிய தெய்வீகத் திருப் பாடல்களாக மிளிர்கின்றன. சொற்சுவையில், தீந்தமிழில் இலக்கிய இன் பத்தைப் பருக முடிகின்றது. பன்மொழிப் புலமை வாய்ந்த இவர், தனது தாய்மொழித் தமிழினிடத்தில் கொண்ட தனிப் பற்றையும் அதன் இலக்கிய இனிமையையும் உலகோர் அறியும் வகையில் ''கன்னல் அழகெனவும்'' எனும் பாடலில் ''அறியாமை அறிவு எனும் இரு பகுதியால் ஈட்டு தமிழ், என் தமிழினுக்கு இன்னல் பகராது, உலகம் ஆராமை மேலிட்டு இருத்தலால் இத் தமிழையே சொன்னவன்'' என சுவைப்படச் சொல்கிருர்.

அடுத்துப் பெருட்சுவையில்,

''ஒளியே, ஒளியின் உணர்வே,
உணர்வின் உவகை பொங்கும்—
களியே, களிக்குங் கருத்தே,
கருத்தைக் கவளங் கொண்ட—
வெளியே, வெளியின் விளே சுகமே....''

என்ற பாடலில் கடலின் ஆழத்தில் பதிந்துள்ள முத்தைக் காட்டிலும், ஆழ்ந்த பொருட்செறிவு அமைந்துள்ளதைக் காணலாம்.

''காகமானது கோடி கூடிநின்ருலும் ஒரு
கல்லின் முன் எதிர் நிற்குமோ?
கர்மமானது கோடி முன்னே செய்தாலும்
நின் கருணைப் பிரவாக அருளைத் தாகமாய்
நாடினவரை வாதிக்கவல்லதோ?''

எனச் சுவாமிகள் குறிப்பிடுவது போன்று, எவ்வளவு ஆழ்ந்த கருத்தாயினும் அதனை அனு பவத்தில் காண வேண்டும் என்ற அருட்பசி நமக்கு ஏற்படுமேயானல், மிக எளிதில் அக் கருத்தின் உட்பொருள் நமக்குப் புலப்படும் என்பதில் ஐயமில்லை.

கோடிக் கணக்கான நூல்களைப் புரட்டிப் புரட்டிப் படித்து, மனனம் செய்தாலும் அறிய முடியாத ஆழ்ந்த அருட் கருத்துக்களை, குருவின் ஒருரையால் உணர முடியும் என்பதை ''ஒரு ரையால் வாய்க்கும் உண்மைக்கு ஓர் அனந்தம் நூல் கோடிப் பேருரையால் பேசில் என்ன பேரும் பராபரமே'' என்று சுவாமிகள் தெளிவு படக் கூறுவதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

அருட்சுவைக்காகப் பார்ப்போம்,

''நினைவொன்று, நினையாமல் நிற்கின் அகம் என்பார் நிற்கும் இடமே அருளாம், நிட்டை அருள் ஒட்டும், தனையென்று மறந் திருப்ப, அருள்வடிவானது மேல் தட்டி எழுந் திருக்கும், இன்பம், தன் மயமே அதுவாம், பினையொன்றுமில்லை. அந்த இன்பமெனும் நிலையும் பெற்ருரே, பிறவாமை பெற்ருர்.'' இப்பாடலில் எளிமையும் இனிமையும் நிறைந்து வெட்ட வெளியில் அருள் மேகம் சூழ்ந்து நிற் பதைக் காணலாம். நம்முடைய தாயுமானவர் இந்நிலையில் உறுதியுடன் நின்று, அருள் மழை யில் நனைந்து ஆனந்தம் பெற்ருர் என்பதனை ''அருள்பழுத்த பழச் சுவையே, கரும்பே, தேனே, ஆரமிர்தே, என் கண்ணே'' என இறைவனை விளித்துப் பாடுவதினின்றும் விளங்கிக் கொள்ளலாம்.

தாயுமானவப் பெருமானின் பாடல்களை நன்கு தெரிந்து கொள்வோர், படித்துச் சுவைத்து அறிந்து கொள்வோர், கருத்தோடு கருத்தாய்க் கலந்து உள்ளவாறு உணர்ந்து கொள்வோர், அதுவாக நின்று அதனை உணர்ந்து அனுபவிப்போர், யாவரும் அவரவர்தம் பக்குவ நிலைக்கேற்பத் தமக்குள் அருள் வெள்ளம் அலை புரண்டு வருவதனை உணர்வார்கள் என்பதனைச் சொல்லவும் வேண்டுமோ? இன்றைக்கு அடி களார் அருளிய பாடல்களில் நமக்குக் கிடைத் திருப்பது 1,450 பாக்களுடன், வண்ணம் ஒன்றும், அகவல் ஒன்றும்தான். இந்த அருள் மணிப் பெட்டகத்தைப் பேணிக் காத்து, நமக்குத் தந்திட்டவர், தாயுமானவரின் அருமைச் சீடர் அருளையர் ஆவர். தாயுமான சுவாமிகளைப் போற்றிப் புகழ்ந்து சிந்திக்குந்தோறும், அருளையரையும் நன்றியு ணர்வோடு நினைவுகூர்வது நம் கடமையாகும்.

மாமுனிவர் தாயுமானவருடைய இலட்சியக் கொள்கை, சமயங்களிடையே சமரசத்தை நிலை நாட்டி, சன்மார்க்கத்தைப் போதித்து, வெளி கடந்த ஒளி வெளியில் வீற்றிருக்கும் பெறும் பேற்றினை அடையச் செய்வதேயாகும். இதனை ''சைவ முதலாம் அளவில் சமயமும் வகுத்து, மேற்சமயம் கடந்த மோன சமரசம் வகுத்த நீ'' என்ற இறைவனை முன்னிலைப்படுத்திக் கூறு வதினின்றும் ''சூரியர்கள் சந்திரர்கள் தோன் ருச்சுயஞ்சோதி பூரண தேயத்துள் பொருந்து நாள் எந்நாளோ'' என்பதினின்றும் அறியலாம். ''மறமலி உலக வாழ்க்கையே வேண்டும், வந்து நின் அன்பர் தம் பணியாம் அறமது கிடைக் கின்''.... என்ற பாடலில் பிறவாமை வேண்டி நின்ற பெருமான், அன்பருக்குத் தொண்டாற்றுகின்ற பேறு கிடைக்குமேயானல் மீண்டும் பிறவி வேண்டும் எனக் கூறுவதினின் றும், தொண்டின் சிறப்புக்குச் சீரியதொரு மகுடம் சூட்டுகின்றதைக் காணுகின்ருேம். அத்தொண்டினல் இன்பம் வரும் வகையினை ''அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டு விட்டால், இன்பநிலை தானே வந்தெய்தும் பரா பரமே'' என்று கூறுவதோடு, தான் துறவியா னுலும், துறவறம் — இல்லறம் இதில் ஏதாவது ஒரு நிலையில் உறுதியுடன் நின்று அருட் செய லாற்றி வந்தால், அதுவே நல்ல அறமாகும் என்பதனை ''சாட்டையிற் பம்பர சாலம்போல், எலாம் ஆட்டுவான் இறையென அறிந்து, நெஞ்சமே தேட்டமொன்று அற, அருட் செய லில் நிற்றியேல், வீட்டறம், துறவறம் இரண் டும் மேன்மையே'' என்ற பாடலால் தெளிவாக் குவதையும் காணலாம்.

''நமசிவய'' எனும் பஞ்சாட்சர மந்திரத்தின் சிறப்பினை ''அஞ்செழுத்தின் உண்மை அதுவான அப்பொருளை, நெஞ்சழுத்தி ஒன்றுகி நிற்கும் நாள் எந்நாளோ'' எனக் குறிப்பிட்ட அடிகளார், அவ்வைந்தெழுத்து முதலில் அரும்பாகி, பின் மலராகி, அதன் பின் காயாகி, முடிவில் கனியாகிக் கனிந்த காலை, பெரிய மோனம் சித்திக்கப் பெற்றுர். இதனுல் இவருக்கிருந்த சமயங்களைப் பற்றிய கருத்துக் குழப்பங்கள், சந்தேகங்கள் அனைத்தும் சூரியனைக் கண்ட பனி போன்று நீங்கலாயின. இதனை ''வேறுபடும் சமயமெலாம் புகுந்து பார்க்கின் விளங்கு பரம் பொருளே! நின் விளையாட்டல்லால் மாறுபடும் கருத்தில்லை, முடிவில் மோனவாரிதியில் நதித் திரள் போல் வயங்கிற்றம்மா'' என்று தமது அனுபவத்தைக் கூறுவதினுல் அறியலாம்.

மகரிஷி எனவும், தவராஜ சிங்கமெனவும், அருள் அரசர் எனவும், சமரச ஞானி எனவும், ஆன்றோர் பெருமக்களால் அழைக்கப்படும் நமது அடிகளார், ஆருயிர்களிடத்தில் அளவற்ற பேரன்பு கொண்டவர் என்பதனை ''எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறென்றறியேன் பராபரமே'' என்பதாலும் ; உயிர்கள் படும் துன்பங்களை யெல்லாம், தானே படும் துன்பமாக ஏற்றுக் கொண்டவர் என்பதனை ''எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணியிரங்கவும், நின் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே'' என்பதாலும், கொல்லாமையைப் பறைசாற்றியவர் என்பதனைக் ''கொல்லாவிரதம் குவலயம் எல்லாம் ஓங்க எல்லார்க்கும் சொல்வது என் இச்சை பராபரமே'' என்பதாலும் உயிரினங்களை யெல்லாம் இறையின் திருவடிவங்களாகவே கண்டு மகிழ்ந்த பெருந்தகையாளர் என்பதனை ''எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய் அங்கிருப்பது நீ அன்றோ பராபரமே'' என்பதாலும் அறியலாம்.

இன்றைக்குத் தமிழகத்தில், சமரச ஞானியாகிய தாயுமானவருக்குச் சென்னை யோகாசன ஆலயத்தினர் ஆண்டுதோறும் சித்திரை முதல் நாளில் விழாவெடுத்துச் சிறப்பித்து வருகின்றனர். தாயுமானவர் விழாவில் இளஞ்சிறுர்களும் பெரியவர்களும் பெருமளவில் சுவாமிகளின் பாடல்களை மனனம் செய்து ஒப்புவிக்குமாறு ஊக்குவித்தும் வருகின்றனர். அதுமட்டுமின்றி, ஆண்டு முழுமையும் நாள்தோறும் பல ஆலயங்களில் ''தாயுமானவரின்'' கொள்கைதனை முழக்க மிட்டு வருவதும் பெருமகிழ்ச்சியோடு, பாராட்டத்தக்கதாகும்.

*வாழ்க தாயுமானவரின் புகழ்!*

*வளர்க அவர்தம் சமரச நெறி!!*

---

## செய்திச் சுருக்கம்

# திருவாசக விரிவுரை நிறைவு விழா

சென்னைத் தியாகராயநகர்த் தருமை ஆதீன சமயப் பிரச்சார நிலையத்தில், கடந்த இரண்டு ஆண்டுக் காலத்திற்கு மேலாக, வாரந்தோறும் திங்கள், வெள்ளிக்கிழமைகளில், ''திருக்கோயில்'' ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்., அவர்களால் நிகழ்த்தப்பெற்று வந்த, திருவாசக விரிவுரையின் நிறைவு விழா, 22—6—76 அன்று செவ்வாய்க்கிழமை, முன்னுள் அறநிலைய ஆணையர், **திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார்**, பி.ஏ., பி.எல். அவர்கள் தலைமையில், மிகவும் சிறப்புற நடைபெற்றது.

முன்னுள் முதலமைச்சர் ''நல்லறங்காவலர்'' **திரு. எம். பக்தவத்சலம்**, பி.ஏ., பி.எல். அவர்கள், ஆசிரியருக்குப் பட்டாடை போர்த்திச் சிறப்புரை வழங்கினுர்கள். சைவ சித்தாந்த மகாசமாஜத் தலைவர் திரு. சி. என். சிங்காரவேலு, எம்.ஏ., திரு. கோ. மு. முத்துச்சாமிப் பிள்ளை, ஐ.ஏ.எஸ் (ஓய்வு), திருமயிலை செல்வநடராஜ முதலியார், புலவர் திரு இலட்சுமிகாந்த ஐயர், சைவபூஷணம் திரு எம்.ஆர். தாமோதர முதலியார், திரு. சோதிகுமார், பி.ஏ., தற்போதைய அறநிலைய ஆணையர் திரு. எம். கே. **பாலசுப்பிரமணியம்**, ஐ.ஏ.எஸ். ஆகியோர் ஆசிரியரைப் புகழ்ந்து பாராட்டிப் சிறப்பித்தனர்.

தருமையாதீனம், மதுரை ஆதீனம், ஸ்ரீகாசி மடம் ஆகியவற்றின் தலைவர்களிடம் இருந்தும், முன்னுள் அறநிலைய ஆணையர் திரு. அ. உத்தண்டராம பிள்ளை, பி.ஏ., பி.எல்., ஐ.ஏ.எஸ் (ஓய்வு), முதுபெரும் புலவர் திரு. புரிசை சு. முருகேச முதலியார், திரு. சி. இராமலிங்கம், எம்.ஏ முதலிய பேரறிஞர்கள் பலரிடமிருந்தும், வாழ்த்துச் செய்திக் கடிதங்கள் வந்திருந்தன.

சமயப் பிரசார நிலையத் தலைவர் தவத்திரு மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், வரவேற்புரையும், நன்றியுரையும் நவின்றுர்கள். ஆசிரியர் திரு ந. ரா. முருகவேள் அவர்கள், பாராட்டுரைகளுக்குத் தக்க மறுமொழி கூறினுர்கள். மங்கல வாழ்த்துடன் விழா இனிது நிறைவெய்தியது. அன்பர்கள் பலரும் விரும்பி வேண்டிக்கொண்டபடி, அடுத்துத் ''திருக்கோவையார்'' வகுப்பு விரைவில் தொடங்கப் பெற உள்ளது.

# சைவசித்தாந்தப் பெருஞ்சான்றோர் *

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,

**முன்னுரை :**

இவ்விருபதாம் நூற்றுண்டில் தோன்றி வாழ்ந்திருந்து தமிழுக்கும் சமயத்திற்கும் அரும் பெரும் தொண்டுகள் ஆற்றிய சான்றோர்கள் பற்பலருள், அருட்டிரு ஞானியாரடிகளும், அருட்டிரு மறைமலை அடிகளாருமே தலைசிறந்து திகழ்பவர்கள் எனலாம். கி.பி. 7-ஆம் நூற்றுண்டில் திருநாவுக்கரசர் பெருமானும், திருஞான சம்பந்தப் பெருமானும் தோன்றி, ஒருவரையொருவர் அன்பிற் போற்றி, நட்பு பூண்டு அளவளாவி, ஒருமித்த கருத்துடன் தொண்டாற்றித் தமிழையும் சமயத்தையும் தமிழக நலங்களையும் போற்றிப் பாதுகாத்து வளர்த்தனர். இவ்வரலாற்றை உண்மையை,

''பாடிய செந்தமிழாற் பழங்
காசு பரிசில் பெற்ற
நீடிய சீர்த்திரு ஞானசம்
பந்தன், நிறைபுக ழான்
நேடிய பூந்திரு நாவுக்
கரசோடு எழில் மிழலைக்
கூடிய கூட்டத்தினுல் உளது
ஆய்த்து இக் குவலயமே''

என, நம்பியாண்டார் நம்பிகள் சிறந்தெடுத்துக் கூறிப் புகழ்ந்து போற்றியிருத்தல் காணலாம். அது போலவே, இவ்விருபதாம் நூற்றுண்டில் தமிழுக்கும் சமயத்திற்கும், திருநாவுக்கரசரைப் போல ஞானியாரடிகளும் *(1873-1942)*, திருஞானசம்பந்தரைப்போல மறைமலை அடிகளும் *(1876-1950)*, தம்முள் மிகவும் அன்பு பாராட்டி நண்பு பூண்டு, ஒருமித்த கருத்துடன் இருந்து, அரும்பெரும் தொண்டுகள் ஆற்றியுள்ளனர்.

ஞானியாரடிகள் தமது உயரிய இணையற்ற சொற்பொழிவுகளால் தமிழும் சமயமும்வளர்த்தருளினர். மறைமலையடிகள் தமது ஒப்புயர்வற்ற ஆராய்ச்சி நூல்களால் தமிழையும் சமயத்தையும் வளர்த்தருளினர். உலகிற்குத் திங்களும் ஞாயிறும் மிக மிக இன்றியமையாதன. ஞாயிறும் திங்களும் இன்றி, உலகம் வாழ்தல் இயலாது. அந்நிலையில், தமிழ் உலகிற்கும் சைவ உலகிற்கும் ஞானியாரடிகள் ஆகிய திங்களும், மறைமலை அடிகள் ஆகிய ஞாயிறும், அறிவொளி வழங்கிப் புரிந்தருளிய நலங்களுக்கு அளவேயில்லை. பழமையிலுள்ள நலங்களைத் தக்காங்குத் தழுவிப் போற்றுதலிலும், புதுமையிலுள்ள நலங்களைத் திறனறிந்து ஏற்று வளர்ப்பதிலும், இவ்விரு பெரும் சான்றோர்களும், இணையற்ற செயல் வீரர்களாகத் திகழ்ந்தனர்.

'' தொன்மையவாம் எனும்எவையும்
நன்றுகா! இன்று
தோன்றியன எனும்எவையும்
தீது ஆகா''

என்பது, இவர்களின் சிறந்த திருவுள்ளக் கிடக்கையாகும். இவ்விரு பெருமக்களுமே,

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே''

என்று திருமூலர் அருளிச் செய்தாற்போல, அவர்தம் அருளுரையினையே தம்முடைய வாழ்வியற் குறிக்கோளாகக் கொண்டு, தமிழ் வாழ்வதற்காகத் தாம் வாழ்ந்தனர், எனக் கூறுதல் பொருந்தும். ஞானியார் அடிகளையும், மறைமலை அடிகளையும் காணவும், பழகவும் எனக்கு இளமையிலேயே ஒரு சிறந்த நற்பேறு வாய்த்திருந்தது.

''அவ்வுதய காலத்தில் உயிர்வாழ்ந்திருந்தால்
அஃதுஒரு பெறலரும் பேறு;
அப்போது இளமையாக இருந்திருக்கப்பெற்றால்
அதனினும் மிக்க துறக்கம் ஏது வேறு?''[1]

(1) " Bliss was it in that dawn to be alive ;
But to be young was very heaven "
—*William Wordsworth*,
On French Revolution

* சென்னைப் பல்கலைக் கழகத்தில், தமிழ்த் துறையின் சார்பில், முன்னாள் துணைவேந்தர் பத்மஸ்ரீ நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள், தலைமையில் நிகழ்ந்த நூற்றாண்டு விழாவில் நிகழ்த்திய சிறப்புச் சொற்பொழிவினைத் தழுவியது. (31—7—1976)

என்னும் கருத்தமைய, வொர்ட்ஸ் வொர்த் என்னும் ஆங்கிலக் கவிஞர் பாடியிருப்பது, ஈண்டு என் நினைவுக்கு வருகின்றது. அப்பெற லரும் பேற்றை எண்ணிப் பெருமிதமும் இறும் பூதும் எய்தி, அவர்களை நினைந்து யான் பணிந்து வணங்குகின்றேன்.

**மறைமலையடிகள் :**

இங்ஙனம் ஞானியாரடிகளைக் கண்டு மகிழக் கிடைத்த வாய்ப்பினும், மிகப் பெரிய அளவில், ஒரு சிறிது அறிவு வளர்ந்த நிலையில், மறைமலை யடிகளுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு (1945—1950), இறையருளால் எளியேற்கு வாய்த் தது. அடிகளார் வாழ்ந்திருந்த பல்லவபுரமும், யான் இருக்கும் சைதாப்பேட்டையும் மிக அணித்தாக இருத்தலும், இதற்குப் பெருந் துணையாயிற்று. நல்ல அரும்பெறல் நண்பர்கள் பலருடன் சேர்ந்து, அடிகளாரின் அருள்வாழ்த் துடன் ''திருவள்ளுவர் செந்தமிழ்ச் சிவநெறிக் கழகம்'' என்னும் பெயரால் கழகம் ஒன்றை நிறுவவும், அதன் வாயிலாக அடிகளாரின்சொற் பொழிவுகள் சிலவற்றை அவருக்குரிய அன்புக் காணிக்கைத் தொகை செலுத்தி ஏற்பாடு செய் யவும், ''மறைமலையடிகளார் மாட்சி'' என்னும் ஒரு சின்னஞ் சிறு நூலைத் தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாண சுந்தரனார் அவர்களின் அணிந்துரையுடன், அடிகளார் மகிழும்படி எழுதி வெளியிடவும், பல நல்ல வாய்ப்புக்கள் எளியேற்கு நேர்ந்தன. அடிகளாரின் தொடர் பே எனது தமிழறிவையும் சைவ நலப் பற்றை யும் வளர்த்து, வளப்படுத்தி வாழ்வளித்தன எனல் மிகையன்று.

**ஆராய்ச்சி நூல்கள் :**

தமிழ், வடமொழி, ஆங்கிலம் என்னும் முப்பெரும் மொழிகளிலும் தேர்ந்து தெளிந்த சிறந்த புலமை வாய்ந்தவர் அடிகளார். தமிழ் உலகில் புதியதோர் ஆராய்ச்சி யுணர்வைத் தோற்றுவித்து ஒரு வகைப் புரட்சி மறுமலர்ச்சி யுணர்வை வளர்த்தருளியவர், மறைமலை யடி களாரே ஆவர். பட்டினப்பாலை ஆராய்ச்சி, முல்லைப்பாட்டு ஆராய்ச்சி, சிவஞானபோத ஆராய்ச்சி, சாகுந்தல நாடக ஆராய்ச்சி, குறிஞ்சிப்பாட்டு ஆராய்ச்சி, திருக்குறள் ஆராய்ச்சி முதலிய நூல்கள் இவ்வுண்மைக்குச் சான்று பகரும். அடிகளார் இயற்றிய ''மாணிக்க வாசகர் வரலாறும் காலமும்'' என்னும் பெருநூல், அரியதோர் ஆராய்ச்சிக் கருவூலமாகும். சைவ சித்தாந்த ஞான போதம், மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை, தொலைவில் உணர்தல், மரணத் தின் பின் மனிதர் நிலை, குமுதவல்லி அல்லது நாகநாட்டரசி, கோகிலாம்பாள் கடிதங்கள், திருவாசக விரிவுரை, சோமசுந்தரக் காஞ்சி ஆக்கம், அறிவுரைக் கொத்து, தமிழர் மதம், திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை முதலிய நூல்கள், அடிகளார் இயற்றிய பயன் மிக்க அரும் பெரும் நூல்களாகும். ஆலிவர் கோல்டு ஸ்மித் என்னும் அறிஞரைப் பற்றிச் சாமுவேல் ஜான்சன் என்பவர் கூறியதுபோல, அடிகளார் தாம் தொட்ட எந்தத் துறையினை யும் பொன் வண்ணமாக்கினர்.

மறைமலை அடிகள் ''ஞானத்தின் திருவுரு வம்''. சேக்கிழார் சுவாமிகள், திருஞான சம் பந்தப் பெருமானைப் பற்றிக் கூறுவதுபோல, ''திசையனைத்தின் பெருமையெலாம் தென் றிசையே வென்றேறவும், அசைவில் செழுந் தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்ல வும்'' அடிகளார் தோன்றியருளினர் போலும். புரை தீர்ந்த பெரும் புலமைச் செல்வர் ஆகிய அடிகளைத் ''தென் சொற் கடல் கடந்து, வடசொற்கு எல்லை தேர்ந்து'' ஆங்கிலத்தின் கரை கண்டவர் (2) எனலாம். திருத்தக்க தேவர் சீவக சிந்தாமணியிற் பாடுமாறு போல ''நாமகள் நலத்தை யெல்லாம் நயந்துடன் பருகித் திகழ்ந்தவர்'' அடிகளார்.

> ''யாவதும்
> கற்றோர் அறியா அறிவினர்; கற்றோர்க்குத்
> தாம்வரம்பு ஆகிய தலைமையர்''

எனத் திருமுருகாற்றுப்படையில், ஆசிரியர் நக் கீரனர் பாடிய வரிகள், அடிகளார்க்கு மிகவும் ஏற்புடையனவாகும். இளங்கோவடிகள் ''இமிழ் கடல் ஞாலம் முழுவதும் போற்றும் தமிழ் முழுது உணர்ந்த தலைமையன்'' என்னும் வரி களும், அடிகளார்க்குப் பெரிதும் பொருந்துவன ஆகும். தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாண சுந்தரனர் அவர்களே, ''அற்றை நக்கீரனும், பிற்றைச் சிவஞான முனிவரும், இற்றை மறை மலையடிகளார் ஆகத் திரண்டு ஓர் உருக் கொண்டு வந்துள்ளனர்'' எனவியந்து போற்றிக் கூறுவரேல், நம்மனோர் கூறுதற்கு யாதுளது?

நெடிய உருவம். திண்ணிய சிவந்த பொன் மேனி. அழகிய இனிய அறிவொளிரும் முகம். சிவம் பழுத்து நீறு ஒளிரும் நெற்றி. குயிலினும் இனிய மெல்லிய குரல். கல்லாடை புனைந்த கவின்மிகு தோற்றம். பழமையும் புதுமையும் ஒருங்கு விரவிய பண்பு நலம். இவையனைத்தும் ஒருங்கினிது வாய்க்கப்பெற்றுத் திகழ்ந்த தோன்றலார்தாம், மும்மொழிப் புலமை வேந்தர் ஆகிய மறைமலையடிகளார்! தனித் தமிழ், அவர்தம் இயக்கம். சைவசித்தாந்தம், அவர்தம் கொள்கை. சிவ நெறி, அவர்தம் வாழ்க்கை. சமரச சன்மார்க்கம், அவர் கடைப் பிடித்த போக்கு. பழந்தமிழர் மெய்ப்பொருள் உணர்வுக் கொள்கைளின் பிழிவாகிய சைவ சித்தாந்தம், உலகெலாம் பரவுதல் வேண்டும் என்பது அவர்தம் வேட்கை.

---

(2) "I have been reading critically not only the plays of Kalidasa and Shakespeare, but also the Commentaries on their plays....especially the very interesting and illuminating shakespearean Commentaries produced by Ulrici, Gervinus, Schlegel, Swinburne, Dowden, Brooke, Bradley, Symons, Hudson, Moulton, Corson, Brandes and others.

In this life no one can experience a pleasure comparable in its height, amount and intensity to the intellectual and aesthetic pleasure which a study of these celebrated commentaries afford. The pleasure given by these is equal only to that yielded by the plays themselves, nay, I may venture to say that it is even a degree higher than that........."

— Maraimalai Adigal

**சைவசித்தாந்தம் :**

பௌராணிக நெறிச் சூழல்களிலும், சமய தத்துவ வாதப் பூசல்களிலும் தட்டுளுப்புப் பட்டுத் தலைமயங்கிக் கிடந்து வந்த சைவ சித்தாந்தக் கொள்கையினை, அறிவியல் அடிப் படையில் இக்கால நிலைக்கு ஏற்ப ஆராய்ந்து விளக்கிப் பரப்புதற்கு முனைந்தவர், மறைமலை யடிகளாரேயாவர். ''மெய்ப் பொருள் நூற்று றையிலும், இயற்கைப் பொருள் நூற்றுறையி லும், அண்மையில் வளர்ச்சி பெற்றுள்ள மேலை நாட்டு முடிபுகள் யாவும், வேறு பிற எந்தப் பழைய அல்லது புதிய சமயத்துக்கோ, மெய்ப் பொருள் நூற் கொள்கைக்கோ உரியனவல்லா மல், சைவ சித்தாந்தம் ஒன்றற்கே யுரிய அடிப் படைக் கொள்கைகள் எல்லாவற்றின் உண்மை யையும் உயர்வையும் மெய்ப்பித்து நிறுவுவ தற்குப் பலவகைகளிலும் முழுவதாக ஒத்து நின்று துணையாக அரண் செய்கின்றன'' (3) என்பது, அடிகளார் தம் நூல்கள் பலவற்றி லும் வற்புறுத்தியுரைக்கும் கூற்றாகும்.

அடிகளார் சமயவுணர்வு மிகுதியும் உடைய தனிப் பெருஞ் சான்றோர் ஆதலின்,

''இலகுறு சமயம் என்னும்
எழிலியல் இறைமைச் சொல்லில்
நிலைபெறு நிதிய வைப்பின்
நிறைவெலாம் நிகழ்த்தற் காமோ?
உலைவில் பொன் வெள்ளி மற்றும்
உலகிலுள் பொருள்கள் எல்லாம்
விலைமதித் திடற்கீ டாகா ;
வியன்பெரு மாட்சித் தாமே.'' (4)

—*தமிழாக்கம்:* **ந.ரா. மு.**

என மேனாட்டினரும் சமயவுணர்வைப் போற்றி வருவதனை, இஞ்ஞான்றை இளைஞர்களுக்கெல் லாம் அடிக்கடி எடுத்துக்கூறி அறிவுறுத்தி அருளுவர் அடிகளார்.

இங்ஙனமே, சைவ சித்தாந்த நூல்கள் கற்பதற்குக் கடினமாகவும் சுவையற்றனவாக வும் உள்ளன எனக் கூறும் கல்லூரி இளைஞர் களுக்கு,

'' எத்தகை இன்ப ஊற்றாய்
இறையருள் நூல்கள் உள்ள !
அத்தகை யவற்றை அந்தோ
அறிவிலார் கடினம் என்பர் !
வித்தகக் கண்ணன் ஊதும்
வேய்ங்குழல் இசைபோல் இன்பம்
மிக்கொளிர்ந்து, அறிஞர்க்கு ஆரா
விருந்தென விளங்கும் நன்றே'' (5)

—*தமிழாக்கம்:* **ந. ரா. மு.**

என்னும் கருத்தமைந்த மில்ட்டனின் கவிதை யை அழகுற எடுத்து இயம்பி, முயற்சியும் விருப்பமும் உடையவர்க்குச் சைவ சித்தாந்த நூல்கள், மிக்க எளிமையும் மிக்க இனிமையும் உடையனவாகவே விளங்கும் எனத் தேற்றுரை யருளிச் செய்வர் அடிகள்.

இலக்கணம், இலக்கியம், தருக்கம், ஆராய்ச்சி, கவிதை, உரைநடை, வரலாறு, கல்வெட்டு, உரைவரைதல், மறுப்பெழுதுதல், புதினம்புனைதல், நாடகம் இயற்றல் முதலிய பற்பல துறைகளிலும், அடிகளார் தமது அறிவு இலச்சினைகளைப் பொறித்தருளியுள்ளார். ''ஒரு சிறு சொற்றொடர் அமைப்பதற்குக் குறைந்தது இருபது நூல்களை ஆராய்ந்தார். இயற்கை எழிற் புனைவுரையாக ஒருவரி எழுதுவதற்குக் குறைந்தது நூறு கல் தொலைவு பயணம் செய்தார்'' என்று, தாமஸ் பேபிங்க்டன் மெக்காலேயைப்பற்றி, வில்லியம் மாக்பீஸ் தாக்கரே என்பவர் குறிப்பிடுவது (6) போன்ற சிறப்பியல்பைப் பெற்றிருந்தவர் ஆசிரியர் மறைமலையடிகளார். அவர் தம் நூல்களும் கருத்துக்களும், பழமை நலமும், புதுமை எழி லும் பொலிந்து, பயில்வாருக்குப் பெரு நலம் பயப்பனவாகும்.

**கவிதைத்திறன் :**

வடமொழியிற் காளிதாசர் இயற்றிய சாகுந்தலம் என்னும் எழில்மிக்க நாடகநூலை அடிகளார் சிறந்த முறையில் தமிழாக்கம் செய்துள்ளார். காளிதாசரின் சாகுந்தல நாடகத்தில், துஷ்யந்தன் சகுந்தலையினைக் கண்டு, அவளது அழகினை வியந்து புகழ்ந்து விதூடகன்பால் உரைப்பதாக வரும் சுலோகத் தினை,

''மோவா மலரோ? நகம் களை
யாத முழுமுறியோ ?
ஆவா கருவி துருவாது
பெற்ற அருமணியோ ?
நாவாற் சுவையாப் புது நறவோ ?
செய்த நற்றவங்கள்
தாவாது ஒருங்கு திரண்டு
வந்தால் அன்ன தையலரே! ''

என்றும், சகுந்தலை துஷ்யந்தன்மேற் காதல் கொண்ட தன்னுடைய மன நிலையினைப் பிரியம்

---

(3) " The recent developments of western philosophy and physical science, go every inch to prove the truth and value of all the fundamental doctrines, that are peculiar only to Saiva Siddhanta and not to any other religion or philosophy, ancient or modern."
—Maraimalai Adigal.
*Saiva Siddhanta as* a *philosophy of Practical knowledge.*

(4) " Religion ! What a treasure untold
Resides in that heavenly word ;
More precious than silver and gold
Or all that this world can afford "
—*William Cowper*

(5) " How charming is divine philosophy !
Not harsh and crabbed as dull fools suppose ;
But musical as is Apollo's lute,
And a perpetual feast of nectared sweets
Where no crude surfeit reigns "
— *John Milton.*

(6) " To write a line of description he travelled hundred miles ; to write a single sentence he consulted at least twenty books"
—*W. M. Thackeray*

வதை, அனசூயை என்னும் தனது இரு தோழியர்க்கும், ஒரு தாமரையிலையின் மேல் நகத்தினால் எழுதிக் காட்டியதாக வரும் சுலோகத்தினை

> ''இரக்கமிலா அரசே! நான்
> என்செய்வேன்? இரவு பகல்
> எரிக்கின்றான் என் உடம்பை
> எழிற் காமன்! நின்மேலே
> பெருக்கின்றது என் காதல்!
> பேதையேன் நின் நெஞ்சம்
> இருக்குமாறு உணர்ந்திலேன்!
> எனக்கதனை இயம்புதியோ?''

என்றும்,மூலத்திற்போன்றே சுவைசிறிதும்குறையாமல், ஷேக்ஸ்பியரைப் பற்றி (''He was more original than all his originals'') என்றாற் போன்ற நிலையில், அழகொழுக மொழி பெயர்த்துள்ள அரும்பெரும் திறன் ஒன்றே, அடிகளாரின் அரிய வடமொழிப்புலமை நலனை இனைத்தென யாவர்க்கும் உணர்த்தப் போதியதாகும்.

மறைமலை அடிகளார் அழகிய உரைநடை எழுதுதலில் மட்டுமேயன்றி, சிறந்த கவிதைகள் இயற்றும் திறனிலும் வல்லவர் என்பதனை, அவர் தமது இளமைக் காலத்தில் யாத்த ''திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை'' என்னும் அரிய கவிதை நூலில்,

> ''உறுபொருள் காண உணர்விலார் மாட்டுப்
> பெறுபொருள் வேண்டல் பிழையால்—
> நறுநெஞ்சே
> ஏந்துமுலை வள்ளி கொழுநன் திருவொற்றிப்
> போந்து குடியிருக்கும் போது''. (1)
>
> நமராய் இருந்து,பின் ஏதிலர்
> ஆவர்; நயமிலரும்
> தமர்ஆவர்; என்னில் தமர்பிறர்
> என்று தகவு சொல்லி
> அமர்ஆடி நிற்றல் வறிது
> கண்டாய்; அலையாழி ஒற்றிக்
> குமராஎன்று ஓதிக் குடந்தம்கொண்டு
> ஏத்தக் குறிக்கொள் நெஞ்சே'' (2)

என்பன போல வரும் அரிய இனிய செந்தமிழ்க் கவிதைகளால், யாவரும் செவ்விதிற்றெளியலாம்.

இவ்வாறே ஆக்சுஃபோர்டு பல்கலைக் கழகத்தின் தத்துவத் துறைப் பேராசிரியர் ஆக விளங்கியிருந்த பேரறிஞர் திரு எப்.சி.எஸ். ஷில்லர் அவர்கள்தாமே வியந்து மகிழும் வகையில், அடிகளார் எழுதிய ''சைவசித்தாந்தம் ஒரு நடைமுறை அறிவுக்கோட்பாட்டுக் கொள்கை'' என்னும் ஆங்கில நூலும் பிறவும், அடிகளாரின் ஆங்கில மொழிப்புலமை மாட்சிமையினைப் பாங்குற விளக்கும். அவர்தம் அரும் பெரும் தமிழ்ப் புலமைத்திறனோ, யாவரும் இனிது அறிந்த தொன்று.

**தண்ணளி :**

இத்தகைய பெருநலஞ் சான்ற அடிகளார் தமிழ் இளைஞர்கள்பால் மிக்க பரிவும் அன்பும் உடையவர். தமக்கு ஓய்விருக்கும் காலங்களில் எல்லாம், தம்பக்கல் அவ்வப்போது போந்து பணிந்து பழகும் தமிழிளைஞர்களோடு கலந்து உரையாடி, அவர்கள் வினவும் ஐயங்களுக்கு ஏற்றபெற்றி தெளிவுரைகள் நல்கி, அவர் மகிழ்விப்பது உண்டு. அக்காலங்களில் தமிழ் இளைஞர்களுக்கு மிகவும் எளியராய், இனியராய் விளங்கித் தண்ணளி புரியும் அவரது இயல்பு,

> ''ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்
> நீர்த்துறை படியும் பெருங்களிறு போல
> இனியை பெரும எமக்கே; மற்றதன்
> துன்னருங் கடாஅம் போல
> இன்னாய் பெரும!நின் ஒன்னா தோர்க்கே!''

எனப் புறநானூற்றில், ஔவையார் அதியமானின் அருமைப்பாட்டினையும், எளிமைத் தண்ணளியினையும் வியந்து போற்றிப் புகழ்ந்திருக்கும் முறையில் அமைந்திருக்கும்.

மறைமலை அடிகள் ''இமிழ்கடல் ஞாலம் முழுவதும் விளக்கும் தமிழ்முழு தறிந்த தனிப் பெரு ஞாயிறு'' அனையவர். தமிழுலகிலும் சமய உலகிலும், அவரையும் அவர் நூல்களையும் அறியாதார் எவருமிலர். ஆதலின் அவைகளைப் பற்றி யெல்லாம் இங்குப் பேசாமல், அப்பெருஞ் சான்றோருடன் யான் பழகிய நாட்களில் நிகழ்ந்த ஒரு சில நிகழ்ச்சிகள் அல்லது பயன்மிக்க உரையாடல்கள் சிலவற்றைப்பற்றி மட்டுமே, இங்குள்ள நேரத்திற்கு ஏற்பச் சுருக்கமாகக் குறிப்பிடுதல் பொருத்தமாகும் என நினைக்கின்றேன் (Anecdotes).

**''தொழுது வாங்கி'' :**

(1) அடிகளார் வாழ்ந்திருந்த பல்லவபுரம் மாளிகைக்கு அவ்வப்போது சென்று, அவரைப் பணிந்து வணங்கி, யான் அளவளாவுவது உண்டு. அப்போதெல்லாம் அடிகளார் தமிழின் பெருமையையும், சைவத்தின் சிறப்பினையும், வைசித்தாந்த நுட்பங்களையும் ஏற்றபெற்றி இடை இடையே அறிவுறுப்பார். அங்ஙனம் அறிவுறுக்குங்கால் உயர்ந்த மேலை நாட்டு ஆராய்ச்சி நூல்களின் கருத்துக்களை எடுத்துச் சொல்லி, அந்நூல்களில் சில பகுதிகளையும் படித்துக் காட்டுவதுண்டு. அவ்வாறு ஒருமுறை படித்துக் காட்டுவதற்காக மேல் மாடியில் நிலைப் பேழையில் இருந்த ஒரு புத்தகத்தை எடுத்து வருமாறு பணித்தார். அதன்படி ஒடோடிச் சென்று நிலைப்பேழையைத் திறந்து உயரத்திலிருந்த அப்பெரியபுத்தகத்தை அந்நூலின் கட்டுக்குலையுமாறு, யான் அதன் முதுகினைப் பிடித்து ஈர்த்து எடுக்க முயன்றேன். புத்தகத்தைப் போற்றுதலில் மிகவும் கருத்துடைய அடிகளார், என் பின்னே வந்திருக்கின்றார். அதனை யான் அறிந்திலேன். யான் புத்தகத்தை எடுக்கும் முறையினைப் பார்த்து, அடிகளார் பதறிப் போனார். என் அருகே வந்து தடுத்து ''இவ்வாறு எடுத்தல் கூடாது; இங்ஙனம் எடுத்தல் வேண்டும்'' எனக் கூறி மென்மையாக அப்புத்தகத்தை எடுத்தார். அப்போது புத்தகத்தை எடுக்கும் முறை, படிக்கும் முறை, கிழியாமலும் அழுக்குப்படாமலும் கிறுக்காமலும் பாதுகாக்கும் முறை, ஆகிய பல செய்திகளைப் பற்றியெல்லாம் நயமாக

விவரித்து உரைத்தார். நாலடியாரில் வரும் ''புத்தகமே சாலத்தொகுத்துப் பொருள் தெரியார் உய்த்தகமெல்லாம் நிறைப்பினும், புத்தகத்தைப் போற்றும் புலவரும் வேறே; பொருள் தெரிந்து தேற்றும் புலவரும் வேறு'' என்னும் பாடலின் பொருள் விளக்கங்களை யெல்லாம் கூறினர். அப்போது சிலப்பதிகாரத்திற் கானல் வரியின் தொடக்க வரிகளைக் கூறுமாறு பணித்தார்.

''சித்திரப் படத்துட் புக்குச்
செழுங் கோட்டின் மலர்புனைந்து
மைத்தடங்கண் மணமகளிர்
கோலம்போல் வனப்பெய்திப்
பத்தரும் கோடும் ஆணியும்
நரம்பும் என்று
இத்திறத்துக் குற்றம் நீங்கிய
யாழ்கையில் தொழுது வாங்கி...''

என்று யான் சொல்லி வந்தபோது, இடையிலே நிறுத்துமாறு பணித்து, ''யாழ் கையில்தொழுது வாங்கி'' என்று வருகின்றதே, வாங்கியவர் யார்? கொடுத்தவர் யார் ? என வினவினர். வாங்கியவள் மாதவி, கொடுத்தவள் வயந்தமாலை என்றேன். வயந்தமாலை ஏவற்பணிப் பெண்ணாகிய சேடியேயேன்றோ? அவளை மாதவி எற்றுக்குத் தொழுதல் வேண்டும்? என வினவினர். வினவை எதிர்பாராத யான், சிறிது தயங்கினேன். உடனே அடிகளார், மாதவி தொழுதது வயந்தமாலையை யன்று, யாழ்க் கருவியையே மாதவி தொழுதாள். இசைத் தெய்வம் அதன்கண் தங்கி உறைவதாகக் கலைஉணர்வு மிக்க மாதவி கருதினள். ஆதலின் அக்கலையுணர்வு நலத்தால், அவள் யாழைத் தொழுதாள். அவள் தொழுதனளோ இல்லையோ, இசைக்கலையுணர்வில் பெரிதும் மேம்பட்டிருந்த இளங்கோவடிகளார், தமக்கு இயல்பாக வாய்த்திருந்த இசைக் கலையுணர்வின் நலத்தால், அங்ஙனம் அருமையாக அருளிச் செய்தார். இவ்வாறே இதற்கு முற்போந்த கடலாடு காதையிலும்,

''வருந்துபு நின்ற வயந்த மாலைகைத்
திருந்து நல்யாழ் செவ்வனம் வாங்கி.''

எனவரும் இறுதி வரிகளிலும், ''செவ்வனம் வாங்கி'' என்று அருளிச் செய்திருக்கின்றார். இதனால் கலைப் பொருள்களைக் கலையுணர்வு மிக்கவர்கள் எவ்வாறு போற்றிக் கையாளுதல் வேண்டும் என்பதனை, உணரலாம் என்று விவரித்து உரைத்தார். இந்நிகழ்ச்சியால் 'சொற்றொறும் இற்று இதன் பெற்றி' என்று நுனித்தாய்ந்து நோக்கிக் கற்றுணர்ந்திருந்த அடிகளின் நுண்மாண் நுழைபுலமும், கலைப்பண்பு நலமும் பிறவும் எளியேற்கு இனிது விளங்கின. மறைமலையடிகளாரின் நிறைபெரும் புலமைத் திறனுக்கு, இஃதொரு சான்றாகும் எனலாம்.

**''கற்றபின் நிற்க'' :**

(2) மறைமலையடிகளார் இயற்றியுள்ள ஆராய்ச்சி நூல்கள் பலவற்றுள், ''தென்புலத்தார் யார்?'' என்பது ஒன்று. அது வடிவாற் சிறியதாயினும் பொருளாற் பெரியது. மிகவும் சிறந்தது. அதன்கண் ''தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை'' என்னும் திருக்குறளில் வரும் 'தென்புலத்தார்'' என்னும் சொல்லுக்குப் பரிமேலழகர், பிதிரர் எனப்பொருள் உரைத்து, ''பிதிரராவார் படைப்புக் காலத்து அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட் சாதி'' என விளக்க உரை வரைந்திருப்பதை, அடிகளார் மறுத்து எழுதியுள்ளார். ஆதலின் அதனை நினைந்து, ஒருமுறை, அடிகளாரிடம் தங்களுக்குப் பரிமேலழகரைப் பிடிக்காதா? அவர் மீது உங்களுக்கு வெறுப்பா? என்று, என் சிறுபிள்ளைத் தன்மையால் விளையாட்டாக வினவினேன். அதுபோது அடிகளார் புன்னகை பூத்த முகத்தினராய் ''அற்றன்று. ஏதோ ஒரு கருத்திற்காக ஓரிடத்தில் ஒருவரை மறுத்தால், அவர்மீது வெறுப்பு என்று எங்ஙனம் கொள்ளலாம்? பரிமேலழகர்பால் எமக்கு மிக்க மதிப்பும் ஈடுபாடும் உண்டு. தமிழ்நூல் உரையாசிரியர்களில் அவர் தலை சிறந்தவர். யாம் அவருடைய உரையினை எம் இளமைக் காலத்தில் மிகவும் ஊன்றிக் கற்று மனப்பாடம் செய்து பயின்றுள்ளேம். எம்முடைய தனித்தமிழ் உரைநடை வளத்திற்குப் பரிமேலழகரின் உரைநடை பெரிதும் வழி வகுத்துக் காட்டித் துணை புரிந்துள்ளது. நுட்பமும் திட்பமும் அமைய உரை எழுதுவதில் பரிமேலழகர் இணையற்றவராவர். சிவப்பிரகாசர், சிவஞான முனிவர் ஆகியவர்களும்கூடப் பரிமேலழகரின் உரையினை நுணுகி ஆழ்ந்து கற்று மதித்துப் போற்றியுள்ளனர்'' என்றெல்லாம் விவரித்து உரைத்தார்.

அப்போது 'கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக' என்னும் குறளைக் கூறுமாறு பணித்து, அதன்கண் வரும் 'கற்றபின்' என்னும் தொடரைச் சுட்டிப் பொருள் யாது? என வினவினர். அந்தோ! யான் என் அறியாமையால், கற்ற-படித்த, பின் - பிறகு என்று பொருள் கூறினேன். 'எளிய பொருள் தானே இது? இதுகூடவா எனக்குத் தெரியாது?' என்பது போல, யான் பெருமிதமாக அத்தொடருக்குப் பொருள் கூறினேன். பலரும் அவ்வாறே உரை எழுதியிருக்கின்றனர். அதனாலேயே அவ்வாறு நான் துணிவாகத் தயங்காது கூறினேன். ஆனால் அடிகளாரோ, அங்கேயிருந்த பரிமேலழகர் உரைநூலை எடுத்து வரச் சொல்லி, அதில் அவ்வுரைப் பகுதியைப் படிக்குமாறு பணித்தார்.

அதன்கண் கற்றபிறகு என்று இல்லாமல், கற்றால் என்று உரை வரையப் பெற்றிருந்தது. 'கற்ற பிறகு' என்பது இருசொற்களாலாகிய பெயரெச்சம் என்றும், 'கற்றபின்' என்பது ஒரு சொல் நீர்மைத்தாய வினையெச்சம் என்றும் அடிகளார் விளக்கினர். 'கற்ற பிறகு' எனக் கொண்டால் உரையில் இருவகையான குற்றங்கள் நேரும். அவற்றை விலக்குவதற்கே, பரிமேலழகர் கற்றால் என வினையெச்சமாக வைத்து உரை செய்தார். 'உண்ட பிறகு வருவேன்' என்றால், உண்ணுதலாகிய தொழில் முடிந்து, வருதல் ஆகிய தொழில் நிகழும். அதுபோலக் கற்றபிறகு நிற்க என்றால், கற்ற

லாகிய தொழிலுக்கு ஒரு முடிவுளது போன்ற குறிப்பு அமையும். 'என்னொருவன் சாந்துணை யும் கல்லாதவாறு?' என்று அருளிச் செய்திருப் பதனுல், திருவள்ளுவரின் கருத்துப்படி, கல்விக்கு ஒரு முடிவு இல்லை. ஆதலின் அவர் தம் திருவுள்ளக் கருத்திற்கு மாருகக் கல்விக்கு ஒரு முடிவு உண்டு போலும் என்னும் குறிப்பு அமையக் 'கற்றபிறகு' என உரைஎழுதப் பரி மேலழகர் விரும்பிற்றிலர்.

மேலும் 'கற்றபிறகு நிற்க' என்ருல், கற் கும்போது நிற்றல் வேண்டா; கற்று முடித்த பின்னரே நிற்றல் சாலும் எனவும் கருத்துக் கொள்ள இடம் அமையும். இவ்விரு காரணங் களுக்காகவே, கற்ருல் என வினையெச்சமாக வைத்துப் பரிமேலழகர் உரை வகுத்தார். இந்த ஓரிடத்தில் மட்டுமேயன்றி, இவ்வாறு வரும் பிற இடங்களிலும்கூட, முன்னெடு பின்முரணு மல், பரிமேலழகர் பொருள் எழுதிச் சென்றுள் ளார். இத்தகைய திட்ப நுட்பம் மிக்க சிறந்த அரிய உரையாசிரியர் பரிமேலழகர் என்று அடிகளார் அறிவுறுத்தருளினுர்.

**கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார்:**

(3) பிறிதொரு சமயம் வேறு ஏதோ பொருள்பற்றி உரையாடிக் கொண்டிருந்த போது ''நூலாசிரியன் வழங்கும் சொற்களுக்கு உரிய பொருள் தெரியாமலே உரைவரைபவர் சிலர்; சொல்லுக்கு மட்டும் பொருள் வரைந்து செல்வோர் சிலர். சொல்லையும் அதற்குரிய பொருளையும் கடந்து சென்று, அவற்றிற்கு அப் பாற்பட்டு நிற்கும் ஆசிரியரின் உள்ளக் கருத்தை ஊடுருவி உணர்ந்து உரைவகுப்போர் சிலர். பரிமேலழகர் வெறும் சொல்லுக்கு மட்டுமே பொருள் எழுதிச் செல்பவர் அல்லர்; சொல் லின் வழியாக ஆசிரியனின் உள்ளக் கருத்தினை உன்னி ஓர்ந்துணர்ந்து உரை செய்பவர்'' என அடிகளார் குறிப்பிட்டார்.

அதற்கு மேற்கோளாகக் ''கற்று ஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர், மற்று ஈண்டு வாராநெறி'' எனவரும் திருக்குறளில் கற்று என்பதற்கு ''நூல்களைப் படித்து' என்ற பொருள் எழுதாமல், பரிமேலழகர் ''உபதேச மொழிகளை அனுபவம் உடைய தேசிகர்பாற் கேட்டு'' என எழுதியிருப்பதன் நுட்பத்தினை விளக்கினுர். 'கற்று' என்னும் சொல், 'கேட்டு' என நேரே பொருள்படாதாயினும், பரிமேலழ கர் அங்ஙனம் எழுதியதற்கு ஆழ்ந்ததொரு காரணம் உண்டு எனத் தெரிகிறது. ''எத்துணை யவாயினும் கல்வி இடமறிந்து உய்த்துணர்வு இல்லெனின் இல்லாகும்'' என்றபடி, மூலத்தின் சொல் 'கற்று' என்றிருப்பினும், அதற்குப் பொருள் ''கேட்டு'' என்பதே என்று, பரிமேலழ கர் உய்த்துணர்ந்து எழுதினர். அங்ஙனம் அவர் உய்த்துணர்தற்குத் துணைபுரிந்தது ''மெய்யு ணர்வு''என்னும் அதிகாரத் தலைப்பேயாகும்(7).

" I have studied now philosophy and juris prudence and medicine and even alas theology, with vision keen, from end to end and y et poor fool, with all my love,, I am no wiser than before "

— *Dr. Faust, Goethe.*

மெய்யுணர்வானது, வெறும் நூற்கல்வி யினுல் வருவதன்று, ''கடல் நீரைப் பருகப் பருக நீர்வேட்கை மிகுமேயன்றித் தணியாது: அதுபோல வறிதே நூல்களைக் கற்கக் கற்க ஐயங்கள் பெருகுமேயன்றிக் குறையமாட்டா. நூல்கள் பலவற்றைக் கற்றும் தெளிய முடி யாத ஐயப்பாடுகளை, நல்லாசிரியன் ஒருவன் கூறும் எளிய சிறிய சொல் ஒன்றே, இனிது போக்கிவிடக்கூடும்'' என்று திருக்களிற்றுப் படியார் என்னும் சிறந்ததொரு, ஞானநூல் கூறுகின்றது. ஓதியோர்க்கு அகப்படாப் பொருளை ஓர்விப்பன, அருளாசியரின் உப தேச மொழிகளேயாகும். ''என்னை ஓர் வார்த் தையுட்படுத்துப் பற்றினுய்; காணுதன எல் லாம் கண்டேன்; கேளாதன எல்லாம் கேட் டேன்'' எனவரும் மணிவாசகர் போன்ற அரு ளாளர்களின் உரைகளால் இவ்வுண்மை வலி யுறும்.

இதனுலேயே மெய்யுணர்வு என்னும் தலைப் பிற்கு ஏற்ப, ஆசிரியர் பரிமேலழகர், 'கற்று' என்னும் சொல்லுக்கு 'நூல்களைப் படித்து' என்று எழுதாமல், ''உபதேச மொழிகளைக் கேட்டு'' என்று உரை வரைந்தார். கேட்பன எல்லாம் மெய்யுணர்வு விளைவிக்காது ஆதலின், ''அனுபவம் உடைய தேசிகர்பால் கேட்டு'' என்று, கேட்பதற்கும் கேட்பிப்பதற்கும் உரிய தகுதியுடையவர்களையும் இத்தகையர் எனச் சுட்டி உணர்த்தினர். இதன் கண்ணும் 'அறிவு டையவர்கள்பால்' என்னுது, 'அனுபவம் உடைய வர் பால்' என்றது உற்று நோக்கி உணரற் பாலது. மேலும் 'அனுபவம் உடைய அறிஞர் பால்' என்னுது 'தேசிகர்பால்' என்றது ஆழ்ந்து சிந்தித்தற்குரியது. அறிவு அனுபவமாகக் கைவரப் பெற்ற ஆன்ருேர்கள்பால், பிறர் மாட்டுக் காணப்பெருத தேசு (தேஜஸ்) என் னும் அருள்ஒளிநலம் மிக்குத் தோன்றுமாத லின், அவர்களையே அணுகிக் கேட்க என்று வலியுறுத்துதற்குத் 'தேசிகர்பால் கேட்டு' என்று எழுதியிருக்கும் மாட்சி பெரிதும் போற்று தற்குரியது. மற்றும் இக்குறளில் 'ஈண்டு' என் னும் சொல் இருமுறை வந்துள்ளது. அவற்றுள் முதலதற்கு 'இம்மக்கட் பிறப்பின் கண்ணே' என்றும், பின்னையதற்கு 'இப்பிறப்பின்கண்' என்றும் எழுதியுள்ள உரை நுட்பமும் உன் னித்து உணர்தற்குரியன,என்றெல்லாம் அடிகள் இனிதெடுத்து விளக்கியருளினுர். 'அனுபவம் உடைய தேசிகர்' (குரு) என்பதுபற்றி அடிகள் கூறிய கருத்துக்களை ஒருவகையில் விளக்குவது போலப் பின்வரும் ஆங்கில மேற்கோட்பகுதி அமைந்திருக்கின்றது எனலாம்.(8).

(8) " A group of students in a Theological College asked a very learned Professor to read the Shepherd's Psalm (Ps. 23). He read it with feeling and beautiful emphasis. Then some one called for a retired Minister to come up and repeat the very same 23rd Psalm. His sweet face shone with an inner light as he said the same words with reverence and meaning. When he had finished, there was not a dry eye in the room. Afterwards one of the students asked the Professor why he with all his great learning, could not produce the profound effect. The professor was honest and humble in his reply : " Well " he said to the young men, " I have studied the Bible and I know all about the shepherd, but you see, our friend knows the Shepherd."

— *Geoffrey Hudson,*
Christianity and the Modern World,
The Hidden Wisdom in the Holy Bible, p. 21.

## நாம் செய்யும் வினைகள் :

மறைமலை அடிகளார், ஆசிரியர் மெய்கண்ட தேவர் வடமொழிச் சிவஞான போதத்தையே தமிழில் மொழி பெயர்ந்து அருளிச் செய்தார் என்னும் கருத்துப்பட, மாதவச் சிவஞான சுவாமிகள் எழுதியிருப்பதனை உடன்படாமல் மறுத்து, சிவஞான போதம் மொழி பெயர்ப்பன்று, தமிழ் முதல் நூலே என்பதனைச் சொற்போர்களுக்கும் எதிர்ப்புக்களுக்கும் சிறிதும் அஞ்சாது நிலைநாட்டியவராயினும், சிவஞான சுவாமிகளிடத்தில் மிக்க பேரன்பும் பெரும் பக்தியையும் உடையவர். சிவஞான சுவாமிகளின் நுண்மாண் நுழை புலனையும், உரைத்திட்ப நுட்பங்களையும் பெரிதும் வியந்து போற்றும் இயல்புடையவர். ஒருமுறை,

''மேலைக்கு வித்தும் ஆகி
விளைந்தவை உணவும் ஆகி
ஞாலத்து வருமா போல
நாம்செயும் வினைகள் எல்லாம்''

எனவரும் சித்தியார் செய்யுளில், ''நாம் செய்யும் வினைகள்'' என்னும் தொடருக்கு ஏனைய உரையாசிரியர்கள் எல்லாம், 'நாம்' என்பதனை உளப்பாட்டுத் தன்மைப்பன்மையாகக்கொண்டு 'மனிதர்களாகிய நம்மனோர்' என்பதுபட பொருள் உரைத்துச் செல்ல, அதனை ஆகு பெயராகக் கொண்டு, 'நாம் என்னும் முனைப் பாற் செய்யப்படுவதாகிய முயற்சிகளெல்லாம்' என்னும் கருத்துப்படச் சிவஞான சுவாமிகள் எழுதியிருக்கும் திறத்தினை, அடிகளார் பெரிதும் வியந்து போற்றினர். 'நாம்' என்பதனை உளப் பாட்டுத் தன்மைப் பன்மையாகக் கொண்டால், ஆசிரியர் அருள் நந்தி சிவமும் நம்மோடொத்த மனித நிலையினரே ஆவர் போலும் எனக் கருத இடம் நிகழும். சிவமாம் தன்மைப் பெரு வாழ்வு பெற்ற அவ்வருட்பெருந்தகையார் நம்மனோரைப் போன்றவரல்லர் ; செம்மையேயாய சிவபதம் பெற்றவர் என்று தெளிவுறுத்துதற் பொருட்டே, அதனை ஆகுபெயராக வைத்துச் சிவஞான சுவாமிகள் பொருள் அருளிச் செய்தனர். மேலும், ''ஒருவர் செய்கின்ற செயல்களெல்லாம் இதம் அகிதம் எனப்படும் ஆகாமிய வினையைப் பயப்பது, அவர் தன்முனைப்பாகிய பசுபோத வயப்பட்டுச் செயற்படும் வழியே ; தன் முனைப்பாகிய பசுபோதம் இழந்து சிவ போதத்தின் வழி நின்று செய்யப்படுங்கால் பிறவிக்கேதுவாகிய ஆகாமிய வினையாக ஆக மாட்டா'' என்னும் சைவசித்தாந்த தத்துவ உண்மையையும் 'நாம் என்னும் முனைப்பு' எனப் பொருள் கொண்டதனால், சிவஞான சுவாமிகள் செவ்விதின் தெளிவுறுத்தி அருளினர் என்றும், அடிகள் விவரித்து உரைத்தார்.

## சீகாழித்துரை :

(5) ஒரு முறை இராமலிங்க அடிகளின் திருவருட்பாவில், ''முத்தியற் சிவிகை இவர்ந்து அருள் நெறியின் முதலரசு இயற்றிய துரையே'' எனவும்; தாயுமான அடிகள், ''சீகாழித்துரையே'' எனவும் துரை என்னும் சொல்லைத் தம்முடைய பாடல்களில் வழங்கி யுள்ளமை பற்றி, நண்பர் ஒருவர் அது தமிழ்ச் சொல்லா? என அடிகளை வினவினர். அப்போது அடிகளார் ''அதனைத் தமிழ்ச் சொல்லாகவும் கொள்ளலாம். ஒரு சொல்லின் மூலம் அல்லது வேர் தமிழெனக் கொள்ள இயலுமாயின், அது பிற மொழிச் சொற்போல ஐயுறக் கிடப்பினும், அதனைத் தமிழ்ச் சொல் என்றே கொள்ளுதல் கூடும். துரை என்னும் சொல் 'துர' (துரத்து) என்னும் மூலம் அல்லது வேரினின்று, செலுத்து ஏவு என்னும் பொருள் உடையதாய், ஏனையோரைச் செலுத்துபவன், ஏவுபவன் என்னும் குறிப்பில் ஒரு தலைவனைக் குறிப்பதாயிற்று. இவ்வாற்றால் அதனைத் தமிழ்ச் சொல் என்றே கோடல் பொருந்தும். திருவாசகத்தில் மணிவாசகராலும் ''இரைமாண்ட இந்திரியப் பறவை இரிந்தோடத் துரைமாண்டவாபாடித் தோள் நோக்கம் ஆடாமோ'' என இச்சொல் வழங்கப் பெற்றுள்ளது. ''அரசனும் செய்வது ஈசன் அருள்வழி'' எனவரும் சித்தியார் செய்யுளிலும் ''அரும் பாவங்கள் தரையுளோர் செயின் தீயதண்டலின் வைத்துத் தண்டத் துரை செய்து தீர்ப்பன் ; பின்பு சொல்வழி நடப்பர் தூயோர்'' என்புழி, இந்தத் துரை என்னும் சொல் பயின்றுள்ளது. இப்பகுதிக்கு உரை வரைந்துள்ள சிவஞான சுவாமிகள், ''துரை—மிகுதிப்பாடு'' என்று எழுதி, மேலைத் திருவாசகச் செய்யுட் டொடரை மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ளார், எனக் குறிப்பிட்டருளினார்கள். இவற்றினாலெல்லாம் அடிகளின் சிறந்த பெரும் புலமையும், ஒப்புயர்வற்ற நினைவாற்றலும், அளப்பரிய ஆராய்ச்சித் திறனும் விளங்குதல் காணலாம்.

## சங்க இலக்கிய மாண்பு :

(6) அடிகளார் பக்கல் சென்று அவர் தம்மைக் கண்டு வணங்கும் பேறு பெற்ற அவ்வொரு சில பயன்மிக்க நாள்களுள், ஒரு நாள் ''தமிழ்ப் புலவர்கள்பால் இயல்பாகக் காணப்படும் இரு பொருள் மொழிகளும், நகைச்சுவையுரைகளும், பிறவும் தங்கள்பால் காணப்படாமைக்குக் காரணம் என்னை?'' என மெல்ல வினவ நேர்ந்தது. அதன் வாயிலாகப் பேச்செழுந்த போது, ''புலமை என்பது அறிவின் முதிர்ச்சி. அறிவோ சொல்லும் பொருளும் என்னும் இரண்டனால் வளர்வது. வெறும் சொல்லறிவைக் காட்டிலும் பொருளறிவே மிகவும் விழுமியது. பொருளறிவு பெறுதல் மிகவும் அருமையாதலின், அது நன்கினிது வாய்க்கப் பெறாதார் வெறும் சொற்களை மட்டுமே அடுக்கிக் 'கட படம்' என்றுருட்டிச் சலசலப்பர். சொல்லறிவு சில பல நூல்களை நெட்டுருச் செய்வதால் உண்டாகிவிடும். ஆனால் 'கேட்பவன் கேடில் பெரும் புலவன், பாட்டவன் சிந்தித்தல் தன்னினும்' என்றபடி, பொருளறிவாகிய சிறந்த நல்லிசைப் புலமையானது சிந்தனையையே அடிப்படையாகக் கொண்டது. ஒரு சிலர் ஒழியப் பெரும்பான்மையான இடைக்காலப் புலவர்கள் சங்ககாலப் புலவர்களைப் போல ஒவ்வொன்றினையும் கூர்ந்து நோக்கி ஆழ்ந்தாராய்ந்தறியும் இயல்பினரல்லர். பல்வேறு காரணங்களால் அவர்தம் புலமை வெறுஞ் சொல்லளவிலேயே

நின்று கழிவதாயிற்று. அதனாலேயே, நடுக் கடலிற் காணப்பெறாத துளக்கமும் அலையெழுச்சியும் கரையோரத்தே மட்டும் காணப்படுதல் போல, அறிவெனும் பெருங் கடலிற் பெரிதும் ஆழ்ந்து சென்று மூழ்கித் திளைத்தின்புற்ற சங்க காலச் சான்றோர்களின் செய்யுட்களிற் காணப்படாத சிலேடை யமகம் திரிபு மடக்கு முதலிய சொல்லணிகள், அக்கடலிடை ஆழச் செல்லாது மேலாகவே மிதந்து, சொல்லறிவு மட்டுமே வாய்ந்த இடைக்காலப் பிற்காலப் புலவர்களின் செய்யுட்களிற் பெருவரவினவாய்க் காணப்படுகின்றன.

யாம் ஏடுது இளமை முதலாகவே சங்க நூற் பயிற்சியில் தலைப்பட்டு, அவற்றின் சொற் [illegible] நலங்களில் திளைத்திருந்தமையின், அவ்வியல்பு எமக்கு இயற்கையாக எம்மையறியாமலே அமைந்து விடுவதாயிற்று. எதனையும் நுணுகி ஊன்றி நோக்கி ஆராயும் சிந்தனைத் திறனுடையோர்க்கு, இயல்பாகவே வெறும் சொல் விளையாட்டுக்களில் கருத்துச் செல்வதில்லை. வேடிக்கைக் குறும்புப் பேச்சுக்களும், வெறும் நகைப்பூட்டும் பயனில் உரைகளும், ஆழ்ந்த சிந்தனையாளர்கள்பால் இயற்கையாகவே அமைவதில்லை. இளங்கோவடிகள் ஆழ்ந்த சிந்தனை மிக்க அரும்பெரும் கவிஞர். தவநலஞ் சிறந்த சான்றோர். தூய நல்ல எழிற் கலையுணர்வுகளில் தோய்ந்தவர். அவர் இயற்றியருளிய நூல் ஆகிய சிலப்பதிகாரம், ஒரு பெரும் நாடகக் காப்பியம். நாடகங்களுக்கு நகைச்சுவை இன்றியமையாதது. நகைவேழம்பர்கள் (Clowns, Comedians) நாடகங்களில் பெரிதும் இடம்பெறுவர். ஷேக்ஸ்பியர் (Falstaff) முதலிய நகைவேழம்பர்களைத் தம் நாடகங்களில் படைத்துள்ளார். காளிதாசரும் தமது சாகுந்தல நாடகத்தில் மாதவ்யன் என்னும் விதூடகனைப் படைத்திருக்கக் காண்கின்றோம். இங்ஙனம், நாடகத்திற்கு மிகவும் இன்றியமையாத நிலையிற் கருதப் பெறுகின்ற நகைச்சுவை நடிகன் எவனையும், இளங்கோவடிகள் தமது நாடகக் காப்பிய நூலில் படைக்கா தொழிந்தார். அதற்குக் காரணம், அவரது சீரிய ஆழ்ந்த சிந்தனையியல்பும், தவவொழுக்க நலமுமே யாகும் எனலாம்'' எனப் பலப்பல அரிய கருத்துக்களை விளக்கினர். அடிகள் கூறிய சொற்களாற் பெற்ற உணர்ச்சியின் கிளர்ச்சியால் 'சங்க இலக்கிய மாண்பு' என்னும் ஒரு கவிதை நூலும் என்னால் இயற்றி வெளியிடப் பெற்றது. இவ்வாறே சிவஞான சித்தியார் சுபக்கத்தில் வரும் பிரமாண இயல் என்னும் பகுதியில் நேர்ந்த பல ஐயப்பாடுகளை அடிகளார் தெளிவுறுத்தியதன் பயனாகவே, ''தருக்க இயல் விளக்கம்'' என்னும் ஒரு சிறு நூலும், யான் எழுதி வெளியிட முடிந்தது. இங்ஙனம் அடிகளார் என்பாற் செய்தருளிய தண்ணளிகள் எத்தனையோ பலப்பல.

**முடிவுரை :**

இருபதாம் நூற்றாண்டின் தமிழ் வரலாற்றில் ''மானுடம் இவர்தாம் அல்லர், நற்[illegible] தெய்வம்'' எனத் திகழ்ந்திருந்து, அரும் பெரு[illegible] தொண்டுகள் ஆற்றியுள்ள மறைமலையடிகளுக்[illegible] ஒரு பெருந் தனிச் சிறப்பிடம் உண்டு. தட[illegible]முக்கும் சமயத்திற்கும் சமுதாயத்திற்கும் ஆக[illegible] பல வேறு துறைகளில், அளப்பரும் தொண்[illegible]கள் ஆற்றியவர் அப்பெருந் தகையா[illegible] அவற்றினை விரிப்பிற் பெருகும், தொகு[illegible] எஞ்சும். அப்பெருமகனார் காட்டிச் [illegible] நெறியில், அவர் தம் அடிச்சுவட்டினைப் பற்றி, நாமும் தமிழும் சமயமும் தமிழ்[illegible]களும் வளர்த்து, நல்வாழ்வு வாழ மு[illegible] முயல்வோமாக !

மறைமலைஅடிகள், நாவலர் நாட்டார்
வண்புகழ்ப் பண்டித மணியார்
துறைகலை போய சுப்பிர மணியத்
தோன்றலார், ஞானியா ரடிகள்,
முறைபுகழ் அறிஞர் பாரதி யார், நன்
மூதறி ஞர்திரு. வி.க.
பிறபிற பெரியோர் புலமையும் தொண்
பெரிதுணர்ந் தவரடி பணிவோம் !

தனித்தமிழ் இயக்கத் தந்தை !
சைவசித் தாந்தச் சான்றோர் !
முனைத்தநற் கொள்கை வீரர் !
மும்மொழிப் புலமை வேந்தர் !
மனித்தருள் தெய்வம் போன்ற
மறைமலை அடிக ளார்தம்
எனைப்பல சிறப்பும் போற்றி,
இனிதவர் நெறிநின் றுய்வாம்!

—ந. ரா. முருகவேள்.

## செய்திச் சுருக்கம்

# மகாவித்துவான் நூற்றாண்டுவிழாக் கருத்தரங்கம்

திரிசிரபுரம் மகாவித்துவான் திரு. மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களின் நூற்றாண்டு விழாவைத் தழுவி, மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் நூல்நிலையத்தின் சார்பில், கருத்தரங்கு ஒன்று, மயிலை சீனிவாச சாஸ்திரி ஹாலில், 10.7.'76 சனிக்கிழமை மாலை, மிகவும் சிறப்புற நடைபெற்றது. ஆந்திரப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், இந்திய சாகித்திய அகாடமியின் துணைத் தலைவருமான பேராசிரியர் திரு. கே. ஆர். சீனிவாச ஐயங்கார் கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார்கள். மதுரைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், திரு. கி. வா. ஜகந்நாதன், திரு. அ. ச. ஞானசம்பந்தம், திரு. மு. அருணாசலம், ''திருக்கோயில்'' ஆசிரியர் திரு. புலவர் ந. ரா. முருகவேள் ஆகிய அறிஞர்கள் ஐவர், கருத்தரங்கில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார்கள். திரு. டி. வி. விசுவநாத ஐயர் அவர்கள் வரவேற்புரையும், இராவ்சாகிப் திரு. நல். முருகேச முதலியார் அவர்கள் நன்றியுரையும் நவின்றார்கள்.

* * *

# இல்லங்களைப் பொலிவுறச் செய்யும் சிறந்த இல்லம் — காதி கிராப்ட்

கோடைக்கேற்ற கதர் பருத்தி வகைகள் கண்ணைக் கவரும் வண்ண வண்ணப்பட்டு தினுசுகள், தாகம் தணிக்க பதநீர், சுவை மிகுந்த தேன், அக்மார்க் செய்யப்பட்ட செக்கெண்ணெய், உடலுக்கு உறுதி அளிக்கும் பனைவெல்லம், மணமும், அழகும் பெருக்கும் குறிஞ்சி வாசனை சோப்பு, வெள்ளை வெளேர் சலவைக்குக் கோபுரம் சோப்பு, சிறந்த முறையில் செய்யப்பட்ட காலணிகள், தோல் பொருட்கள், வேலைப்பாடு மிக்க மண்பாண்டங்கள், இல்லத்தை அலங்கரிக்க எழில்மிகு மரச் சாமான்கள், பிரம்பு, மூங்கிலிலான பொருட்கள் மலிவு விலை தீப்பெட்டிகள், அழைப்பிதழ் அச்சிட கைக்காகிதங்கள்.

தமிழகமெங்கும் அமைந்துள்ள 180

**காதி கிராப்ட்** களிலும்

மலிவு விலையில் கிடைக்கும்.
வாங்கிப் பயன் பெறுவீர்!
கிராமக் கைவினைஞர்களை ஊக்குவிப்பீர்!




வெளியீடு: தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்


# பூம்புகார் கலைக்கூடம் காண வாரீர்!

- கல்லெல்லாம் கதை சொல்லும் சிலப்பதிகாரக் காட்சிகள்!
- புதையுண்ட பூம்புகார் புது வடிவம் பூண்டுள்ளது!
- சிந்தைக்கும் கண்ணுக்கும் தெவிட்டாத தமிழ் விருந்து!
- மனதைக் கவரும் மாதவியின் அழகுச் சிலை.

## இவற்றைக் காண பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடத்திற்கு வருகை தாரீர்!

பூம்புகார் கலைக்கூடம், சீர்காழியிலிருந்து 21 கிலோ மீட்டர் தொலைவிலும், மாயவரத்திலிருந்து 29 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது.

இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை, சென்னை-600009



நெடுங்கல் மன்றம்



எழுநிலை மாடம்


வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.